
கல்கி



KALKI ஜனவரி 6, 1952 4 அணா




LTS. 298-X30 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 11 இதழ் 23 | 1952 ஜனவரி 6 | கர ஆ மார்கழி 22

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. "ரஜுலா"

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

சென்னையிலிருந்து ஜனவரி 18-ம் தேதி யன்றும்
நாகப்பட்டினத்திலிருந்து ஜனவரி 19-ம் தேதி யன்றும்
மேற்கண்ட கப்பல் புறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி 18-ம் தேதி சென்னையிலிருந்து புறப்படவிருக்கும் S. S. ''ரஜுலா''விலிருந்து கீழ்க்கண்ட மாறுதலான கட்டணங்கள் அமுலுக்கு வரும்.

	சென்னையிலிருந்து		நாகப்பட்டினத்திலிருந்து	
	பினாங்கு	சிங்கப்பூர்	பினாங்கு	சிங்கப்பூர்
முதல் வகுப்பு	ரூ. 380/-	ரூ. 430/-	ரூ. 375/-	ரூ. 425/-
இரண்டாவது வகுப்பு 'A'	ரூ. 275/-	ரூ. 340/-	ரூ. 270/-	ரூ. 335/-
இரண்டாவது வகுப்பு 'B'	ரூ. 250/-	ரூ. 310/-	ரூ. 250/-	ரூ. 305/-
பெர்த் வசதியற்ற டிக்கெட் (சாப்பாட்டுடன்)	ரூ. 90/-	ரூ. 112/-	ரூ. 90/-	ரூ. 110/-
பெர்த் வசதியற்ற டிக்கெட் (சாப்பாடு இன்றி)	ரூ. 70/-	ரூ. 85/-	ரூ. 68/-	ரூ. 84/-

பெர்த் வசதியற்ற டிக்கெட்டுகளுக்கு குவாரண்டைன் மற்றும்
சுங்க வரிகளில் மாறுதல் இல்லை.

வழக்கம்போல் பினாங்கு சிங்கப்பூருக்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லப்படும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கிழ்த்திசையிலுள்ள இதர ஊர்களுக்குச் சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

•

இதர விவரங்களுக்குத் தயவு செய்து விண்ணப்பிக்கவும் :

பின்னி & கோ., (மதராஸ்) லிட்.
7, அரமனைக்கார தெரு
மதராஸ்.

மதுரா கம்பெனி லிமிடெட்
முதல் லைன் பீச் ரோட்
நாகப்பட்டினம்

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 23

சகோதரர்களே! சகோதரிகளே!

ஆங்கிலப் புது வருஷத்தின் ஆரம்பத்தில், தமிழ்நாடெங்கும் தேர்தல் திருவிழா தொடங்கி யிருக்கும் சமயத்தில், ''என் அன்பார்ந்த தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளே!'' என்று நம்மை ஆர்வத்துடன் அழைத்துப் பேசிய தீரர் சத்தியமூர்த்தியின் நினைவு நமக்கு வருகிறது. அவருக்கு முன்னால் இச் செந்தமிழ் நாட்டில் வாழ்ந்து தாய் நாட்டின் தொண்டில் உயிர் துறந்த திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் முதலிய தேச பக்த வீரர்களின் நினைவு வருகிறது. இன்னும் பாரத நாட்டின் சுதந்திரப் போரில் ஈடுபட்டு எல்லையற்ற துன்பங்களை அநுபவித்து இணையிலாத தியாகங்களைச் செய்த தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், லாலா லஜபதிராய், தேசபந்து தாஸ் முதலியோர்களின் ஞாபகம் வருகிறது. நமது வாழ்நாளில் இப் புண்ணிய பூமிக்குச் சுதந்திரம் வாங்கித் தந்து அதைப் பாதுகாத்து நிலைநாட்டும் பொருட்டு இரத்தம் சிந்தி உயிர் துறந்த எந்தை காந்தி மகானின் நினைவும் வரத்தான் செய்கிறது.

அன்பார்ந்த தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளே! அவர்கள் எல்லாரும் இன்று வானுலகில் நின்று இந்த நாட்டுப் பொதுத் தேர்தல் சம்பந்தமாக நடந்துவரும் பேச்சுக்களைக் கேட்டார்களானால் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். ''நாம் எல்லாரும் இந்தப் பாரத பூமியின் விடுதலைக்காக இத்தனை பாடுபட்டோமே? எத்தனை நாள் பட்டினி கிடந்தோம்? எத்தனை காலம் சிறையில் இருந்தோம்? என்னென்ன கஷ்டங்களை அநுபவித்தோம்? துருப் பிடித்த ஓட்டைத் தகரத்தில் கூழை வாங்கிக் குடித்தோமே? சிறையிலே தந்த முழங் கை முழங் கால் சட்டையை அணிந்து வருஷக் கணக்கில் கழித்தோமே? அப்படியெல்லாம் நாம் பாடுபட்டு நாடு அடைந்த சுதந்திரத்தை இந்த மக்கள் 'ஆறு அவுன்ஸ் அரிசி போதாது' என்று சொல்லி விலை கூறி விற்று விடுவார்கள் போலிருக்கிறதே!'' என்று அதிசயப்படுவார்கள்; கண்ணீரும் வடிப்பார்கள்.

சகோதர சகோதரிகளே! உங்களுக்கும் நமக்கும் எத்தனையோ குறைகள் இருக்கத்தான் இருக்கின்றன. அந்தக் குறைகளை எண்ணி இந்தப் பொதுத் தேர்தலில் நம் வோட்டுக்களைக் காங்கிரஸ் பெட்டியில் போடாவிட்டால், தேசத்துக்குத் துரோகம் செய்தவர்களாவோம்; தேச சுதந்திரத்தை ஆறு அவுன்ஸ் அரிசிக்காகவோ நாலு முழம் துணிக்காகவோ விற்று விட்ட மகா பாதகத்தைச் செய்தவர்களாவோம்.

பழைய தேச பக்தர் பரம்பரையில் வந்த மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யர் அவர்கள் சொல்லுவதைக் கேளுங்கள். சென்னை சர்க்கார் மீதும் காங்கிரஸ் அதிகார வர்க்கத்தின் மீதும் ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்யருக்குப் பல குறைகள் உண்டு. தேர்தலுக்கு நிற்கும்படி சொன்னதற்கு மறுதளித்து விட்டார். அபேட்சகர் பொறுக்கி எடுக்கப்பட்ட முறையிலும் அவருக்குத் திருப்தி இல்லை. ஆயினும் அவர் என்ன சொல்கிறார்? ''இந்தப் பொதுத் தேர்தலில் காங்கிரஸுக்கு வோட்டுப் போடாவிட்டால் தேசத்தின் அரசாட்சி நிலை குலைந்து விடும். அராஜகமும் குழப்பமும் உண்டாகும். பெற்ற சுதந்திரம் பறி போய்விடும்! ஆகையினால் மனதில் நமக்கு எத்தனை குறைகள் இருந்தாலும் காங்கிரஸுக்குத் தான் வோட்டுப் போட வேண்டும்!'' என்று திட்ட வட்டமாகச் சொல்கிறார். உண்மையான தேச பக்தி உள்ளவர்களுக்கு அழகு இதுதான். சிறிய குறைகளை எண்ணிக்கொண்டு ஆபத்தான சமயத்தில் தேசத்துக்கு விரோதமான காரியம் செய்யக் கூடாது. அப்படிச் செய்வது ஜயசந்திரன் பரம்பரையில் வந்தவர்கள் செய்யக் கூடிய தேசத் துரோகச் செயலாக முடியும்.

''அப்படி என்ன தேசத்துக்கு இப்போது நெருக்கடி வந்து விட்டது? தேச சுதந்திரத்துக்கு என்ன ஆபத்து வந்து விட்டது?'' என்று கேட்பவர்கள் யாரேனும் இருந்தால், அவர்களுக்கு ஒரு விஷயத்தை ஞாபகப் படுத்துகிறோம்.

சில மாதங்களுக்கு முன்னால் ஸர் ஆச்சின் லெக் என்னும் மாஜி பிரிட்டிஷ் சேநாதிபதி பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருந்தார். ராவல்பிண்டி, பெஷாவர்

முதலிய இடங்களுக்குச் சென்று பாகிஸ்தான் சைன்யங்களைப் பார்வை யிட்டார். இச்செயலை இந்தியாவுடன் போர் தொடங்குவதற்கு முஸ்தீப்பு என்று சிலர் கருதினார்கள். உடனே ஜவாஹர்லால் நேரு ஓர் எச்சரிக்கை விடுத்தார். "பிரிட்டிஷ் மாஜி தளபதிக்கு ராவல்பிண்டியில் என்ன வேலை! இம்மாதிரி விஷமத்தை இந்தியா பொறுத்திராது!" என்றார். பிரிட்டிஷ் சர்க்கார் இதை மறுத்து உரைத்தார்கள். "ஸர் ஆச்சின் லெக் ராவல்பிண்டி-பெஷாவருக்கு காற்று வாங்கப் போனார்!" என்றார்கள். "ஐயா! ராவல்பிண்டியிலும் பெஷாவரிலும் 120 டிகிரி வெப்பமாயிற்றே! அங்கே ஏன் காற்று வாங்கப் போனார்!" என்று கேட்டதற்கு, "அதனாலேதான் திரும்பி வந்து விட்டார்!" என்றார்கள். "தென்னை மரத்தில் புல்லுப் பிடுங்க ஏறினேன்" என்று சொன்னவனுடைய கதையேதான்.

ஏறக்குறைய அதே சமயத்தில் காலஞ்சென்ற லியாகத் அலிகான் முஷ்டியை மடக்கிக் காட்டிக் கொண்டு பாகிஸ்தானில் சுற்றுப் பிரயாணம் செய்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவருடைய ஸ்தானத்துக்கு இப்போது வந்திருக்கும் நைஜாமுடீன் அவர்களும் காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக மல் யுத்தக்காரனைப் போல் 'ஸவால்' விட்டுக் கொண்டிருக்கிறார்.

பாகிஸ்தான் தலைவர்களின் 'ஸவால்' பேச்சை நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அமெரிக்காவும் பிரிட்டனும் ருஷியாவும் காஷ்மீர்மீது கண் வைத்திருக்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. மேற்கூறிய மூவரும் அந்தக் கேந்திர ஸ்தானத்தில் தங்கள் ஆதிக்கம் வேண்டும் என்று கோருகின்றனர். ஆகையினாலேதான் காஷ்மீர் பிரச்னை தீராமல் நீண்டு கொண்டே போகிறது.

ஒரு தேசம் சுதந்திரம் அடைந்து விட்டால் மட்டும் போதாது. பெற்ற சுதந்திரத்தை அஜாக்கிரதையினால் அதி சீக்கிரத்தில் இழந்துவிட்ட தேசங்கள் எத்தனையோ உண்டு. நம் இந்தியா தேசம் இப்போது கடற்படை, ஆகாசப் படைகளில் பலம் பெற்றிருப்பதாகச் சொல்லமுடியாது. எதிரிகள் நம்மைச் சூழ்ந்திருக்கிறார்கள். நாட்டுக்குள்ளேயே ராஜ்யங்கள் இழந்த சுதேசமன்னர்கள் எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேசத்தில் ஸ்திரமான அரசாங்கம் இல்லாமற் போகவேண்டியதுதான்; நாலாபுறமிருந்தும் வேட்டை நாய்கள் சுதந்திர இந்தியாவின் மேல் பாயத் தொடங்கிவிடும்.

தற்போது இந்தியாவில் ஸ்திரமான அரசாங்கத்தை நடத்தக்கூடிய ஸ்தாபனமோ, கட்சியோ காங்கிரஸைத் தவிர வேறொன்றுமில்லை. காங்கிரஸ் தோல்வியடைந்தால் அராஜகமும் குழப்பமும் பரவி நாடு பாழாவது நிச்சயம். அந்நிலையில் சுதந்திரம் எப்படி நிலைநிற்க முடியும்! ஆகையினால்தான் "எத்தனை குறைகள் இருந்தாலும் இந்தத் தேர்தலில் காங்கிரஸுக்கே வோட்டுக் கொடுக்க வேண்டும்" என்று மதுரை ஏ. வைத்தியநாதய்யர் கூறுகிறார். தேசபக்தியும் தீர்க்கபுத்தியும் உள்ள ஒவ்வொருவரும் அவ்வாறுதான் கூறுவார்கள்.

'குறை' 'குறை' என்று சொல்கிறோமே! உண்மைதான். குறைகள் இருக்கவே செய்கின்றன. எல்லாருக்கும் குறைகள் இருக்கின்றன.

பொது மக்களுக்கு நம் வியாபாரிகள் மீது குறை யிருக்கிறது. வியாபாரிகள் சாமான்களைப் பதுக்கி வைக்கிறார்கள் என்றும் கள்ளமார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்றும் பொதுமக்கள் குறை சொல்லுகிறார்கள்.

வியாபாரிகள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் மீது குறை சொல்லுகிறார்கள். "கண்ட்ரோல் விதிகளை வைத்துக் கொண்டு எங்களைச் சர்க்கார் அதிகாரிகள் பாடாய்ப் படுத்தி வைக்கிறார்கள்!" என்று வர்த்தகர்கள் மூக்கால் அழுகிறார்கள்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களோ, "விவசாயிகள் தானியத்தைப் பதுக்குகிறார்கள்" என்றும், "வியாபாரிகள் கள்ளமார்க்கெட் செய்து பொய்க் கணக்கு எழுதுகிறார்கள்" என்றும், "பொது ஜனங்கள் இந்த ஊழல்களுக் கெல்லாம் உடந்தையா யிருக்கிறார்கள்" என்றும் குறைப்படுகிறார்கள். இவ்வளவுடன் "மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் எங்கள் வேலைகளில் தலையிட்டுக் குட்டிச்சுவர் பண்ணுகிறார்கள்!" என்றும் புகார் கூறுகிறார்கள்.

மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் மற்ற எல்லார் மீதும் குறைப்படுகிறார்கள். "நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான் வேலை பார்க்கிறோம். உத்தியோகஸ்தர்களுக்குப் பொறுப் புணர்ச்சி இல்லை. பொது ஜனங்களின் ஒத்துழைப்பு இல்லை" என்று கூறுகிறார்கள்.

இவ்வளவு குறைகளும், புகார்களும், ஊழல்களும் எதில் வேர் கொண்டிருக்கின்றன என்கிற அடிப்படையான காரணத்தைச் சிறிது கவனிக்க வேண்டும்.

எல்லாம், உணவுப் பற்றாக்குறை ஒன்றை அடிப்படையாகக் கொண்டதுதான்.

இந்தியாவில் விளையும் தானியம் இந்தியாவுக்குப் போதாதபடியால் கண்ட்ரோலும் ரேஷனும் அவசியமாகிறது. வெளிநாடுகளிலிருந்து தானியம் தருவிக்கவேண்டி யிருக்கிறது. அதற்காக வேறு பொருள்களை ஏற்றுமதி செய்யவேண்டி யிருக்கிறது. ஆகவே எல்லாப் பொருள்களின் மீதும் ஏற்றுமதி இறக்குமதி கண்ட்ரோல் செய்ய வேண்டி வருகிறது.

உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் அல்ல.

பாகிஸ்தான் பர்மா பிரிவினைகளின் காரணமாகவே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது.


அந்தப் பற்றாக்குறையைத் தற்காலிகமாகத் தீர்ப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து காங்கிரஸ் சர்க்கார் தானியம் தருவித்து வருகிறார்கள்..

இதன் காரணமாக வேறு பொருள்களிலும் பற்றாக்குறை ஏற்படுகிறது.

உதாரணமாக, நமது நாட்டிற்கு வேண்டிய துணிகள் முழுதும் நம் நாட்டிலேயே இப்போது உற்பத்தியாகி வருகின்றன. ஆனால் வெளிநாட்டிலிருந்துவரும் தானியத்துக்குப் பதிலாக ஏதேனும் நாம் ஏற்றுமதி செய்தாக வேண்டுமல்லவா! அதில் ஒரு பகுதியாகத் துணி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் சிலசமயம் துணிக் கிராக்கி ஏற்படுகிறது. துணி ஏற்றுமதியை நிறுத்தினால் ஜவுளிக் கடைகளில் துணி தங்கிப்போய்ச் சிரிப்பாய்ச் சிரிப்பதையும் பார்க்கிறோம்.

ஆகவே, எல்லாக் குறைகளுக்கும் அடிப்படைக் காரணமாயிருப்பது உணவுப் பற்றாக்குறையாகும். இதை சிரந்தரமாய்த் தீர்த்து வைப்பதற்கென்று காங்கிரஸ் தலைவர்கள் திட்டம் வகுத்திருக்கிறார்கள். பல நதிகளில் தண்ணீர் வீண்போகாமல் தடுத்து நீர்ப்பாசனத்துக்கு உபயோகப் படுத்த அணைக்கட்டுத் திட்டங்கள் போட்டு ஆரம்பமாகி நடந்து வருகின்றன. அவை சீக்கிரத்தில் பூர்த்தியாகிவிடும். ஆதலின் அடுத்த மூன்று வருஷத்திலோ நாலு வருஷத்திலோ ஐந்து வருஷத்திலோ உணவுப் பற்றாக்குறை தீர்ந்து விடுவது நிச்சயம்.

ஒரு முக்கியமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளலாம். நூறு மூட்டை அரிசி தேவையாயிருக்கும் இடத்தில் 99 மூட்டைகள்



பொதுத் தேர்தலில் பாரத நாடெங்கும் காங்கிரசுக்கே பெரும்பாலான ஸ்தானங்கள் கிடைத்து வருவதன் மூலம் இந்திய மகா ஜனங்களின் உண்மையான பிரதிநிதி ஸ்தாபனம் காங்கிரசே என்பது வெளியாகி வருகிறது.

மட்டும் இருந்தன வென்றால், பதுக்கல்கள், கள்ள மார்க்கெட்டுகள் முதலியவை நடைபெறும். கண்ட்ரோலும் ரேஷனும் அவசியமாகும். அவற்றைச் சேர்ந்த ஊழல்களும் ஓரளவு இருந்தே தீரும்.

ஆனால் நூறு மூட்டை அரிசி தேவையாயுள்ள இடத்தில் நூற்றொரு மூட்டை அரிசி கிடைத்து விட்டால் பற்றாக்குறை இல்லை; பதுக்கல் இல்லை; கள்ளமார்க்கெட் இல்லை; கண்ட்ரோல் ரேஷன் தேவையில்லை.

அவ்விதம் அடிப்படையில் வேலை செய்து அடியோடு எல்லாக் குறைகளையும் தீர்ப்பதற்குக் காங்கிரஸ் தலைவர்கள் திட்ட மிட்டிருக்கிறார்கள்.

அந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் அரசாங்கத்தினால்தான் நடத்தி வைக்க முடியும்.

மற்ற எந்தக் கட்சியினாலும் நடத்த முடியாது. எந்தச் சட்டசபைக்கும் பாதி ஸ்தானங்களுக்குக் கூட மற்றக் கட்சிகள் அபேட்சகர்களை நிறுத்தி வைக்கவில்லை. பின் எப்படி அக் கட்சியினர் அரசாங்கம் நடத்துவார்கள்! எப்படிப் பெரிய திட்டங்களைப் போட்டு நிறைவேற்றுவார்கள்!

காங்கிரஸ் பெருமித வெற்றி யடையாவிட்டால் மற்ற உதிரிக் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து சர்க்கார் அமைப்பதும், மறுநாள் பிரிந்து சர்க்கார் கலைவதுமாக இருக்கும். தேச முன்னேற்றத்துக்கான எந்தத் திட்டத்தையும் நடத்த முடியாது.

இதற்கு நடுவில் தேசத்தில் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டாக்கி, கொலை களவுகளைப் பெருக்கி, இரத்த வெள்ளம் ஓடச் செய்து, அன்னியநாட்டின் ஆதிக்யத்துக்கு இடம் செய்ய முயலும் கூட்டத்தார் தங்களுடைய திருவிளையாடல்களை நடத்திக் கொண்டிருப்பார்கள்.

அற்பமான சில்லறைக் குறைகளை மனதில் வைத்துக்கொண்டு அதற்காகத் தேசத்தை இத்தகைய படுகுழியில் ஆழ்த்தலாமா!

தமிழ்நாட்டுச் சகோதர சகோதரிகளே! நீங்கள் அறிவிலும் ஞானத்திலும் பண்பாட்டிலும் சிறந்தவர்கள் என்று இந்தியா தேசமெங்கும் பெயர் பெற்றவர்கள்.

வங்காளிகளைப்போல் உணர்ச்சி வசப்பட்டுப் படுகுழியில் விழ மாட்டீர்கள். ஆந்திரர்களைப் போல் சகோதரச் சண்டையில் சக்தியைச் செலவிடமாட்டீர்கள். பஞ்சாபிகளைப்போல் யோசனையற்ற முரட்டுத்தனத்தில் இறங்கிக் காரியத்தைக் கெடுக்க மாட்டீர்கள். மராட்டியர்களைப் போல் குறுகிய மாகாண அபிமானம் கொண்டவர்கள் நீங்கள் அல்ல.

ஆகையினாலேதான் தமிழ்நாட்டில் இதுகாறும் எத்தனையோ துவேஷப் பிரசாரங்கள் நடந்தும் பயனின்றிப் போயின. தேச நன்மைக்கு விரோதமான எந்த முயற்சிக்கும் இச் செந்தமிழ் நாட்டில் ஆதரவு கிட்டுவதில்லை.

இன்றைக்கு நேர்ந்திருக்கும் சோதனையிலும் அந்த நல்லபெயரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

மனித குல மாணிக்கமும் மகாத்மா காந்தியின் ஞானப்புதல்வருமான நேரு ஜீயின் தலைமையில் பரிபூரண நம்பிக்கை வைத்து உங்கள் வோட்டை இரட்டை மாட்டுச் சித்திரமுள்ள காங்கிரஸ் பெட்டியிலேயே போடுங்கள்.

நமது ஆயுள் காலத்தில் பாரத நாடு பூரண சுதந்திரம் பெற்றதைக் கண்ணால் காணக் கொடுத்து வைத்திருந்தோம்; நமது ஆயுள் காலத்திலேயே இந்தப் புண்ணிய பூமி சகல குறைகளும் தீர்ந்து சுபிட்சம் அடைவதையும் கண்ணால் பார்ப்போம்.

நாட்டுக்குச் சுதந்திரம் அளித்த காங்கிரஸ் ஸ்தாபனந்தான் சுபிட்சத்தையும் அளிக்கவல்லது. வேறு ஸ்தாபனம் கிடையாது.

ஆகையால் அன்பார்ந்த தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளே! காங்கிரஸ் மகா சபைக்கே உங்கள் வோட்டுகளைப் போடுங்கள்.

கிராமத்துக்கொரு புத்தகாலயம்

மனித உள்ளத்தை மூன்று வித ஆசைகள் கவர்கின்றன என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். அவற்றை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்றார்கள். (ஆடவர்கள் கூறியபடியால் 'பெண்ணாசை' என்ற சொற்றொடரைப் பிரயோகித்தார்கள்.) இந்த மூன்று வித ஆசைகளையும் வெல்வதற்கு எத்தனையோ உபாயங்களையும் கற்பனை செய்து கூறினார்கள்.

மேற்கூறிய மூவாசைகளையும் மிஞ்சிய நாலாவது ஆசை ஒன்று இருக்கிறது. அந்த நாலாவது ஆசை வந்து விட்டால் மற்ற மூன்று ஆசைகளும் மறந்து போய் விடும்; அல்லது அவற்றின் கூர்மை மழுங்கி விடும். அந்த நாலாவது ஆசையின் பெயர் தான் புத்தக ஆசை.

புத்தகம் படிப்பதில் ஆசை கொண்டவர்கள் பொன்னையும் பூமியையும் போகத்தையும் ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள்.

புத்தகப் பித்தர்கள், இந்த உலகில் தோன்று தொட்டுத் தோன்றிய மகான்கள் அறிவாளிகள் கலைஞர்கள் கவிஞர்கள் ஆகியவர்களுடன் அளவளாவும் பாக்கியத்தைப் பெறுகிறார்கள். இதைக் காட்டிலும் பெரிய பேறு இந்த வாழ்க்கையில் வேறு என்ன இருக்க முடியும்! ஆகையால் மற்ற எதுவும் இவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. வாழ்க்கையில் எந்தக் குறையும் இவர்களுக்குக் குறையாகத் தோன்றுவதில்லை.

தமிழ் நாட்டிலுள்ள இத்தகைய புத்தகப் பித்தர்களிலே தலைசிறந்த பித்தரான டாக்டர் ஆர் எம். அழகப்பச் செட்டியார் அவர்களின் தலைமையில் தமிழ்நாட்டுப் புத்தகாலய மகாநாடு சென்னை ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது.

டாக்டர் அழகப்பச் செட்டியார் தமது தலைமை உரையில் தாம் எத்தகைய புத்தகப் பித்தர் என்பதைத் தாமே வெளியிட்டிருக்கிறார்.

"சிலருக்குப் புத்தகத்தைக் கடன் வாங்கிப் படிக்கும் பழக்கம் உண்டு. ஆனால் நானோ புத்தகம் விலைக்கு வாங்கிப் படிக்க வேண்டும் என்பதற்காகவே பணம் கடன் வாங்குவது வழக்கம்!" என்று சொல்லியிருக்கிறார்.

"புத்தகப் பித்தர்களின் சக்கரவர்த்தி" என்று டாக்டர் அழகப்பச் செட்டியாருக்குப் பட்டம் அளிப்பது மிகையாகாதல்லவா!

* * *

ஆங்கிலத்தில் சாதாரணமாக எந்த நாவலைப் படித்தாலும், அதில் முக்கிய கதா பாத்திரத்தின் வீட்டில் உள்ள 'லைப்ரரி அறை'யைப் பற்றிய குறிப்பு இருக்கும். வேண்டாத விருந்தாளிகள் வருவதைப் பார்த்தால் வீட்டு எஜமான் லைப்ரரி அறைக்குள் சென்று புத்தகத்தில் ஆழ்ந்து விடுவார்! கதாநாயகி தவறிப் போய் லைப்ரரி அறைக்குள் பிரவேசிப்பாள்; அங்கே கதாநாயகனைப் பார்த்துக் கண்ணோடு கண் கலந்து காதல் வெள்ளத்தில் மூழ்குவாள்! துப்பறியும் கதைகளில் ஏதாவது ஒரு முக்கியமான தடையம் லைப்ரரி அறைக்குள் அகப்படும்!...இத்தகைய குறிப்புகளிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன! மேனாடுகளில் படித்தவர்கள், பண்பாடு உடையவர்களின் வீடுகளில் புத்தகசாலை அறை ஒரு முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது.

தமிழ்நாடு பண்பாடு பெரிதும் உடைய நாடு. ஆயினும் பண்பாடு உள்ள இல்லத்துக்கு அழகும் அலங்காரமும் புத்தக அறை அல்லது புத்தக அலமாரி என்னும் பழக்கம் நம்மிடையே இன்னும் பரவவில்லை. படித்த வகுப்பார் சிற்சிலரின் வீடுகளில் புத்தக அலமாரிகள் உண்டு. ஆனால் அவற்றில் ஆங்கிலப் புத்தகங்கள்தான் இருக்கும். "ஏன், ஐயா! தமிழின் மீது ஏன் தங்களுக்கு இத்தனை துவேஷம்!" என்று கேட்டால், "தமிழில் துவேஷம் இல்லை. ஆனால் அலமாரியில் அலங்காரமாக வைக்க அழகான தமிழ்ப் புத்தகங்கள் இல்லையே! தமிழில் உள்ள சில அருமையான நூல்களும் வெறும் கந்தல்களாக அல்லவா இருக்கின்றன!" என்று அவர்கள் பதில் சொல்வார்கள்.

இது நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் முற்றும் உண்மையாக இருந்தது. ஆனால் தற்சமயம் அவ்வாறு சொல்ல முடியாது. ராஜாஜி மண்டபத்தில் டிசம்பர் 25உ 26உகளில் நடைபெற்ற தமிழ்ப் புத்தகங்களின் காட்சியைப் பார்வையிட்டவர்கள் "தமிழிலும் நல்ல புத்தகங்கள் வெளியாகியிருக்கின்றன. விதவிதமான அட்டைகளுடனே அழகழகான தமிழ்ப் புத்தகங்கள் வெளியாகியிருக்கின்றன" என்று ஐயமறத் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஏறக்குறைய 1950 புத்தகங்கள் கண் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. எல்லாம் தற்சமயம் கிடைக்கக்கூடிய புத்தகங்கள். இவற்றில் நாவல்களும் கதைகளும் சுமார் 400க்கு உள்ளேதான். மற்றவை அறிவு நூல்கள், சமய நூல்கள், குழந்தைகளுக்கான நூல்கள் முதலியவை. இந்த நூல்களிலிருந்து அவரவர்களுடைய மனப் பண்புக்குத் தகுந்தபடி பொறுக்கி எடுத்து மூன்று, நான்கு அலமாரிகளை நிரப்பலாம்.

* * *

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது என்பதை எழுதும்போது பெரிய தொகையாகவே தோன்றுகிறது. ஆனால் இங்கிலாந்தில் சென்ற நூறு வருஷத்தில் வெளியாகியிருக்கும் புத்தகங்களின் தொகை என்ன தெரியுமா! ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம்! இவை பெரும்பாலும் இப்போதும் விலைக்குக் கிடைக்கும். ஒவ்வொன்றும் லட்சக் கணக்கான பிரதிகள் (சில புத்தகங்கள் கோடிக் கணக்கில்) செலவாகியிருக்கின்றன. அமெரிக்காவில் வெளியாகியிருக்கும் லட்சக் கணக்கான நூல்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், ஆங்கில பாஷையின் வளம் எவ்வளவென்று ஊகித்துக் கொள்ளலாம். இங்கிலாந்தில் ஓர் இடத்தில் புத்தகசாலைகளையே விற்கிறார்களாம்! புத்தகசாலைகளை வாங்கிக் கொள்ளவும் செய்கிறார்களாம்!

ஆகவே தமிழ் மொழியில் உள்ள இரண்டாயிரம் புத்தகங்களைப் பற்றி நாம் அதிகம் பெருமை கொள்வதற்கில்லை. "ஏன் ஐயா, இம்மாதிரி நல்ல புத்தகங்களை இன்னும் நிறைய வெளியிடுவது தானே!" என்று பிரசுரகர்த்தர்களைக் கேட்டால், "இந்தப் புத்தகங்களையே வாங்குவார் இல்லையே! கையிலுள்ள பணத்தைச் செலவழித்து வெளியிட்டுவிட்டுக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறோமே! இன்னும் எப்படிப் புதிய புத்தகங்கள் வெளியிடுவது!" என்று கேட்கிறார்கள்.

இது உண்மைதான். இங்கிலாந்தில் ஒரு நல்ல புத்தகம் வெளியானால் பத்து லட்சம்—இருபது லட்சம் பிரதிகள் வெளியாகின்றன. தமிழில் ஆயிரம் புத்தகங்கள் கூட விற்பனையாவதில்லை.

ஆகவே நிலைமை இதுதான்: தமிழ் நாட்டில் புத்தக மோகம் அதிகம் பரவினால் நல்ல புத்த

கங்கள் அதிகம் வெளியாகும்; மலிவான விலையிலும் வெளியாகும். ஆனால் புத்தக மோகம் அதிகமாகப் பரவுவதற்கு நல்ல புத்தகங்கள் ஏராளமாக வெளியாக வேண்டும்.

இப்படி, ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கிறது. ஒன்று முடிந்த பிறகு இன்னொன்று நடக்கும் என்று காத்திருந்தால் தமிழ் வளம் அடையாது. நல்ல புத்தகங்களைப் பிரசுரித்தல், புத்தகப் பிரியத்தை வளர்த்தல் ஆகிய இரண்டு காரியங்களும் ஏககாலத்தில் நடைபெற வேண்டும். இந்த இரண்டும் ஒரே சமயத்தில் நடைபெறுவதற்குப் புத்தகசாலை இயக்கம் தலைசிறந்த சாதனமாகும்.

• • •

புத்தக சாலை இயக்கத்தைத் தீவிரமாக நடத்துவதற்குத் தற்சமயம் பொருத்தமான சூழ் நிலையும் வேண்டிய சாதனங்களும் இருக்கின்றன.

ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயரைத் தலைவராகக் கொண்ட சென்னைப் புத்தகாலய சங்கத்தார் சென்ற இருபத்தைந்து வருஷங்களாகக் கிளர்ச்சி செய்து வந்ததின் பயனாகச் சென்னைச் சட்டசபையில் புத்தகாலயச் சட்டம் நிறைவேறியது. நிறைவேறி வருஷம் மூன்று ஆகிறது! இன்னும் அமுலுக்கு வரவில்லை. புத்தகாலய வரி வசூல் நடந்து வருகிறது. ஆனால் ஒரு புத்தக சாலைகூடப் புதிதாக ஏற்படவில்லை. பழைய புத்தக சாலைகளுக்கும் உதவி அளிக்கப்படவில்லை. சர்க்கார் இயந்திரங்களுக்கு இயற்கையாக உள்ள தாமதந்தான் முக்கிய காரணம். அந்த இயந்திரத்தைக் கொஞ்சம் இயக்கி விடலாமா என்று பார்ப்பதற்காகவே ராஜாஜி மண்டபத்தில் புத்தகாலய மகாநாடும் புத்தகக் கண்காட்சியும் நடைபெற்றன.

புத்தகாலய மகாநாட்டில் தலைவர் டாக்டர் அழகப்பச் செட்டியாரைத் தவிரப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். மாஜி நீதிபதி ஸ்ரீ வி. பாஷ்யமய்யங்கார், கனம் எம். பக்தவத்ஸலம், கனம் கே. சந்தானம், ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர், ஸ்ரீ ஸி. ஆர். சீனிவாசன், பேராசிரியர் சேதுப் பிள்ளை, ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார், டாக்டர் திரிமூர்த்தி, டாக்டர் வரதராஜன் முதலிய பொதுஜனத் தலைவர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டார்கள். வெளியூர்களிலிருந்து நூல் நிலையங்களின் பிரதிநிதிகள் பலரும் வந்திருந்தார்கள். புத்தகாலய இயக்கத்தின் அவசியத்தை ஒப்புக் கொள்ளாதவர்கள் யாரும் இல்லை. புத்தகசாலை மகாநாட்டின் நோக்கங்களையும் தீர்மானங்களையும் ஆதரித்துச் சென்னையில் உள்ள எல்லாப் பத்திரிகைகளும் எழுதியிருக்கின்றன. உண்மையில், பத்திரிகைகள் இவ்வளவு ஏகோபித்த அபிப்பிராயத்தை வேறு எந்த விஷயத்திலும் வெளியிட்டதில்லை என்று சொல்லலாம்.

• • •

புத்தகசாலை இயக்கத்தில் அரசாங்கம் ஊக்கம் கொண்டு நடத்தி வைக்க வேண்டியது பற்றியே மகா நாட்டின் முக்கிய தீர்மானங்கள் வற்புறுத்துகின்றன. அதற்குரிய காரணங்களையும் சாங்கோபாங்கமாகத் தீர்மானங்களிலேயே சொல்லியிருக்கிறது. தீர்மானங்களின் சாராம்சத்தை இங்கு நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

நாகரிகம் அடைந்த எந்த தேசத்திலும் பொது மக்கள் படிப்பறிவு பெற்றிருப்பது மிக அவசியம்.

அதிலும், சர்வஜன வாக்குரிமை பெற்றிருக்கும் பாரத நாட்டில் மிக மிக அவசியம்.

சென்னை சர்க்கார் இச் சமயம் ஆரம்பக் கல்விக்காக வருஷந்தோறும் செலவிடும் ஏழு கோடி ரூபாயில் பெரும் பகுதி வீணாகிறது. ஏனெனில் ஏழு பிள்ளைகளில் ஆறு பேர் படிப்பை ஆரம்பப் பள்ளிக்கூடத்திலேயே முடித்து விடுகிறார்கள். பிறகு படிப்பதற்கு வசதியில்லாமையால் எழுத்தறிவை மறந்து விடுகிறார்கள்.

கிராமத்துக்கு ஒரு புத்தகசாலை ஏற்படுத்துவதின் மூலம் மேற் சொன்ன பண விரயத்தைத் தடுக்கலாம்.

புத்தகசாலைகள் ஏற்படுத்துவதற்குச் சட்டமும் பிற வசதிகளும் இருக்கின்றன; புத்தகசாலைகள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய தமிழ்ப் புத்தகங்களும் ஓரளவு இருக்கின்றன.

ஆனால் சர்க்கார் இலாகாக்களின் வீண் தாமதத்தினாலும் அவசியமில்லாத கடுமையான நிபந்தனைகளைப் போட்டிருப்பதினாலும் சட்டம் அமுலுக்கு வராமல் தூங்கிக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷார் முற்காலத்தில் கல்வி அதிகம் பரவாமல் செய்வதற்காகப் புதிய பள்ளிக்கூடங்கள் ஆரம்பிப்பதற்குப் பல வேண்டாத நிபந்தனைகள் போட்டார்கள். அம்மாதிரி நிபந்தனைகளை இப்போது யோசனைக் குறைவினால் புத்தகாலயங்கள் ஏற்படுத்துவதற்குச் சர்க்கார் விதித்திருக்கிறார்கள்.

“புத்தகசாலை ஏற்படுத்தச் சொந்தக் கட்டிடம் வேண்டும்; ஐயாயிரம் ரூபாய் மூலதனம் வேண்டும்; அப்படியானால் நாங்கள் உதவி செய்வோம்” என்று விதிகள் செய்திருக்கிறார்கள்.

இத்தகைய அநாவசிய நிபந்தனைகளை நீக்கி விட வேண்டும். தமிழ்நாட்டில் தற்சமயம் நடந்து வரும் சுமார் ஆயிரம் புத்தகசாலைகளுக்கு உடனே தக்க உதவி செய்து பலப்படுத்த வேண்டும்.

குறைந்த பட்சம் தமிழ் நாட்டில் பத்தாயிரம் புத்தகாலயங்கள் ஏற்படுவதற்கு உடனே திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டும்.

கிராமத்துக்கு ஒரு புத்தகாலயம், பட்டணங்களில் பேட்டைக்கு ஒரு புத்தகாலயம், ஒவ்வொரு புத்தகாலயத்திலும் குறைந்த பட்சம் பத்தாயிரம் தமிழ்ப் புத்தகங்கள்,—இந்த இலட்சியத்தைக் கூடிய விரைவில் நிறைவேற்ற வேண்டும்.

விஞ்ஞானம் பொருளாதாரம் முதலிய துறைகளில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கான தமிழ் நூல்களைச் சர்க்காரே மொத்தமாக வாங்கிப் புத்தகசாலைகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

மடாதிபதிகளும் தேவஸ்தானங்களும் இந்த இயக்கத்தில் பங்கு பெற வேண்டும். ஒவ்வொரு மடாதிபதியும் பல புத்தகசாலைகளை ஏற்படுத்தலாம். ஒவ்வொரு தேவஸ்தானத்திலும் குறைந்தது ஒரு புத்தகசாலை இருக்கலாம்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள் காரைக்குடிக்குச் சுற்றுப் புறத்தில் பத்து கிராம புத்தகசாலைகளைக் கூடிய விரைவில் ஆரம்பித்து நடத்தப் போவதாகத் தமது முடிவுரையில் கூறினர். இதைக் கேட்ட பிரதிநிதிகள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். மகாநாடு கூட்டியதற்குப் பலன் இந்த அளவில் நிச்சயமாகக் கிடைத்தது என்று மகாநாட்டின் நிர்வாகிகள் பூரித்தார்கள்.

டாக்டர் அழகப்பச் செட்டியாரைப் போல் மற்றும் பல தனவந்தர்கள் முன் வந்து புத்தகாலய இயக்கத்தை வளர்க்கலாம். தமிழ் வளம் பெறவும் தமிழ்நாடு மேன்மையடையவும் இதைக் காட்டிலும் சிறந்த வேறொரு பொதுநலத் தொண்டு இருக்க முடியும் என்று தோன்றவில்லை.



அத்தியாயம் 53

அபய கீதம்

இளவரசர் அருள்மொழி வர்மர் பார்த்திபேந்திரனுடைய கப்பலுக்குப் போய்ச் சேரும் வரையில், தொண்டைமான் நதியின் முகத்துவாரத்தில் நின்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கப்பலில் இளவரசர் ஏறிக்கொண்ட உடனே அவரை ஏற்றிச் சென்ற படகு திரும்பியது.

சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி குதூகலம் அடைந்திருந்தார் என்று அவருடைய முகக் குறி காட்டியது.

"ஆண்டவன் நம் கட்சியில் இருக்கிறார்; சந்தேகமில்லை. இளவரசரின் திருமேனியில் உள்ள சங்கு சக்கர சின்னங்கள் பழுதாகப் போய் விடுமா? பார்த்திபேந்திரன் அவரைப் பத்திரமாகக் காஞ்சி கொண்டு போய்ச் சேர்த்து விடுவான். நாமும் நம் படைகளுடன் தஞ்சையை நோக்கிப் புறப்பட வேண்டியது தான்!" என்று தமக்குத் தாமே சொல்லுகிறவர்போல் கொடும்பாளூர் வேளார் உரத்துச் சொல்லிக் கொண்டார்.

உடனே பக்கத்தில் நின்ற ஆழ்வார்க்கடியானைப் பார்த்தார்.

"வைஷ்ணவனே! நீ இங்கு நிற்கிறாயா? அதனால் பாதகம் இல்லை. முதன் மந்திரியின் அந்தரங்க ஒற்றனுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? சரி, நீ என்ன செய்யப் போகிறாய்? மாதோட்டத்துக்கு என்னுடன் வரப்போகிறாயா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! முதன் மந்திரி எனக்கு இட்ட இன்னும் ஒரு வேலை நான் செய்யவேண்டியிருக்கிறது......"

"அது என்ன, அப்பா?"

ஆழ்வார்க்கடியான் சற்றுத் தூரத்தில் ஊமை ராணியும் பூங்குழலியும் நின்ற இடத்தை நோக்கினான்.

"அந்தப் பெண்களைப் பற்றிய விஷயமா?" என்றார் சேனாதிபதி.

"அவர்களில் ஒருவரைப் பற்றியது தான். இலங்கையில் இத்தகைய ஊமை ஸ்திரீ ஒருத்தியைப் பார்க்க நேர்ந்தால் அவளை எப்படியாவது தஞ்சாவூருக்கு



அழைத்து வரும்படி முதன் மந்திரி கட்டளையிட்டிருக்கிறார்."

"நல்ல வேலை உனக்குக் கொடுத்தார். அதைக் காட்டிலும் இலங்கைக் கடல்களில் அடிக்கும் புயற் காற்றுகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு வரும்படி உனக்குச் சொல்லியிருக்கலாம். அந்த ஊமை ஸ்திரீயைப் பிடித்துக் கொண்டு போவது அவ்வளவு சுலபமாயிருக்கும். அவள் யாரோ தெரியவில்லை. நம் இளவரசரிடம் மிக்க அபிமானம் வைத்திருக்கிறாள். உனக்கு ஏதாவது அவளைப் பற்றித் தெரியுமா?"

"அவள் ஊமை என்பதும் பிறவிச் செவிடு என்பதும் தெரியும். அவளை அழைத்துச் செல்வதைக் காட்டிலும் புயற் காற்றைக் கூண்டில் அடைத்துக் கொண்டு போவது சுலபம் என்றும் தெரியும். ஆயினும் என் எஜமானர் சொல்லியிருக்கிற படியால் ஒரு பிரயத்தனம் செய்து பார்ப்பேன்."

"இந்த ஓடக்காரப் பெண்ணுக்கும் அவளுக்கும் கூட சிநேகம் போலிருக்கிறது. இரண்டு பேரும் ஜாடைகளினால் பேசிக் கொள்வதைப் பார்! அந்தப் பெண்ணை இங்கே கூப்பிடு! அவளுக்கு ஓர் எச்சரிக்கை செய்ய வேண்டும்!......"

ஆழ்வார்க்கடியான் அந்தப் பெண்களின் அருகில் சென்று பூங்குழலியிடம் சேநாதிபதி அழைப்பதைக் கூறினான். பூங்குழலி ஊமை ராணியை விட்டுப் பிரிந்து சேநாதிபதியை அணுகினாள்.

"இதோ பார், பெண்ணே! நீ வெகு புத்திசாலி! நல்ல சமயத்தில் வந்து முக்கியமான செய்தி சொன்னாய். சோழ குலத்துக்குப் பெரிய உதவி செய்தாய். இதை நான் என்றும் மறக்கமாட்டேன். தக்க சமயத்தில் தகுந்த பரிசில் கொடுப்பேன்!" என்றார்.

பூங்குழலி "வந்தனம், ஐயா! எனக்குப் பரிசில் எதுவும் தேவையில்லை" என்று பணிவுடன் சொன்னாள்.

"தேவையில்லை என்றால் யார் விடுகிறார்கள்? இந்தக் குழப்பமெல்லாம் கொஞ்சம் அடங்கட்டும். பிறகு, பிறகு... சோழ நாட்டுச் சைன்யத்தில் வீராதி வீரனைப் பார்த்து உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன். உனக்கு வாய்க்கின்ற கணவன் அற்பசொற்பமானவனாய் இருந்தால் போதாது. பீமசேனனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனைக் கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டி வைத்து விடமாட்டாயா?" என்று சேநாதிபதி கூறிப் புன்னகை புரிந்தார்.

பூங்குழலி தரையைப் பார்த்தபடி நின்றாள். அவள் உள்ளத்தில் கோபம் பொங்கியது. ஆனால் அதை அச்சமயம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. இந்த முரட்டுக் கிழவரிடம் சண்டை பிடிப்பதில் பயன் என்ன? கோபத்தை அடக்கிக் கொள்ள முயன்றாள்.

"ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்! இளவரசருக்கு ஏதோ உதவி செய்து விட்ட படியால், அவர் பேரில் பாத்தியதை கொண்டாடலாம் என்று எண்ணாதே! கடலில் வலை போட்டு மீன் பிடிப்பதோடு நிறுத்திக் கொள்! இளவரசரை வலை

போட்டுப் பிடிக்கலாம் என்று ஆசைப் படாதே! ஜாக்கிரதை, பெண்ணே! இனி அவர் அருகில் நெருங்கினாலும் உனக்கு ஆபத்து வரும்!" என்றார் சோதிபதி. அவருடைய குரல் அப்போது மிகக் கடுமையாக இருந்தது. அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் காய்ச்சிய ஈயத் துளியை விடுவதுபோல் பூங்குழலியின் காதில் விழுந்தது.

அந்தக் கிழவனுக்குப் பதிலுக்குப் பதில் காரசாரமான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்று பூங்குழலி விரும்பினாள். ஆனால் பேச இயலவில்லை. தொண்டையை அடைத்தது. காதில் விழுந்த காய்ச்சிய ஈயத் துளிகள் கண் வழியாக வெளி வந்தனபோல் வெப்பமான கண்ணீர்த் துளிகள் தோன்றிக் கண்களை எரியச் செய்தன.

குனிந்த தலை நிமிராமல் பூங்குழலி திரும்பினாள். கடற்கரைக்கு எதிர்ப் பக்கம் நோக்கி நடந்தாள். நடை மெதுவாக ஆரம்பமாயிற்று. வர வர வேகம் அதிகரித்தது. ஊமை ராணி இருந்த திசையை ஒரு கணம் கடைக்கண்ணால் பார்த்தாள். அவள் அருகில் ஆழ்வார்க்கடியான் நின்று ஏதோ அவளிடம் தெரிவிக்க முயன்று கொண்டிருப்பதைக் கண்டாள். மனிதர்கள் உள்ள இடத்திலேயே தான் இருக்கக் கூடாது என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது. மனிதக் குரலையே கேட்கப் பிடிக்கவில்லை. ஆ! மனிதர்கள் எத்தனை கொடூரமானவர்கள்? எதற்காக இவ்வளவு குரூரமான சொற்களைப் பேசுகிறார்கள்! எல்லாரும் ஊமைகளாகவே இருந்து விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

சிறிது தூரம் காட்டில் புகுந்து சென்ற பிறகு தொண்டைமானாற்றின் கரையை அடைந்தாள். அந்தக் கரையோடு உள்நாட்டை நோக்கி நடந்தாள். அவளுடைய படகை விட்டிருந்த இடத்தைக் குறி வைத்து நடந்தாள். ஆம்; சீக்கிரம் அந்தப் படகைப் போய்ச் சேரவேண்டும். படகில் ஏறிக் கொள்ள வேண்டும். தன்னந்தனியாகக் கடலில் செல்ல வேண்டும். மனிதர்களுடைய குரல் காதில் விழ முடியாத நடுக் கடலுக்கே போய் விட வேண்டும். துடுப்பைச் சும்மா வைத்து விடவேண்டும். அலைகளில் மொத்துண்டு படகு மிதந்து மிதந்து போக வேண்டும். தானும் அதில் போய்க் கொண்டிருக்க வேண்டும். எல்லையில்லாத கடலில் முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் அலைபட்ட தன் உள்ளம் அமைதி பெறும். சோதிபதியின் வார்த்தைகளினால் நொந்த உள்ளத்தின் வேதனை தீரும். ஆத்திரம் தணிந்து ஆறுதல் உண்டாகும். அந்தப் பொல்லாத கிழவன் என்ன சொன்னான்! "வலை போட்டுக் கடலில் மீன் பிடிப்பதோடு நிறுத்திக் கொள்! இளவரசருக்கு வலை போடாதே!" என்றான். நானா இளவரசருக்கு வலை போடுகிறேன்! சீச்சீ! அந்தக் கிழவனின் புத்தி போன போக்கைப் பார்!...ஆம்; தரையில் வாழும் மனிதர்களைக் காட்டிலும் கடலில் வாழும் மீன்கள் எவ்வளவோ நல்ல ஜந்துக்கள். அவை இப்படியெல்லாம் கொடூரமாகப் பேசுவதில்லை. ஆழ் கடலில் நீந்தியும் மிதந்தும் எவ்வளவு ஆனந்தமாகக் காலங் கழிக்கின்றன! அவற்றுக்குக் கவலை ஏது? துயரம் ஏது? ஆகா! நான் கடலில் வாழும் மீனாகப் பிறந்திருக்கக் கூடாதா? நானும் மீனாகப் பிறந்து, இளவரசரும் மீனாகப் பிறந்திருக்கக் கூடாதா? அப்படிப் பிறந்திருந்தால், இந்த உலகத்தின் துயரங்கள், துவேஷங்கள், ஆசாபாசங்கள், கோபதாபங்கள், — இவற்றில் அகப்பட்டுக் கொள்ளாமல் சதா சர்வ காலமும் ஆழ் கடலில் நீந்தி நீந்திப் போய்க் கொண்டிருக்கலாம் அல்லவா? அப்போது தன்னையும் இளவரசரையும் பிரிப்பதற்கோ, வஞ்சகம் செய்வதற்கோ, விஷமமாகப் பேசுவதற்கோ யாரும் இருக்க மாட்டார்கள் அல்லவா?...... இல்லை, இல்லை! அதுவும் நிச்சயமில்லை. அங்கேயும் இந்தப் பொல்லாத மனிதர்கள் வந்து வலை போட்டுப் பிடித்துக் கொண்டு போகப் பார்ப்பார்கள்! இரண்டு மீன்களில் ஒன்றை மட்டும் கொண்டு போனாலும் போவார்கள்! பாதகர்கள்!......

பூங்குழலியின் மனதில் பொங்கிய ஆத்திரம் அவளுடைய கால்களுக்கு அளவில்லாத விரைவைக் கொடுத்தது. சூரியன் உச்சி வானுக்கு வந்த சமயம் அவள் படகை விட்டிருந்த இடத்தை அடைந்து விட்டாள். நல்ல வேளை; படகு விட்டிருந்த இடத்தில் கட்டிப் போட்டபடியே இருந்தது. அவளுடைய ஆருயிர்த் தோழி அந்தப் படகுதான். அவளுடைய அடைக்கல ஸ்தானம் அந்தப் படகுதான். துன்பமும் துரோகமும் சூழ்ந்த இந்தப் பொல்லாத உலகத்தில் தனக்கு அமைதியும் ஆனந்தமும் அளிப்பது அந்தச் சாண் அகலத்துப் படகுதான். அதை யாரும் அடித்துக்கொண்டு போகாமல் விட்டு வைத்தது பெரிய காரியம்.

இனி எது எப்படியாவது போகட்டும். இளவரசரை அந்தக் கிழச்சேநாதிபதியே காவல் புரியட்டும். கொடும்பாளூர் வீட்டுப் பெண்ணையே அவர் கழுத்தில் கட்டி விடட்டும். அதனால் எனக்கு என்ன? என் படகு இருக்கிறது; துடுப்பு இருக்கிறது; கையில் வலிவு இருக்கிறது; விசாலமான கடலும் இருக்கிறது. சமுத்திரராஜனே! உன் அருமைப் புதல்வியை வேறு யார் கைவிட்டாலும் நீ கைவிட மாட்டாய் அல்லவா? "சமுத்திரகுமாரி" என்று இளவரசர் திருவாயினால் கூறியதைப் பொய்யாக்க மாட்டாய் அல்லவா?

பூங்குழலி படகில் ஏறிக்கொண்டாள். கடலை நோக்கிப் படகைச் செலுத்தினாள். நதியின் ஓட்டத்தோடு சென்றபடியால் சீக்கிரத்திலேயே தொண்டைமானாற்றின் முகத்துவாரத்தை அடைந்து விட்டாள். பின்னர் கடலில் படகைச் செலுத்தினாள். சிறிது நேரத்துக்கெல்லாம் சுழிக்காற்று அடிக்கப் போகிறது என்று அவளுக்குத் தெரிந்து போயிற்று. சுழிக் காற்றின் முன் அறிகுறிகளை அவள் நன்கு அறிந்திருந்தாள். முதல் நாள் இரவு சந்திரனைச் சுற்றிச் சாம்பல் நிற வட்டம் காணப்பட்டது. இன்றைக்குப் பகலெல்லாம் ஓரே புழுக்கமாயிருந்தது. மரங்களில் இலை அசையவில்லை. அதோ தென்மேற்கு மூலையில் கரிய மேகத் திட்டுக்கள் கிளம்பி விட்டன. சீக்கிரத்தில் சுழிக் காற்று அடிக்கப் போவது நிச்சயம். கடலின் கொந்தளிப்பு அற்புதக் காட்சியாயிருக்கும். ஆனால் சுழிக் காற்று அடிக்கும்போது கடலில் அகப்பட்டுக்கொள்ளக் கூடாது. பூதத் தீவுக்குப் போய்த் தங்கியிருப்பது நல்லது. அங்கே தங்கியிருந்தால் சுழிக் காற்றினால் கடலிலே உண்டாகும் அல்லோல கல்லோலத்தை நன்றாய்ப் பார்த்துக் களிக்கலாம். காற்று அடித்து விட்டுப் போன பிறகு, கடலிலும் கொந்தளிப்புச் சிறிது அடங்கிய பிறகு, படகைக் கடலில் செலுத்திக்கொண்டு கோடிக் கரைக்குப் போகலாம். இப்போது என்ன அவசரம்? கோடிக் கரைக்கு இப்போது அந்த மரக்கலம் அநேகமாகப் போயிருக்கும். நல்ல வேளை! சுழிக் காற்றில் அது அகப்பட்டுக் கொண்டிராது. இளவரசர் இத்தனை நேரம் பத்திரமாகப் போய் அங்கே இறங்கியிருப்பார். அல்லது ஒருவேளை மாமல்லபுரத்துக்கே போயிருந்தாலும் போயிருப்பார். எங்கே போயிருந்தால் நமக்கு என்ன? சுழிக்காற்றில் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டார்; அந்த வரைக்கும் திருப்தி அடையலாம்.

சுழிக் காற்றுத் தொடங்குவதற்கு முன்னால் அடியோடு காற்று நின்று போயிருந்தபடியால் மரக்கலங்கள் பாய் விரித்திருந்தும் கடலில் போக முடியவில்லை என்பது பூங்குழலிக்குத் தெரியாது. ஆகையால் இத்தனை நேரம் அக்கரை போய்ச் சேர்ந்திருக்கும் என்றே நினைத்தாள். சேநாதிபதி "இளவரசருக்கு வலை போடாதே!" என்று சொன்னது அடிக்கடி அவளுடைய மனதில் தோன்றித் துன்புறுத்திக் கொண்டிருந்தது. ஆகையால், கோடிக் கரைக்குத் தானும் உடனே போக வேண்டாம் என்று எண்ணினாள். பூதத் தீவிலே தங்கியிருந்து, சுழிக் காற்றின் அட்டகாசங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பிறகு சாவகாசமாகப் புறப்படத் தீர்மானித்தாள்.

தொண்டைமானாற்றின் முகத்துவாரத்திலிருந்து பூதத்தீவு அதிக தூரத்தில் இல்லை. ஆகையால் புறப்பட்ட ஒரு நாழிகை நேரத்துக்குள் அங்கே போய்ச் சேர்ந்து விட்டாள்.

பூங்குழலி பூதத்தீவைச் சேர்ந்ததற்கும் சுழிக்காற்று அடிக்கத் தொடங்கியதற்கும் சரியாயிருந்தது.

படகைக் கரையில் ஏற்றிக் குப்புறக் கவிழ்த்துப் பத்திரமாய்க் கட்டிப் போட்டு விட்டுப் பூங்குழலி அத்தீவில் இருந்த ஒரு சிறிய புத்த ஸ்தூபத்தை அடைந்தாள். முதலில் சற்று நேரம் அதன் அடிவாரத்துக் குகை அறையில் காற்றிலும் மழையிலும் அடிபடாதிருந்து பார்த்தாள். அதிக நேரம் அவளால் அப்படி இருக்க முடியவில்லை. வாயுபகவானின் கோலாகலத் திருவிளையாடல்களைப் பார்க்கும் ஆசை உண்டாயிற்று. குகையிலிருந்து வெளிவந்து படிக்கட்டில் ஏறி ஸ்தூபத்தின் உச்சியை அடைந்தாள். அப்போது சுற்றுப் புறத்துச் சூழ்நிலை அவள் உள்ளத்தின் நிலைக்கு ஒத்ததாக இருந்தது. பூதத்தீவில் ஓங்கி வளர்ந்திருந்த நூற்றுக் கணக்கான தென்னை மரங்கள் தலைவிரிகோலமாக ஊழிக்காலத்தில் சம்ஹார மூர்த்தியைச் சுற்றி நின்று பூதகணங்கள் ஆடுவது போல் ஆடின. கடல் அலைகள் அத்தென்னை மரங்களின் உயரம் சில சமயம் எழும்பி இமய மலையின் பனிச் சிகரங்களைப்போல் ஒரு விநாடி காட்சி அளித்து மறு விநாடி நூறு கோடி நுரைத் துளி



களாகச் சிதறி விழுந்தன. சுழன்று சுழன்று அடித்த காற்றின் சத்தமும் அக் காற்றில் சுழன்று ஆடிய மரக்கிளைகளின் சத்தமும் அலைகளின் பேரொலியும் இடையிடையே கேட்ட இடி முழக்கமும் சேர்ந்து திக்குத் திகாந்தங்கள் எல்லாம் இடிந்து தகர்ந்து விழுகின்றன என்று எண்ணச் செய்தன. வானத்தை வெட்டிப் பிளப்பது போல் அவ்வப்போது தோன்றிக் கப்பும் கிளையும் விட்டுப் படர்ந்து ஓடி மறைந்த மின்னல்கள் ஒரு விநாடி நேரம் கொந்தளித்த அலைகடலையும், பேயாட்டம் ஆடிய மரங்களையும், வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டு மறு விநாடி கன்னங்கரிய காரிருளில் ஆழச் செய்தன.

இவ்வளவு அல்லோல கல்லோலங்களையும் பார்த்துக் கொண்டு பூங்குழலி வெகு நேரம் நின்றாள். அவள் உடம்பு காற்றில் ஆடிய மரங்களைப்போல் ஆடியது. அவள் கூந்தல் அவிழ்ந்து காற்றில் பறந்தது. மழை அவள் உடலை நனைத்





தது. இடி முழக்கம் அவள் செவிகளைப் பிளந்தது. மின்வெட்டு அவள் கண்களைப் பறித்தது. இதையெல்லாம் அவள் பொருட்படுத்தவேயில்லை. வெகு நேரம் அக்காற்றிலும் மழையிலும் அவள் நின்றாள். அவள் உள்ளம் வெறி கொண்டு கொந்தளித்தது. தன்னைச் சுற்றிலும் நடைபெறும் அற்புத கோலாகலமெல்லாம் தான் பார்த்துக் களிப்பதற்காகவே நடப்பதாக எண்ணிப் பெருமிதத்துடன் அநுபவித்துக் கொண்டிருந்தாள்.

இடையிடையே அவளுக்கு இளவரசர் அருள்மொழிவர்மரின் நினைவு வந்துகொண்டிருந்தது. அச்சமயம் அவர் கோடிக் கரை சேர்ந்து பத்திரமான இடத்தில் தங்கியிருப்பார் என்று எண்ணினாள். ஒருவேளை தன் பெற்றோர் வீட்டிலே கூடத் தங்கியிருக்கலாம். அல்லது நாகைப் பட்டினம் சென்று அங்கே இராஜ மாளிகையில் தங்கியிருக்கலாம். ஒருவேளை கடலில் கப்பலிலேயே இருந்திருப்பாரோ? இருந்தால்தான் என்ன? அவர் ஏறிச் சென்ற பெரிய மரக்கலத்தை எந்தச் சுழிக் காற்றுத்தான் என்ன செய்து விடும்? அவரைப் பாதுகாக்க எத்தனையோ பேர் சுற்றிலும் சூழ்ந்திருப்பார்கள். தன்னைப்பற்றி அவர் ஞாபகப்படுத்திக் கொள்ளுவாரா? 'அந்தப் பேதைப்



பூங்குழலி இச்சமயம் எங்கிருக்கிறாளோ?' என்று எண்ணிக் கொள்வாரா? ஒரு நாளும் மாட்டார். அவருடைய சகோதரி அனுப்பிய வந்தியத் தேவனைப் பற்றி நினைத்துக் கொள்வார். கொடும்பாளூர்க் கோமகளைப் பற்றியும் நினைத்துக் கொள்ளலாம். இந்த ஏழைக் கரையர் குலப் பெண்ணை அவருக்கு எங்கே நினைவிருக்கப் போகிறது?

இரவு வெகு நேரம் சுழிக் காற்றின் கோலாகலத்தை அனுபவித்து விட்டுப் பூங்குழலி ஸ்தூபத்தின் அடிவாரக் குகைக்குச் சென்று கண்ணயர்ந்தாள். தூக்கத்திலும் அவள் அமைதி அடையவில்லை. ஏதேதோ கனவுகள் கண்டு கொண்டிருந்தாள். கடலில் படகில் சென்று வலை வீசுவது போலவும் அதில் இளவரசர் அகப்படுவது போலவும் ஒரு தடவை கனவு கண்டாள். மற்றொரு சமயம் அவளும் இளவரசரும் மீன்களாக மாறிக் கடலில் அருகருகே நீந்திப் போவதாகக் கனவு கண்டாள். ஒவ்வொரு கனவின்போதும் நடுவில் விழித்தெழுந்து "இது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று எண்ணி மனதைத் தெளிவாக்கிக் கொள்ள முயன்று மறுபடியும் உறங்கினாள்.

பொழுது விடிந்து அவள் நன்றாய் விழித்தெழுந்தபோது சுழிக் காற்றின் கோலாகலம் ஒருவாறு அடங்கி விட்டிருந்தது. இடியில்லை; மின்னல் இல்லை; மழையும் நின்று போயிருந்தது. எழுந்து கடற்கரைக்குச் சென்றாள். நேற்றிரவு போல் அவ்வளவு பெரிய அலைகள் இப்போது கடலில் அடிக்கவில்லை. ஆயினும் கடல் இன்னும் கொந்தளிப்பாகவே இருந்தது. முன்னாளிரவு சுழிக்காற்று அத்தீவை என்ன பாடுபடுத்தி விட்டது என்பதற்கு அறிகுறியான காட்சிகள் நாலா பக்கமும் காணப்பட்டன. வேருடன் பெயர்ந்து தரையில் விழுந்து கிடந்த மரங்களும், முடிகள் வளைந்து தாழ்ந்திருந்த நெடிய பெரிய மரங்களும் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

பூங்குழலி அக்காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த போது கடலில் சற்றுத் தூரத்தில் ஒரு கட்டு மரம் மிதப்பது போல் தெரிந்தது. அது கடற்கரையோரத்து அலைகளினால் பல தடவை அப்படியும் இப்படியும் அலைப்புண்ட பிறகு கடைசியாகக் கரையில் வந்து ஒதுங்கியது. அப்போது தான் அதிலே ஒரு மனிதன் இருப்பதைப் பூங்குழலி கவனித்தாள். ஓடிப் போய்ப் பார்த்தாள். கட்டுமரத்தில் கட்டப்பட்டிருந்த அந்த மனிதன் குற்றுயிராயிருந்தான். அவனைக் கட்டு அவிழ்த்து விட்டு. ஆசுவாசப்படுத்தினாள். அவன் ஈழத்துக் கடற்கரைக் கிராமம் ஒன்றைச் சேர்ந்த வலைஞன். மீன் பிடிக்கப் போன இடத்தில் சுழிக் காற்றில் அகப்பட்டுக் கொண்டதாகக் கூறினான். தன்னுடன் இருந்த தோழனைக் கடல் இரையாக்கிக் கொண்டதாகவும் தான் பிழைத்தது புனர்ஜன்மம் என்று தெரிவித்தான். இன்னும் முக்கியமான ஒரு செய்தியையும் அவன் கூறினான்.

"முன்னிரவு நேரத்தில் கடுமையான சுழிக்காற்று அடித்துக் கொஞ்சம் நின்றதுபோலிருந்தது. எங்களைச் சுற்றிலும் காரிருள் சூழ்ந்திருந்தது. திடீரென்று ஒரு பேரிடி இடித்தது. அப்போது தோன்றிய மின்னல் வெளிச்சத்தில் இரண்டு மரக்கலங்கள் தெரிந்தன. ஒரு மரக்கலம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அந்தப் பயங்கரமான காட்சியைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் மனிதர்கள் இருந்ததாகவே தெரியவில்லை. சற்றுத் தூரத்தில் இன்னொரு மரக்கலமும் நிற்கக் கண்டோம். அதில் மனிதர்களின் அவசர நடமாட்டமும் தெரிந்தது. பிறகு தீப்பிடித்த கப்பல் கடலில் மூழ்கிவிட்டது. மற்றொரு மரக்கலம் இருட்டில் மறைந்து விட்டது!" என்று அம்மனிதன் தட்டுத் தடுமாறிக் கூறினான்.

இதைக் கேட்டவுடனே பூங்குழலிக்கு இளவரசரை ஏற்றிச் சென்ற கப்பல் அவற்றில் ஒன்றாயிருக்குமோ என்ற ஐயம் உதித்தது. அப்படி இருக்க முடியாது என்று நிச்சயம் அடைந்தாள். கடலில் எத்தனையோ கப்பல்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டுமிருக்கும். அதைப்பற்றி நமக்கு என்ன கவலை? ஆனாலும் தீப்பிடித்த கப்பலில் இருந்தவர்களில் சிலர் கடலில் விழுந்திருக்கக்

கூடும். இந்தக் கட்டுமரத்து வலைஞனைப் போல் அவர்களில் யாராவது கையில் அகப்பட்டதைப் பிடித்துக் கொண்டு தத்தளிக்கக் கூடும். அவர்களுக்கு ஏன் நாம் உதவி செய்யக் கூடாது? படகில் ஏறிச் சென்று அப்படித் தத்தளிக்கிறவர்களை ஏற்றிக் கொண்டு வந்து ஏன் கரை சேர்க்கக்கூடாது? பின்னே, இந்த ஜன்மம் எதற்காகத்தான் இருக்கிறது?...

அவ்வளவுதான்; இந்த எண்ணம் தோன்றியதோ இல்லையோ, பூங்குழலி படகைக் கட்டவிழ்த்து நிமிர்த்திக் கடலில் தள்ளி விட்டாள். தானும் ஏறிக் கொண்டாள். அவளுடைய இரும்புக் கரங்களின் பலம் முழுவதையும் உபயோகித்துத் துடுப்பை வலித்தாள். கரையில் வந்து மோதிய அலைகளைத் தாண்டி அப்பால் போகும் வரையில் மிகக் கடினமான வேலையாயிருந்தது. அப்புறம் அவ்வளவு கஷ்டமாக இல்லை. வழக்கம்போல் சர்வ சாதாரணமாக அவளுடைய கரங்கள் துடுப்பை வலித்தன. படகு உல்லாஸமாக ஆடிக்கொண்டு மெள்ள மெள்ள நகர்ந்து சென்றது.

பூங்குழலியின் உள்ளத்தில் குதூகலம் பொங்கியது. அவள் படகிலே வழக்கமாகப் பாடும் பழைய கீதம் தானாகவே புதிய உருவம் கொண்டது. அலைகளின் இரைச்சலை அடக்கிக் கொண்டு அந்தக் கீதம் அவளுடைய கம்பீரமான இனிய குரல் வழியாக வெளி வந்து நாற்றிசையும் பரவியது:—

"அலைகடல் கொந்தளிக்கையிலே
அகக்கடல்தான் களிப்பதுமேன்?
நிலமகளும் துடிக்கையிலே
நெஞ்சகந்தான் துள்ளுவதேன்?
இடி இடித்து எண்திசையும்
வெடிபடும் அவ்வேளையிலே
நடன கலை வல்லவர்போல்
நாட்டியந்தான் ஆடுவதேன்?"

* * *

பாய்மரக் கட்டையைப் பிடித்துக் கொண்ட இளவரசரும் வந்தியத்தேவனும் அலைகடலில் மொத்துண்டு மொத்துண்டு மிதந்து கொண்டிருந்தார்கள். அன்று ஓர் இரவுதான் அவர்கள் அவ்வாறு கடலில் மிதந்தார்கள். ஆனால் வந்தியத்தேவனுக்கு அது எத்தனையோ யுகங்கள் எனத் தோன்றியது. அவன் சீக்கிரத்திலேயே நிராசை அடைந்து விட்டான்; பிழைத்துக் கரை யேறுவோம் என்ற நம்பிக்கையை அடியோடு

இழந்து விட்டான். ஒவ்வொரு தடவை அலை உச்சிக்கு அவன் போய்க் கீழே வந்தபோதும் "இத்துடன் செத்தேன்" என்று எண்ணிக் கொண்டான். மறுபடியும் உயிரும் உணர்வும் இருப்பதைக் கண்டு வியந்தான். — அடிக்கடி இளவரசரைப் பார்த்து "என்னுடைய அவசர புத்தியினால் தங்களையும் இந்த ஆபத்துக்கு உள்ளாக்கினேனே?" என்று புலம்பினான். இளவரசர் அவனுக்கு ஆறுதல் கூறித் தைரியம் ஊட்டி வந்தார். "மூன்று நாள் நாலு நாள் வரையில் கடலில் இம்மாதிரி மிதந்து பிழைத்து வந்தவர்கள் உண்டு" என்று அடிக்கடி சொல்லி வந்தார். "நாம் கடலில் விழுந்து எத்தனை நாள் ஆயின?" என்று வந்தியத்தேவன் கேட்டான். "இன்னும் ஒரு ராத்திரிகூட ஆகவில்லையே?" என்றார் இளவரசர். "பொய்! பொய்! பல நாட்கள் ஆகியிருக்க வேண்டும்" என்றான் வந்தியத்தேவன்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவனுக்கு இன்னொரு கஷ்டம் ஏற்பட்டது. தொண்டை வறண்டு போய்த் தாகம் எடுத்தது. தண்ணீரிலேயே மிதந்து கொண்டிருந்தான்; ஆனால் தாகத்துக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. இது பெரிய சித்திரவதையாயிருந்தது. இளவரசரிடம் கூறினான். "கொஞ்சம் பொறுமையாயிரு! சீக்கிரம் பொழுது விடியும்! எங்கேயாவது கரையிலே போய் ஒதுங்குவோம்!" என்றார் இளவரசர். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தான்; முடியவில்லை. "ஐயா! என்னால் இந்தச் சித்திரவதையைப் பொறுக்க முடியாது. கட்டை அவிழ்த்து விடுங்கள்! கடலில் முழுகிச் சாகிறேன்!" என்றான். இளவரசர் மீண்டும் தைரியம் கூற முயன்றார். ஆனால் பலிக்கவில்லை. வந்தியத்தேவனுக்கு வெறி மூண்டது. தன்னுடைய கட்டுக்களைத் தானே அவிழ்த்துக் கொள்ள முயன்றான். இளவரசர் அதைப் பார்த்தார். அருகில் நெருங்கிச் சென்று அவனுடைய தலையில் ஓங்கி இரண்டு அறை அறைந்தார். வந்தியத்தேவன் உணர்வை இழந்தான்!

அவன் மறுபடி உணர்வு பெற்றபோது பொழுது விடிந்து வெளிச்சமாயிருப்பதைக் கண்டான். அலைகளின் ஆரவாரமும் சிறிது அடங்கியிருந்தது. சூரியன் எங்கேயோ உதயமாகியிருக்கவேண்டும். ஆனால் எங்கே உதயமாகியிருக்கிறது என்று பார்க்க முடியவில்லை.

இளவரசர் அவனை அன்புடன் நோக்கி, "தோழா! சமீபத்தில் எங்கேயோ கரை இருக்கவேண்டும். தென்னைமரம் ஒன்றின் உச்சியைச் சற்று முன் பார்த்தேன். இன்னும் கொஞ்சம் பொறுமையாயிரு!" என்று சொன்னார்.

"இளவரசே! என்னைக் கைவிட்டு விடுங்கள்! தாங்கள் எப்படியாவது தப்பிப் பிழையுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"வேண்டாம்! அதைரியப்படாதே! உன்னை அப்படி நான் விட்டுவிட மாட்டேன்!......ஆகா! அது என்ன! யாரோ பாடுகிற குரல் போல் தொனிக்கிறதே!" என்றார் இளவரசர்.

ஆம்; அப்போது அவர்களுடைய காதில் பூங்குழலி படகிலிருந்து பாடிய பாட்டுத்தான் கேட்டது.

"அலைகடல் கொந் தளிக்கையிலே
அகக்கடல் தான் களிப்பதுமேன்?"

என்ற கீதம் அவர்களுடைய காதில் அபய கீதமாகத் தொனித்தது. உடற்சோர்வும் மனச்சோர்வும் உற்று முக்கால் பிராணனை இழந்திருந்த வந்தியத்தேவனுக்குக்கூட அந்தக் கீதம் புத்துயிர் அளித்து உற்சாகம் ஊட்டியது.

"இளவரசே! பூங்குழலியின் குரல்தான் அது! படகு ஓட்டிக்கொண்டு வருகிறாள். நாம் பிழைத்துப் போனோம்!" என்று சொன்னான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் படகு அவர்கள் கண்ணுக்குத் தென்பட்டது. நெருங்கி நெருங்கி அருகில் வந்தது. பூங்குழலி "இது உண்மையில் நடப்பது தானா?" என்று சந்தேகித்துச் செயலிழந்து நின்றாள். இளவரசர் வந்தியத்தேவனைக் கட்டு அவிழ்த்து விட்டார். முதலில் தாம் படகிலே தாவி ஏறிக் கொண்டார். பின்னர் வந்தியத்தேவனையும் ஏற்றி விட்டார். பூங்குழலி கையில் பிடித்த துடுப்புடனே சித்திரப்பாவையைப்போல் செயலற்று நின்றாள்.

இரண்டாம் பாகம் முற்றியது

பஜ கோவிந்தம்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

12

உலகமும் உலக வாழ்க்கையும் மாயமாக இருக்கட்டும், உண்மையாக இருக்கட்டும், நம்முடைய சாமர்த்தியத்தினால் எல்லாம் சுகமாகச் செய்ய முடியுமானால் அப்படியே செய்து கொள்ளலாம். அதற்குச் சங்கரர் ஆட்சேபிக்கமாட்டார். ஆனால் அவ்விதம் செய்து கொள்ள முடியவே முடியாது. தீய மார்க்கத்தில் சுகம் தேடினால் சிறிதளவு இன்பமும் பெரிய அளவில் துக்கமும் நிச்சயம். அவ்வாறு செய்யாமல் தரும நெறியிலேயே நின்று வாழ்க்கை நடத்தினால் சுகம் துக்கம் இரண்டையும் அனுபவித்தே தீரவேண்டும். இரண்டையும் பொறுத்தல் வேண்டும். சங்கரர் சொல்லியிருப்பதை நன்றாக உணர்ந்து மனத்தில் பதியவைத்தால் தான் துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளும்படியான திரம் உண்டாகும். வேறு எந்தக் கஷ்டங்கள் நேரிடாவிடினும், மரணமும் அதனால் ஏற்படும் பிரிவும் நீக்க முடியாதல்லவா? மனைவி புருஷனை இழக்க வேண்டும், அல்லது புருஷன் மனைவி இறப்பதைப் பார்த்துத் துக்கம் அடைய வேண்டும். இவ்வாறே பிற துக்கங்களும். இவற்றைப் பொறுத்தலுக்கேனும் வேண்டும் சங்கரர் சொல்லும் அறிவு. இவற்றைத் தவிர எவ்வளவோ கஷ்டங்களும் உண்டு. 'வேதாந்தம் வேண்டாம், சும்மா வாழ்க்கையை நடத்தலாம்' என்று பலர் செய்து பார்த்தவர்கள் கஷ்டமும் துக்கமும் நேர்ந்த காலத்தில் தாங்க மாட்டாமல் அளவில்லாத துக்கமடைந்திருக்கிறார்கள். ஆனபடியால் மனத்தில் முடிவு செய்து கொள்ள வேண்டும்: வாழ்க்கை என்பதில் துக்கம் கலந்தே யிருக்கும்; இன்பத்தின் அங்கம் துக்கம். அதைத் தள்ளிவிட முடியாது. அதைத் தாங்கும் உறுதி உண்டாக்கிக் கொள்ள வேண்டும்; அதற்கு மெய்யறிவு அவசியம். துறவியான சங்கரர் சொல்லும் உண்மை சாதாரண சுக வாழ்க்கைக்கும் அத்தியாவசியமான அறிவு:—

காலைச்சந்தியென்றும் நண்பக லென்றும்
மாலைவஸந்த மென்றும் மீள்திகழ் இரவென்றும்
கோடையென்றும் குளிர்பனியென்றும்
ஆடியாடி களிநடனமாடி காலதேவியவள்
இடையறு தறுத் துன்னுயுரைக் கழித்தும்
மடையனே, உன்னாசை தணியவில்லையே.

* *
*

தினமபி ரஜனீ ஸாயம் ப்ராத:
சிசிரவஸந்தௌ புன ராயாத:
கால: க்ரீடதி கச்சத்யாயு:
ததபி நமுஞ்சத் யாசா வாயு:

இரவும் பகலும், கோடையும் பனியும் என்று மாறி மாறி நடன மேடையில் துள்ளல் காட்டும் ஒரு சுந்தரியைப் போல் காலதேவி தாண்டவமாடிச் செல்கிறாள். ஆனால் உண்மையில் அவளுடைய ஒவ்வொரு தாளமும் ஒவ்வொரு துள்ளல் மிதியும் உன் ஆயுளை அறுக்கும் வாள் என்பதை அறிவாய். நாள் என்பது இன்பம் தருவதோர்த் தனிப் பொருளே போலக் காட்டி உயிரை வாங்கும் ஒரு வாளாம் என்றார் குறளாசிரியர்.

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

மாயத்தைப் பற்றிச் சொல்லும்போது அதன் அழகையும் நன்றாக எடுத்துக் காட்டுகிறார் சங்கரர். காலை மாலைச் சந்திகளைவிட வேறு ஒரு அழகான காட்சி உலகத்தில் உண்டோ? இரவின் தனியழகுக்கும் ஒரு ஈடு இல்லை. பருவங்களின் அழகைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. இவ்வளவும் இடையறாமல் உயிர் ஈரும் வாள். வேறல்ல. இதை அறிந்தும் ஆசைகளைவிட மாட்டோம். ஏன் இந்த மடமை!

दिनमपि रजनी सायं प्रातः
शिशिरवसन्तौ पुनरायातः ।
कालः क्रीडति गच्छत्यायुः
तदपि न मुञ्चत्याशावायुः ॥

உனக்குப் புத்தி சொல்லுவார் இல்லையே! மரண காலம் வெகு அருகில் இருந்தும் ஏன் உன் சிந்தையை மனைவி என்றும் ஆஸ்தி என்றும் இவற்றில் இன்னும் செலவழிக்கிருய்? அந்திம காலத்திலாவது கொஞ்சம் அறிவு மார்க்கம் தேட மாட்டாயா? சிறிதளவேனும் அவ்வாறு சிந்தித்தால் வெகு பெரிய பலன் தருமே என்று வருத்தப்பட்டு ஆச்சாரியார் பாடுகிருர்:

புத்திகெட்ட மனமே, உன்னை நடத்துவார்
இல்லையே
சொத்தும் மனைவியும் இப்பவும் விசாரமோ?
இரக்கும் தருவாயேனும் நல்லாரின் சேர்க்கை
பிறவிக் கடலைக் கடத்தும் நல்ல நாவாயாமே.

* *
*

காதே காந்தா தனகத சிந்தா
வாதுல கிம்தவ நாஸ்தி நியந்தா
க்ஷணமபி ஸஜ்ஜன ஸ்ஙகதி ரேகா
பவதி பவார்ணவ தரணே நௌகா

நம் உள்ளத்தைக் கவரும் பற்றுக்களை நன்ருகப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். மனைவி இருக்கிருள். இவளுடைய ஆன்மாவுக்கும் என் ஆன்மாவினுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்று மற்ருென்றை ஏன் ஒட்டி நிற்க வேண்டும்? இந்த ஜன்மத்தில் மனைவியென்று கருதும் உயிருக்கும் எனக்கும் மற்ருெரு ஜன்மத்தில் முன் அல்லது பின் ஜன்மத்தில், என்ன சம்பந்தம்? ஆன்மாக்களுக்கு பந்துத்துவம் ஏது? ஒரு ஜன்மத்தில் ஏற்பட்ட நிலையிலாத ஒரு சம்பந்தத்தைப் பற்றி ஏன் விசாரம்? முடிவிலாத கால அளவில் ஒரு உயிரின் காலம் எம்மாத்திரம்? கணமே போன்ற ஒரு அற்பம் அல்லவா? உன் காலம் முடிந்ததும் மனைவிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? அதைப்பற்றி ஏன் சிந்தனை? பயன் தராத சிந்தனைகளை விலக்க வேண்டும்.

மனைவியின் விஷயம் இம்மட்டுமே யானுல் பணத்தைப்பற்றி என்ன கேள்வி? அது ஒரு உயிரற்ற பொருள். உடலைவிட்டு வெளியேறின உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அதைப் பற்றி என்ன கவலை உனக்கு வேண்டும்?

உண்மை எளிதில் விளங்கினுலும் மயக்கம் இருந்துகொண்டு வேலை செய்கிறது. அந்த மயக்கத்தைப் போக்குவதற்கே சங்கரர் 'மோகமுத்கர'த்தைப் பாடித் தந்தார். பஜ கோவிந்தம் பாட்டுக்குப் பரம்பரையாக வந்த பெயர் 'மோக முத்கரம்' அதாவது மோகத்தை உடைக்கும் சம்மட்டி.

का ते कान्ताधनगतचिन्ता
वातुल किम् तव नास्ति नियन्ता ।
क्षणमपि सज्जनसंगतिरेका
भवति भवार्णवतरणे नौका ॥

தேர்ந்தெடுக்க வேண்டும்!

ஜி. துரைசாமி

("ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி" என்ற பாரதியார் பாடலின் சந்தம் போன்றது.)

தேர்ந்தெடுக்க வேண்டும்—தீரர்களைத்
தேர்ந்தெடுக்க வேண்டும்!
தேசம் சிறந்திடச் செய்ய வல்லோர்களைத் (தேர்)

உற்ற விடுதலையின்—பலன்களைப்
பெற்று மகிழ்ந்திடவே
உத்தம சேவைசெய் சத்திய சீலரைத் (தேர்)


போட்டியிடும் சொந்தப்—பதவி
வேட்கைகொண்ட அந்த
ஏட்டுச் சுரைகளுக் கேயிட மின்றியே (தேர்)

இன்னல்கள் நீங்கிடவே—மக்களென்றும்
இன்புற்று வாழ்ந்திடவே
தன்னலத் தியாகம் பண்ணிடு வோர்களைத் (தேர்)


காந்தீயம் ஓங்கிடவே—காசினியில்
கஷ்டங்கள் நீங்கிடவே
சாந்தி நிலவிடச் சாதிக்க வல்லோரைத் (தேர்)

தோன்று பிறந்த கட்சி—சுதந்திரம்
வென்று சிறந்த கட்சி
பொன்னவன் காந்தியும் போற்றிய கட்சியைத் (தேர்)

காளைகள் ரெண்டுநுகக்—கழியுடன்
காட்சி யளிக்கு மந்தப் [போட்டுத்
பெட்டியுள் வோட்டினை வாழியென்றே (தேர்)




ஜூபிடரின்
கைதி
சென்னை, மற்றும் முக்கிய
நகரங்களில் நடைபெறுகிறது.
டைரக்ஷன்:
S.பாலசந்தர்...
ஸ்டுடியோ:
சென்ட்ரல்...
நகர உரிமையாளர்கள்:
பெல் பிக்சர்ஸ்



பரிசுக்கதை

விதியும் சதியும்

ஆசிரியர்: எம். எஸ். ஸாதே
மொழிபெயர்ப்பு: 'வாஞ்சி'

மூலக்கதை: மராத்தி

"நான் பெயரும் புகழும் பெற்று மிகுந்த செல்வாக்குடன் விளங்க வேண்டுமானால், இந்த வீட்டுத் தொல்லைகளுக்கு எல்லாம் இறுதியாக முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும்" என்று டேவிட் வாட்மென் தனக்குத் தானே ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டான்.

உடனே சிகரெட் வெளிச்சத்தில் தனது கைக் கடியாரத்தைப் பார்த்தான். அப்போது இரவு பதினொரு மணி ஆகியிருந்தது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த வாட்மெனுக்கு, தான் வெகு தூரம் வந்து விட்டது அப்போது தான் தெரிந்தது. அவன் மனதில் சிறிது கலக்கம் ஏற்பட்டது. உடனே தனது பங்களாவை நோக்கித் திரும்பினான்.

இரவில் தான் தனியாக வெகு தூரம் செல்லுவது ஆபத்தாகும் என்பது வாட்மென் அறியாத விஷயம் அல்ல. தன் ஆபீஸ் சிப்பந்திகளும் குமாஸ்தாக்களும் தன்னைப் பிசாசே உருவெடுத்து வந்தவனாக எண்ணுகிறார்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்ததுதான். ஏன், அந்த ஜில்லாவைச் சேர்ந்த ஜனங்கள்கூட அவனைக் கண்டு நடுங்குகிறார்கள் என்பதையும் அவன் அறிவான்.

இதையெல்லாம் எண்ணிய போது அவனுக்கு ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. "நான் இந்த ஜில்லாவுக்கே ஒரு ராஜாவாக இருக்கிறேன்" என்று அவன் மனம் சொல்லிக் கொண்டது.

"டேவிட், நீங்கள் இந்தியர்களுடன் ஜாக்கிரதையாகவும் சிநேகபாவத்துடனும் பொறுமையுடனும் பழக வேண்டும். இல்லாவிடில் ஏதாவது சங்கடம் ஏற்படலாம்" என்று வாட்மெனின் மனைவி டோரா அடிக்கடி கூறியது அவன் ஞாபகத்துக்கு வந்தது:

'டோரா ஒரு கோழை. நான் அவ்வளவு மடையனா! எனக்கு விரோதமாக ஏதாவது சதி நடக்குமாயின், சதியில் சம்பந்தப்பட்டவர்களுடைய குடும்பத்தினர் யாவரையும் பகிரங்கமாகத் தூக்கில் போட்டு விடுவேன், தெரியுமா!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் வாட்மென்.

திடீரென்று அவனது சிந்தனைகள் கலைந்தன. இருளில் காய்ந்து கீழே உதிர்ந்திருக்கும் இலைகளின் மீது யாரோ நடப்பது போல் அவனுக்குத் தோன்றியது. சட்டென்று அவன் தன் வாயிலிருந்த சிகரெட்டை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். அவனை அறியாமலேயே அவனது கை, துப்பாக்கியின் மீது சென்றது. அவன் சப்தம் வந்த இடத்தைப் பார்த்தான். மேலும் ஏதாவது சப்தம் கேட்கிறதா என்று பரபரப்புடன் உற்றுக் கேட்டான்.

எங்கும் நிசப்தமாக இருந்தது. தூரத்தில் அவனுடைய பங்களாவில் எரியும் விளக்குகளின் வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று தெரிந்தது.

தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டான். 'என்னை எதிர்க்கத் துணிந்து எவனாவது இந்த இருளில் வருவானா? வாட்மெனுடன் விளையாடுவது பெரிய ஆபத்தாக முடியும் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன!' என்று முணு முணுத்தான்.

மறுபடியும் சிறிது தூரத்தில் காலடிச் சப்தம் கேட்டது. அது காலடிச் சப்தம்தான் என்பது இந்தத் தடவை வாட்மெனுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டது.

'என்னை யாரோ தொடர்ந்து வருகிறான் என்பதில் சந்தேகமில்லை' என்று வாட்மென் மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

உடனே அவன் சிகரெட்டைக் கீழே எறிந்து, அதைத் தன் பூட்ஸால் தேய்த்து அணைத்தான்.

கைத் துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்தான். அது அவனுக்குத் தைரியத்தைக் கொடுத்தது.

* * *

அன்று இரவு எட்டு மணிக்கு அவன் கிளப்பிலிருந்து வந்ததும் அவனுக்கும் டோராவுக்கும் கடுமையான வாய்ச் சண்டை ஏற்பட்டது. அன்று வாட்மென் திட்டத்துக்கு அதிகமாகக் குடித்து விட்டான். அதனால் அவன் நிலை தடுமாறி மற்றொரு அதிகாரியின் மனைவியிடம் ஆபாசமாக நடந்து கொண்டான். அவனது செய்கை டோராவுக்கு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது. பங்களாவுக்கு வந்ததும் டோரா அவனைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள்.

இதற்கு முன்பும் சில நாட்களாக வாட்மென் தம்பதிகளுக்குள் அடிக்கடி தகராறும் வாக்குவாதமும் ஏற்பட்டு வந்தன.

"என்னை நீங்கள் வஞ்சகமாகக் கல்யாணம் செய்து கொண்டு விட்டீர்கள்" என்று குற்றம் சாட்டினாள் டோரா ஒரு நாள்.

"ஏன்! என்னிடம் வாழ உனக்கு விருப்பம் இல்லை என்றால் நீ விவாக ரத்து செய்து கொண்டு போய் விடலாமே" என்றான் வாட்மென்.

டோரா, இங்கிலாந்தில் உள்ள ஒரு கப்பல் கம்பெனி டைரக்டரின் அருமைப் பெண். சிறு வயது முதல் ஆடம்பரமாக வாழ்ந்தவள். அவள் ஒரு குதிரைப் பந்தயத்தில் வாட்மெனைச் சந்தித்தாள். வாட்மெனின் குறும்புத்தனமும் அலட்சிய புத்தியும் மமதையும் அவளை ஆகர்ஷித்தன! அதற்கு முன் அவள் நோயல் லிப்மென் என்பவனைக் காதலித்திருந்தாள். ஆனால் வாட்மெனைச் சந்தித்த பின் அவளுக்கு லிப்மென் மீதிருந்த காதல் கருகிவிட்டது! பெற்றோர்கள் தடுத்தும் கூட அவள் பிடிவாதத்துடன் வாட்மெனையே மணம் செய்து கொண்டாள்.

ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறிய வாட்மென் உத்தியோகத்தை ஏற்றுக் கொள்வதற்காக இந்தியாவுக்கு வந்த போது டோராவும் அவனுடன் கூட வந்து சேர்ந்தாள்.

வந்த சில மாதங்கள் வரையில் அவளது வாழ்க்கை இன்பமாக இருந்தது. ஆனால் பிறகு அவளுக்கு ஒரு சலிப்பு ஏற்படத் தொடங்கியது. இங்கிலாந்தில் நடனசாலைகளிலும் நாடகசாலைகளிலும் பொழுது போக்கி ஆனந்தமாகக் காலம் கழித்த டோராவுக்கு இந்தியாவின் சூழ்நிலை திருப்தியைக் கொடுக்கவில்லை!

போதாக் குறைக்குத் திமிர்பிடித்த வாட்மெனும் டோராவை அலட்சியம் செய்யத் தொடங்கினான். திரும்பவும் இங்கிலாந்துக்குப் போய்விடலாம் என்றும், அங்கு தகுந்த சிபார்சின் மீது உயர்ந்த உத்தியோகத்தைத் தேடிக் கொள்ளலாம் என்றும் டோரா எவ்வளவோ சொல்லியும் வாட்மென் அதைக் கேட்கவில்லை.

ஐ.ஸி.எஸ். உத்தியோகத்தைப் போல் வேறு எந்த உத்தியோகத்திலும் சர்வாதிகாரம் செலுத்த முடியாது என்பது வாட்மெனின் எண்ணம். இந்தியாவில் லார்டு கிளைவ் சாதித்ததைப் போல் தானும் சாதித்துச் சரித்திரத்தில் அழியாப் 'புகழை'ப் பெற வேண்டும் என்ற ஆசையும் வாட்மெனுக்கு இருந்தது! இந்த ஆசையை அவன் டோராவிடம் கூறினான்.

"கிளைவைப் போல் நீங்கள் புகழ் பெறுவதற்குள் நான் கிழவியாகி விடுவேன்!" என்று ஏளனம் செய்தாள் டோரா.

* * *

இச்சந்தர்ப்பத்தில் வாட்மெனுக்கும் டோராவுக்கும் அபிப்பிராய பேதம் முற்றுவதற்கான மற்றொரு காரணம் ஏற்பட்டது.

இங்கிலாந்திலிருந்து அப்போது இந்தியாவுக்கு வந்த துருப்புகளுடன் நோயல் லிப்மெனும் வந்து சேர்ந்தான். இங்கிலாந்தில் இருந்த போது சாதாரண லிப்மெனாக இருந்த அவன் இப்போது மேஜர் லிப்மென் என்ற பட்டத்துடன் இராணுவ அதிகாரிகளில் ஒருவனாக விளங்கினான்.

அவனும் டோராவும் அடிக்கடி சந்திக்கும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவனைக் கண்டதும் டோராவுக்கு மனம் தடுமாறத் தொடங்கியது. இதன் காரணமாக வாட்மெனுக்கும் டோராவுக்கும் தினசரி சச்சரவு ஏற்படலாயிற்று.

அன்று இரவு இருவருக்கும் வாய்ச்சண்டை முற்றியதில், "இனி நீ இவ்வாறு நடந்து கொண்டால் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன்" என்றான் வாட்மென் கடைசியாக.

அவ்விதம் சொல்லிவிட்டு அவன் தன் கோபம் அடங்குவதற்காக வெளியே உலாவச் சென்றான்.

சில தினங்களுக்கு முன் டோரா கிளப்பில் மேஜர் லிப்மெனுடன் பேசிக்கொண்டிருந்தபோது, "வாட்மென் முரட்டு சுபாவம் உள்ளவன். அவன் என்றைக்காவது நம் இருவரையும் சுட்டுக் கொன்றுவிடுவான்" என்றாள் கலக்கத்துடன்.

"வாட்மென் வீட்டில் இருக்கும்போது அவனுடைய கைத்துப்பாக்கி காலியாக இருக்கும்



படி பார்த்துக் கொள். அதில் தோட்டாக்கள் இருந்தால், அவற்றை எடுத்து மேஜைக்குள் போட்டுவிடு'' என்று யுக்தி சொல்லிக் கொடுத்தான் லிப்மென்.

லிப்மென் கூறிய யோசனைப்படி செய்ய டோரா தயங்கவில்லை. வழக்கம்போல் அன்றும் வாட்மெனின் கைத்துப்பாக்கி காலியாகவே இருந்தது!

* * *

சல சல வென்று சப்தம் கேட்டதும் அவன் கை மறுபடியும் துப்பாக்கியிடம் சென்றது. இந்தத் தடவை அவன் துப்பாக்கியை வெளியே எடுத்தான். அது கனக்கவில்லை. அதில் ரவைகள் இல்லை என்பதையும் அது காலியாக இருக்கிறது என்பதையும் உடனே தெரிந்து கொண்டான்.

'' அரே, பாப்ரே '' என்று கத்தினான். '' இது துரோகி டோராவின் காரியம்தான் '' என்று துடித்தான்.

உடனே அந்த இடத்தை விட்டுப் பங்களாவுக்கு ஓடித் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான். எனினும், அந்த ஆபத்தான சமயத்தில் கூட அங்கிருந்து கோழைத்தனமாக ஓடுவது அவனது கௌரவத்துக்குக் குறைவாகத் தோன்றியது!

மேலே என்ன செய்வது என்று தோன்றாமல் வாட்மென் இரண்டொரு நிமிஷம் அப்படியே திகைத்து நின்றான்.

சப்தம் வந்த திசையை மறுபடியும் உற்றுப் பார்த்தான். அவன் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லை.

'' ஒரு வேளை என் மனப்பிரமையாக இருக்கலாம் '' என்று தனக்குள் சிரித்துக் கொண்டான். பங்களாவை நோக்கி நடக்கலானான்.

தனக்கு ஏதாவது ஆபத்து நேரவேண்டும் என்று பலரும் பிரார்த்தித்து வருவது அவனுக்குத் தெரி



யும். பம்பாயிலும் புனாவிலும் பல இளைஞர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாகச் சதி செய்து வருகிறார்கள் என்ற வதந்தி அவன் காதுக்கும் எட்டியது.

தேசபக்தர்களான பல இளைஞர்களைப் போலீசாரைக் கொண்டு எச்சரிக்கும்படியும் பயமுறுத்தும்படியும் செய்தான் வாட்மென்.

அந்த இளைஞர்களையெல்லாம் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது. ஆனால் விராக் தேஷ் பாண்டேயைப் பற்றி மாத்திரம் அவனுக்குத் தெரியும். அவன் மிகவும் ஆபத்தான பேர்வழி என்பது அவன் அபிப்பிராயம். விராக் தேஷ்பாண்டேயின் ஒப்பற்ற திறமையே வாட்மெனை அவ்விதம் நினைக்கும்படி செய்தது!

வாட்மெனிடம் பதவியை ஒப்புவித்த போது கலெக்டர் ஹென்ரி ஸ்டோன் அவனிடம் அந்தரங்கமான குறிப்புப் புத்தகம் ஒன்றைக் கொடுத்தார். அதில், உத்தியோகத்துக்கு வரும் பிரிட்டிஷார் கவனிக்க வேண்டிய பல விஷயங்கள் இருந்தன. ஆபத்தான பேர்வழிகள் என்று சில இளைஞர்களின் பெயர்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த ஜாப்தாவில் விராக் தேஷ்பாண்டேயின் பெயரும் இருந்தது.

நதியில் ஒரு சமயம் பிரமாதமாக வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. அப்போது ஒரு கிழவி மூழ்கி இறக்கும் தறுவாயில் இருந்தாள். ஆனால் அதைக் கண்ணுற்ற விராக் தைரியமாக நீந்திச் சென்று அவளைக் காப்பாற்றினான். இது போன்ற வீரச் செய்கைகளால் அவன்மீது பொது ஜனங்களுக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது.

'' என்ஜினீயரிங் கலாசாலையில் முதன்மையாகத் தேறிய விராக் தேஷ்பாண்டேயைச் சர்க்கார் வெளியே விட்டு விடக்கூடாது. கொழுத்த சம்பளம் உள்ள உத்தியோகத்தில் அவனை நியமித்து, அவனைச் சர்க்கார் தங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும் '' என்று இரகசியப் புத்தகத்தில் கலெக்டர் ஹென்ரி ஸ்டோன் எழுதியிருந்தது வாட்மெனுக்கு அப்போது ஞாபகத்தில் வந்தது.

'' அதையெல்லாம் பற்றி இப்போது நினைப்பதால் என்ன பலன் ஏற்படப் போகிறது! '' என்றது வாட்மெனின் மனம்.

அப்போது அவன் ஒரு முடிவுக்கு வந்தான். '' தகுந்த சாட்சியங்கள் கிடைத்தாலன்றி இவர்களை உள்ளே தள்ளக்கூடாது என்றிருப்பது தவறாகும். காலைப் பொழுது விடிந்ததும் இவ்விஷயமாகத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் தீரவேண்டும். முதலில் இந்த விராக் தேஷ்பாண்டேயையாவது...... ''

இவ்வாறு வாட்மெனின் சிந்தனைகள் சென்று கொண்டிருந்தபோது, அவை திடீரென்று கத்தரிக்கப்பட்டன.

அப்போது இருளில் யாரோ தனக்கு அருகில் வருவது வாட்மெனுக்குத் தெரிந்தது. அடுத்த விநாடி அந்த உருவம் 'டார்ச்' விளக்கை வாட்மெனின் முகத்துக்கு நேராக நீட்டி, தன் கையிலிருந்த துப்பாக்கியால் சுட்டது.

பட்! பட்! பட்! பட்!

'' ஆ. கடவுளே! '' என்று அலறிக்கொண்டே வாட்மென் கீழே சாய்ந்தான்.

அவனைச் சுட்ட உருவம் மறுபடியும் இருளில் பதுங்கிச் சென்று மறைந்தது!

* * *

மறுதினம் வாட்மென் கொலை யுண்டதைப் பற்றிய செய்தி எங்கும் காட்டுத் தீ போல்

பரவியது. யாரோ ஒருவன் வாட்மெனைச் சுட்டுக் கொன்று விட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின.

மேற்படி கொலையைக் கேட்டு, தேசிய இயக்கத்தில் தீவிரமாகக் கலந்து கொண்ட இளைஞர்களின் பெற்றோர்களெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் சர்க்கார் உத்தியோகங்களில் இருந்ததால், தங்களுடைய உத்தியோகத்துக்கு எந்த க்ஷணத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்று அவர்கள் கவலைப்பட்டார்கள்.

வாட்மெனின் கொலையை யொட்டிப் பலர் கைதியாயினர். ஏராளமான வீடுகள் சோதனையிடப்பட்டன. அதிகாரிகள் வெறி பிடித்தாற் போல் நடந்து கொண்டார்கள்.

விசாரணையை நடத்துவதற்காக டில்லியிலிருந்து பிரத்தியேகமாக ஒரு பிரிட்டிஷ் அதிகாரி வந்தார்.

எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளும்படி விராக் தேஷ் பாண்டேக்குப் பலர் யோசனை கூறினார்கள். அவ்விதம் செய்தால் போலீசாருக்குத் தன் மீதுள்ள சந்தேகம் இன்னும் அதிகப்படுமே என்று அவன் கலங்கினான். தன் மகனுக்கு ஏதாவது ஆபத்து நேருமோ வென்று விராகின் தந்தை பார்க்கவபந்துவும் ஒவ்வொரு வினாடியும் நடுங்கிக் கொண்டிருந்தார்.

விராகின் தேசபக்தியையும் தியாக புத்தியையும் பார்க்கவ பந்து நன்கு அறிவார். எனினும் இருளில் சென்று அவன் வாட்மெனைக் கொலை செய்திருக்க மாட்டான் என்பது அவரது நிச்சயமான அபிப்பிராயம்.

* * *

விராக் என்ஜினீயரிங் கலாசாலையில் வாசித்த வனுதலால், அவனுக்குக் குதிரை சவாரியில் மிகுந்த பிரியம் உண்டு. ஒரு நாள் அவன் குதிரையின் மீது சவாரி செய்துகொண்டு சென்ற போது எதிரிலே வாட்மெனும் அவனது மனைவி டோராவும் குதிரைகளில் ஏறிக்கொண்டு வந்தார்கள்.



அவர்களைப் பார்த்த பிறகும் கூட விராக் குதிரையை விட்டுக் கீழே இறங்காமல் வந்து கொண்டிருந்தான்.

இதைக் கண்ட வாட்மெனுக்குத் தன் கௌரவம் எல்லாம் சிதைந்து விட்டது போல் தோன்றியது. உடனே அவன் ஆத்திரம் எல்லை கடந்தது.

அவன் சிறிது தூரத்தில் வந்த மெய்காவலனை தன் சிப்பாயைக் கூப்பிட்டு, "அதோ வருகிறானே! அந்தக் கழுதையைக் குதிரையிலிருந்து இறங்கச் சொல்" என்றான். டோராவின் முன்னிலையில் தன் அதிகாரத்தைக் காட்ட வேண்டும் என்பதும் வாட்மெனின் ஆசை.

சிப்பாய் ஓடிச் சென்று புதிய கலெக்டர் தம்பதிகள் குதிரைகளில் வருவதால், குதிரையை விட்டுக் கீழே இறங்கும்படி விராகிடம் கூறினான்.

"கலெக்டர் தம்பதிகள் வந்தால் நான் ஏன் குதிரையிலிருந்து இறங்க வேண்டும்!" என்று கேட்டான் விராக்.

இதைத் தூரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த வாட்மென், "அந்த ராஸ்கலைச் சவுக்கால் அடி" என்று உறுமினான்.

தன் எஜமானின் கட்டளையை நிறைவேற்றுவதற்காகச் சிப்பாய் சவுக்கை எடுக்கவே, விராக் குதிரையைத் திருப்பி அதிவேகமாகச் சென்று மறைந்து விட்டான்.

இந்தச் செய்தி சிறிது நேரத்தில் நகரெங்கும் பரவி விட்டது. அதைக் கேட்டுப் பொது மக்கள் பீதி யடைந்தனர்.

விராகின் தந்தை அவனை அன்றிரவு ரயில் வண்டியிலேயே புனாவுக்கு அனுப்பிவிட்டார்.

* * *

வாட்மென் கொலையுண்ட இரண்டொரு தினங்களுக்குள் விராகும் அவனது சகாக்களும் கைதியாயினர். எட்டு நாட்கள்வரையில் உறவினர் யாரும் மேற்படி கைதிகளைக் கண்டு பேச அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

ஒன்பதாம் நாள் வயோதிகர்களான விராகின் தந்தையும் தாயாரும் மகனைப் பார்ப்பதற்காகச் சிறைக்கு வந்திருந்தார்கள். விலங்கு பூட்டிய கைகளுடன் தன் மகனைக் கண்ட விராகின் தாயார் தன் இருதயம் வெடித்துவிடும் போல் அழுதாள்.

கைதிகள் குற்றங்களை ஒப்புக் கொள்வதற்காக அதிகாரிகள் மிருகத்தனமான முறைகளைக் கையாண்டார்கள். அந்த முறைகளைக் கண்டித்த பத்திரிகைகள் மீது வழக்கு தொடரப்பட்டு, அவைகள் அபராதம் கொடுக்கும்படி நேர்ந்தன.

கைதிகளின் உறவினர்களிட மிருந்து தகவல்களை அறிவதற்காக அதிகாரிகள் காட்டுமிராண்டித் தனமான முறைகளைக் கைக்கொண்டனர்.

விராக் மீதும் அவனுடைய சகாக்கள் மீதும் வழக்கு நடந்தது. வழக்கின் முடிவு எப்படி இருக்கும் என்பதுபற்றி ஜனங்களுக்குச் சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை. எதிரிகளுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பதை முதலிலேயே ஜனங்கள் அறிந்துகொண்டுவிட்டார்கள்!

கொலையுண்ட வாட்மென் ஸ்தானத்தில் உத்தியோகத்தை ஏற்ற ராபர்ட்

ரன்ஸிமென் நரியைப் போல் பெரிய தந்திரசாலி. மேற்படி கொலை வழக்கு சம்பந்தமான சில முக்கிய ருஜுக்களை ரன்ஸிமென் வெளியிடாமல் அப்படியே அமுக்கிவிட்டான்! அந்த ருஜுக்கள் வெளியாகி யிருந்தால் வழக்கின் முடிவு வேறு விதமாகி யிருக்கலாம்!

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கைதிகளின் விதிக்கும் ரன்ஸிமென் கோஷ்டியினரின் சதிக்கும் போராட்டம் நடப்பதுபோல் தோன்றியது. இறுதியில் சதியே வெற்றி பெற்றது!

கைதிகளுக்கு எதிராக மலைபோல் சாட்சியங்கள் கொண்டு வரப்பட்டன. விராக் மரண தண்டனை அடைந்தான். மற்ற எதிரிகள் மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனையி லிருந்து தீவாந்திர சிட்சை வரையில் பல்வேறு விதமாகத் தண்டிக்கப்பட்டார்கள்.

விராகின் மரண தண்டனையைத் தீவாந்திர சிட்சையாகக் குறைக்கும்படி தேசமெங்கும் கூக்குரல் எழுந்தது. இரக்கம் காட்டும்படி அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு ஹார்டிஞ்சுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

ஆனால், இறுதியில் எதுவும் பலன் ஏற்படவில்லை. 1911 ஜுன் மாதம் 10-ந் தேதி விடியற் காலையில் விராக் தூக்குமேடையேறி வீரசுவர்க்கம் அடைந்தான்!

சரியாக விராக் மாண்ட ஒரு வருஷத்துக்குப் பிறகு அந்த நகரின் சதுக்கத்தில், கலெக்டர் ரன்ஸிமெனின் முயற்சியால் வாட்மெனின் சிலை எழுப்பப்பட்டது. சர்க்கார் சிப்பந்திகளிடமிருந்து பலவந்தமாகப் பணவசூல் செய்து அந்தச் சிலையை அமைத்தனர்.

* * *

1947 ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி பாரத நாடு சுதந்திரம் பெற்றதும், இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் அறிகுறிகளை யெல்லாம் அகற்றி விடவேண்டும் என்ற வேகம் ஜனங்களிடையே ஏற்பட்டதல்லவா!

அப்போது, "வாட்மென் சிலையை அகற்றுக" என்ற கோஷமும் உண்டாயிற்று. ஆனால் அதைச் சுதந்திர சர்க்கார் அகற்றுவதற்குள், அந்நகர மக்களே ஒரு நாள் இரவு அந்தச் சிலையை உடைத்து நொறுக்கி விட்டார்கள்!

ஜனங்கள் அத்துடன் நிற்கவில்லை. வாட்மென் சிலை இருந்த இடத்தில் விராகின் சிலையைப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்யலாயினர். அதற்கு இணங்க, விராக் ஞாபகச் சின்னக் கமிட்டி ஒன்றும் நிறுவப்பட்டது.

அக்கமிட்டி ஏற்பட்ட சில தினங்களுக்குள் தேவையான தொகை வசூலாகிவிட்டது. சில மாதங்களில் விராகின் சிலையும் தயாராகி விட்டது!

மேற்படி சிலையைத் திறந்து வைப்பதற்காக ஒரு நாள் நிச்சயிக்கப்பட்டது. திறப்பு விழாவன்று பல விடங்களிலிருந்தும் பதினாயிரக் கணக்கான ஜனங்கள் வந்திருந்தனர். சிலையைத் திறந்து வைப்பதற்காகப் பிரபல தலைவர்களில் ஒருவரும் விஜயம் செய்திருந்தார்.

முதலில் இரண்டு மூன்று பேர் பேசினர். பிறகு, சர்க்கார் தரப்பில் வாட்மென் கொலை வழக்கை நடத்திய ராவ்பகதூர் தட்டி பேசுவார் என்று அக்ராசனர் அறிவித்ததும் ஜனங்களிடையே மகத்தான பரபரப்பு ஏற்பட்டது. ஸ்தூல சரீரம் படைத்த ராவ்பகதூர் தட்டி மேடையின்மீதேறி நின்றதைப் பார்த்ததும் ஜனங்கள் கூக்குரலிட்டனர். "அந்தப் பாவியை இழுத்துக் கீழே தள்ளுங்கள்" என்று ஆரவாரம் செய்தனர். "அபசகுனம்போல் இவன் ஏன் மேடையில் ஏறினான்!" என்றனர் பலர்.

"எல்லாரும் அமைதியாக இருங்கள்" என்று அக்ராசனர் கேட்டுக் கொண்டார்.

சில விநாடி நேரம் மௌனம் நிலவியது. மேடையில் ஏறிய ராவ்பகதூர் விராகின் சிலையைப் பார்த்துக் கைகளைக் கூப்பிய வண்ணம் வணங்கினர்.

கூட்டத்திலிருந்து சிலர், "இது என்ன வேஷம்!" என்று ஆத்திரப்பட்டனர்.

ராவ்பகதூர் பேச ஆரம்பித்தார்.

"இந்த மேடையில் நின்று பேச நான் எவ்விதத்திலும் தகுதியற்றவன். அப்படி யிருந்தும் இங்கு பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்......நான் ஒரு பாவி! உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் பெரிய குற்றம் செய்துவிட்டேன். விராகையும் அவரது குடும்பத்தினரையும் எவ்வளவோ ஹிம்சித்தேன்."

"அதன் பலனை இதோ பார்!" என்று கூறிப் பலர் ராவ்பகதூர்மீது கற்களைவீசினர். மறுபடியும் அக்ராசனர் ஜனங்களைச் சாந்தப் படுத்தினர்.

மீண்டும் தொடர்ந்து ராவ்பகதூர் பேசலானர்.

"நான் இறப்பதாயினும் என் மனதில் உள்ளதைக் கூற நான் தயங்கப் போவதில்லை. நான் செய்த குற்றம் மகா கொடுமையானது. விரா



"எதுக்கப்பா தினமும் காய்கறி கூடையைத் தூக்கிண்டு வந்து நிக்கிறே இங்கே?"

"அம்மா கைராசி......அவுங்க வாங்கிறுக் கூடை உடனே காலியா யிடுதுங்க!"

"ஆமாம், ஆமாம்! அம்மா கைராசிக்காரிதான்! உன் கூடை மட்டுமா, என் மணிபர்ஸும்தான் காலியாகி விடுகிறது!"

யையும் அவரது சகாக்களையும் குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி வற்புறுத்தியவன் நான்தான். ஆனால் உண்மையில் விராக் நிரபராதி......''

ராவ்பகதூர் தட்டி இவ்வாறு கூறியதும் கூட்டத்திலிருந்த ஜனங்கள் யாவரும் ஆவேசம் கொண்டவர்களைப்போல் எழுந்தார்கள். விராகின் சிலையை அன்புடன் பார்த்தார்கள்.

எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் பெருகியது. அந்தக் குழப்பத்தில் ராவ்பகதூர் தட்டி மேடை மீது விம்மி விம்மி அழுவதை ஜனங்கள் கவனிக்கவில்லை. கைக்குக் கிடைத்ததை யெல்லாம் எடுத்து அவர் மீது விட்டெறிந்தனர். அடி பொறுக்க முடியாமல் ராவ் பகதூர் மேடை மீது 'பொத்'தென்று விழுந்து மூர்ச்சையானார்.

அக்ராசனரும் தொண்டர்களுமாகச் சேர்ந்து அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை செய்ததும் சிறிது பிரக்ஞை வந்தது.

அவரது உயிர் இனி அதிக நேரம் நிற்காது என்று டாக்டர்கள் சொல்லிவிட்டனர்.

'' ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா !'' என்று அக்கிராசனரும் மற்றும் சிலரும் ராவ் பகதூரைக் கேட்டனர்.

'' ஆம், நான் சொல்லுவதற்குள் ஜனங்கள் என்னை அடித்து விட்டார்கள். விராக் நிரபராதி. உண்மையான கொலையாளி வேறொருவன். வாட்மெனைக் கொன்றவனின் பெயர் மேஜர் நோயல் லிப்மென் ! விராக் தூக்கில் மாண்ட இருபத்து நாலு மணி நேரத்துக்குள் மேஜர் லிப்மெனும் வாட்மெனின் மனைவி டோராவும் உல்லாசமாக இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். லிப்மெனுக்கு விரோதமாக இருந்த ருஜுக்களை யெல்லாம் கலெக்டர் ரன்னிமெனும் அவரைச் சேர்ந்தவர்களும் மறைத்து விட்டார்கள் !...ஆ ! அதோ விராக் என்னை அழைக்கிறார் !'' என்று கூறிக்கொண்டே கண்களை மூடினார்.

படித்துப் பாருங்கள் !

கடவுள் சித்தம்

ஆயர்பாடி இளவரசன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். காட்டில் தன் சேனைத் தலைவனின் மகள் மாயாவதியைக் கண்டு காதலுற்றான். அப்பொழுது அங்கு வந்த மலைநாட்டுப் பகைவர்கள் மாயாவதியைச் சிறைப்படுத்திச் சென்று விடுகின்றனர். மலைநாட்டு மன்னன் மாயாவதியைப் பலாத்காரமாக மனைவியாக்க முயலுகிறான். மலைநாட்டு மன்னனின் மனைவி அங்கு தோன்றி மாயாவதியைக் காப்பாற்றி அவள் தப்பிச் செல்ல உதவி புரிகிறாள். இதை யறிந்த மலைநாட்டு மன்னன் மனைவியைச் சிறையில் அடைத்துவிட்டு ஆயர்பாடிமீது படையெடுத்துச் சென்று மாயாவதியை மீட்டுவர முயலுகிறான். தன்னால் இப் பெரிய போர் மூளுவதை விரும்பாத மாயாவதி தன் நாட்டு மக்களின் நலத்துக்காகத் தன்னையே தியாகம் செய்யத் துணிகிறாள். தன்னந் தனியளாக மலைநாட்டு மன்னனின் பாசறைக்குச் சென்று தன்னை ஏற்றுக்கொண்டு சண்டையை நிறுத்தும்படி வேண்டிக் கொள்கிறாள். மாயாவதியின் தியாக உணர்ச்சியால் மலைநாட்டு மன்னனின் மனம் மாறுகிறது. சண்டை நிற்கிறது. மலைநாடும் ஆயர்பாடியும் நட்புக் கொள்கின்றன. மாயாவதி தன் காதலனுடன் கூடி மகிழ்கிறாள்.

இந்தக் கதையை ஸ்ரீ கிருஷ்ண பகவான் நாரத முனிவருக்குச் சொல்லுவதுபோல நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நல்ல தமிழில், சக்தி வாய்ந்த தமிழ் நடையில், அற்புதமான முறையில் எழுதியிருக்கிறார் தமிழறிஞர் கலா நிலையம் ஸ்ரீ கே. ராஜகோபாலாச்சாரியார்.

விலை ரூ. 2—0—0 ; கிடைக்குமிடம் : தமிழ் நாடு வெளியீடு, பிராட்வே, சென்னை.

இந்தக் ''கடவுள் சித்தம்'' என்னும் நாடகத்தைச் சமீபத்தில் தக்கர்பாபா வித்தியாலய மாணவர்கள் மிக நன்றாக நடித்துக் காட்டினார்கள். நாடகத்தில் நடித்த நடிகர்களில் ஒரே ஒரு மாணவரைத் தவிர மற்ற எல்லோரும் ஹரிஜன மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. கிருஷ்ணனாக நடித்த கண்ணன், நாரதர் வேஷத்தில் வந்த சின்னசாமி, ஞானானந்தனாகத் தோன்றிய வெள்ளைச்சாமி, கௌமாரன் வேடம் புனைந்த பார்த்தசாரதி, நரசிம்மனாகக் காட்சியளித்த காசிநாதன், இன்னும் வித்யானந்தர், சுதாமன், வஜ்ரதரன், மாயாவதி, சத்தியவல்லி, பெருந்தேவி வேஷங்களில் முறையே தாமோதரன், ஆறுமுகம், காளிதாசன், காவன், முத்துச்சாமி, பாலசுப்ரமணியம் முதலியோர்கள் தோன்றிப் பளீர் பளீரென்று பாத்திரத்துக்கு ஏற்பப் பேசி நடித்தார்கள்.

அவர்களுடைய நடிப்பு வளர்ந்து வரும் நாடகக் கலைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியது.

ஸ்ரீ பாகவதக் கதைகள்

பாகவதத்தில் எத்தனையோ ரஸமான கதைகள், நீதிக் கதைகள், பக்திக் கதைகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் வடமொழிப் புலவர்கள் மூலம் கேட்டு அறிய வேண்டியதாக இருந்தது. இப்பொழுது தமிழ் தெரிந்தவர் யாவரும் படித்து அறியும்படியாக ஸ்ரீ நே. ஈ. வேங்கடேச சர்மா அவர்கள் பிரசுரித்திருக்கிறார்கள். கிடைக்குமிடம் : நே. ஈ. துரைசாமி ஐயங்கார், தக்ஷிண தேச க்ரந்தாலயம், 7, ரங்கராயர் அக்ரஹாரம், கும்பகோணம். விலை ரூ. 3.

சைவமும் சைவ உணவும்

'' சைவ உணவுக்கும் சைவத்துக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை. சைவ உணவு என்னும் சொற்றொடர் சைவர்களுக்கு மட்டும் சொந்தமன்று. எல்லா மதத்தினருக்கும் சொந்தமாகும். அப்படியானால் ஒரு குறிப்பிட்ட உணவுத் திட்டத்தைச் சைவ உணவு என்று கூறுவானேன் !'' என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு ஆராய்ச்சி பூர்வமான பதிலைத் தருகிறார் ஆசிரியர். விலை அணா 8.

மந்தரை சூழ்ச்சி

கைகேயி ராமன்பால் கொண்டிருந்த தூய அன்பைச் சிதைத்தவள், மந்தரை என்னும் கூனி. அவள் செய்த சூழ்ச்சித் திறனைக் கம்பர் வாக்கோடு நயம்பட எழுதி யிருக்கிறார் ஆசிரியர்.


விலை அணா 4. மேற்கண்ட இரண்டு நூல்களையும் எழுதியவர் திரு பொ. திரிகூட சுந்தரம்.

பிரசுரம் : சாந்தி நிலையம், தியாகராய நகர், சென்னை-17.

சிறிய சினிமாக்களுக்கு....

மிகச் சிறந்த விலை மலிவான

தியேட்டர் எக்விப்மென்ட்



இந்த விசேஷ அம்சங்களைக் கவனியுங்கள்......

S B-100 எக்விப்மென்டுடன் இவை அனைத்தும் உங்களுடையதே!

- உலகிலேயே மிகப் பிரபலமான ஆடோமாடிக் - லூப்ரிகேஷன் புரொஜெக்டர் யந்திரம்.
- அதி சக்தி வாய்ந்த ஆர்க் லாம்ப்.
- ஆர். சி. ஏ.யின் பிரசித்த "ரோடரி ஸ்டெபிலைஸர்" ஸவுண்ட்ஹெட்.
- பெட்டிபோலுள்ள பெடஸ்டல்.
- 6000 - அடி மகஸின்கள்.
- உண்மையான இரு வழி ஸ்பீக்கர் ஸிஸ்டம்.

S B-*100* வெளி வந்து ஒரு வருடம் ஆவதற்குள்ளேயே வேறெந்த ரகத்தையும்விட இந்த யந்திரங்களே அதிக அளவில் விற்பனையாகியுள்ளன — அவற்றின் சிறப்புக்கு இதுவே போதுமான அத்தாட்சி! S B-*100* அகாடமி விதிப் பிரமாணங்களுக்கிசைய பூரண திறமை வாய்ந்த சேவை அளிப்பது தவிர, அத்துடன் ஒப்பிடத்தக்க வேறெந்த எக்விப்மென்டையும்விட எவ்வளவோ விலை மலிவானதுமாகும்.

ஸிம்ப்ளெக்ஸ் X L யந்திரத்தைத் தவிர்த்து வேறு புரொஜெக்டர் யந்திரத்துடன் சேர்த்து வாங்குவதாயின் இது இன்னும் அதிக மலிவான விலைக்குக் கிடைக்கும்.

உங்கள் தேவைகளைக் குறித்து இவ் விலாசத்திற்கு எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் KAL.

தென்னிந்தியாவில் விநியோகஸ்தர்கள் :

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிட்.

பாரத் பில்டிங், 1/18, மவுண்ட்ரோட், மதராஸ். மற்றும் 36/79, ஸில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தந்தி: FAZCOY

வெளியிடுபவர்கள்: RCA போட்டோபோன் எக்விப்மெண்ட்ஸ் லிமிடெட், 9, மரீன் லேன்ஸ், பம்பாய்-1

நாட்டைக் காக்கும் காங்கிரஸ்

சுப்புடு

வோட்டுப் போடுங்க ஒங்களோட வோட்டைப் போடுங்க!
நாட்டைக் காக்கும் காங்கிரஸுக்கு வோட்டைப் போடுங்க!
காட்டுக் கூச்சல் போட்டு யாருவந்து கேட்டாலும்
நாட்டைக் காக்கும் காங்கிரஸுக்கே வோட்டைப் போடுங்க!



கிருபளானி கட்சி

"கஷக் உஷக் படார்" என்று கட்சி சொல்வாங்க
நிசக் குதிரை என்பாங்க—காது நீண்டதை!
"பொசுக்கிடுவோம் பஞ்சம் பட்னி பதவி தந்தாக்கா"
—ஆமாம்
பொசுக்குவாங்க நிச்சயமாக ஆளையும் சேர்த்து.

அம்பேத்கர்—சோஷலிஸ்ட் கூட்டுறவு



"ஒதுக்கப்பட்ட கட்சிக்குங்க வோட்டை ஒதுக்குங்க
செதுக்கப்பட்ட பொம்மைபோல் சேர்ந்து நிக்கிறோம்
பிதுக்கப்பட்ட கண்கள் கொண்ட லோகியா துரை—முதல்
அதுக்கும்மேலே அம்பதுபேர் அணைச்சு நிக்கறோம்.
"இதுக்கு ஒங்க வோட்டைத்தூக்கி இஷ்டமா போட்டா
பொதுக்கூட்டங்கள் போட்டு பேச்சு பொறிச்சுதள்ளுவோம்
மிதிக்கப்பட்ட மக்களை எல்லாம் மீட்டு கைதூக்கி—நல்ல
புதுக்குடித்தனம் போட வைப்போம் புவனம் புகழவே!"

என்று சொல்லி உங்கள் வோட்டைக் கேட்க வந்தாக்கா
"இன்றுபோயி நாளை வாங்க என் தம்பிங்களா
குன்றுபோல நேருஜிக்கு வோட்டைப் போட்டபின்—கொஞ்சம்
மென்றுதின்ன கடலை போட்டொரு 'ஓட்டை'த் தந்திடுவோம்"

சுயேச்சை



"இதிலுமில்லை அதிலுமில்லை நடுவில் நிற்கிறோம்
பதிலுமில்லை கேட்பாரில்லை மடுவில் நிற்கிறோம்" என்று
முதலைக் கண்ணீர் வடிக்குமிந்த முத்தண்ணா கோஷ்டி-வந்தால்
கதவைக் காட்டி கடிதில் கம்பி நீட்டச் சொல்லுங்க.

ஜன சங்கம்

மீசைக்கார தொப்பை மாமா மோசக் கட்சியாம்
தோசைதரே னென்றுசொல்லி ஆசைக் காட்டுறார்-இவர்போல
வேசக்கார வகுப்புப் பேய்கள் வோட்டுக் கேட்டாக்கா—நல்லா
ரோஷம் வரத் தக்க பேச்சு பேசி விரட்டுங்க.

கம்யூனிஸ்டு

"ரயிலைக் கவுத்து வயலைக் கொளுத்திப் புயலைக் கிளப்பிட்ட—நல்ல
பயலுகள்ளாம் கூடி ஒங்க வோட்டைக் கேட்கிறோம்" என்றால்
"தயவுசெய்து ஐயாமாரே போய்வாருங்க" என்று
தப்பாமல் சொல்லி அவங்களை அனுப்பிவைச்சுட்டு.

வோட்டுப் போடுங்க, உங்க வோட்டைப் போடுங்க!
நாட்டைக் காக்கும் காங்கிரஸுக்கு வோட்டைப் போடுங்க!!

பம்பாய் - மாதுங்கா

ஸ்ரீ ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் & சங்கீத சபா

கட்டிட நிதிக்காக

இசை விழா : வெள்ளி விழாக் கொண்டாட்டம் - 1952

மாதுங்கா, கிங்ஸ் சர்க்கிளிலுள்ள டான் பாஸ்கோ ஹைஸ்கூல் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேஷப் பந்தலில்

மேன்மை தங்கிய பம்பாய் கவர்னர் ராஜா மகராஜ் சிங் அவர்கள்
5-1-1952 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு விழாவைத் துவக்கி வைப்பார்கள்.

●

வெள்ளிக்கிழமை 4—1—1952 இரவு 8 மணி	ஸ்ரீ தியாகராஜர் தினம்	
	திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை	நாதஸ்வரம்
	கோரநாடு கோவிந்தராஜு பிள்ளை	— தவில்
சனிக்கிழமை 5—1—1952 மாலை 6 மணி	செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர்	— பாட்டு
	பாப்பா கே. எஸ். வெங்கட்ராமய்யா	— பிடில்
	பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்	— மிருதங்கம்
	உமையாள்புரம் என். கோதண்டராம அய்யர்	— கடம்
ஞாயிற்றுக்கிழமை 6—1—1952 மாலை 6 மணி	மதுரை மணி அய்யர்	— பாட்டு
	மாயவரம் கோவிந்தராஜு பிள்ளை	— பிடில்
	பழநி எம். சுப்ரமணிய பிள்ளை	— மிருதங்கம்
திங்கட்கிழமை 7—1—1952 இரவு 8 மணி	அரியக்குடி ராமாநுஜ அய்யங்கார்	— பாட்டு
	பாப்பா கே. எஸ். வெங்கட்ராமய்யா	— பிடில்
	பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்	— மிருதங்கம்
	உமையாள்புரம் என். கோதண்டராம அய்யர்	— கடம்
செவ்வாய்க்கிழமை 8—1—1952 இரவு 8 மணி	ஆலத்தூர் சகோதரர்கள்	— பாட்டு
	மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
	பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்	— மிருதங்கம்
	பழநி எம். சுப்ரமணிய பிள்ளை	— கஞ்சிரா
புதன்கிழமை 9—1—1952 இரவு 8 மணி	ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமணியம்	— பாட்டு
	மைசூர் டி. சௌடய்யா	— பிடில்
	பழநி எம். சுப்ரமணிய பிள்ளை	— மிருதங்கம்
வியாழக்கிழமை 10—1—1952 இரவு 8 மணி	ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள்	— பாட்டு
	திருவள்ளூர் சுப்ரமணியம்	— பிடில்
	பாலக்காடு குஞ்சுமணி	— மிருதங்கம்
	எஸ். வைத்தியநாதன்	— கடம்
வெள்ளிக்கிழமை 11—1—1952 இரவு 8 மணி	ஹிந்துஸ்தானி சங்கீதம்	
	கிதா ராய், மீனு கபூர், லக்ஷ்மி சங்கர், சாரதா நட்கர்னி, துர்ராணி, தலத் மஹ்மூத், முகம்மது ரபீ, சுரேந்திரா	
சனிக்கிழமை 12—1—1952 மாலை 6 மணி	ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம்	புல்லாங்குழல்
	டி. என். கிருஷ்ணன்	— பிடில்
	சி. எஸ். முருகபூபதி	— மிருதங்கம்
ஞாயிற்றுக்கிழமை 13—1—1952 மாலை 6 மணி	குமாரி கமலா —	பரதநாட்டியம், அபிநயம்

டிக்கெட்டுகள் விவரம்

தினசரி டிக்கெட்டுகள் :
ஆதரவாளர் வகுப்பு ரூ. 20/- ரிஸர்வ்டு ரூ. 10/- முதல் வகுப்பு ரூ. 5/4/- சிறுவர்களுக்கு அரைக் கட்டணம்

சீஸன் டிக்கெட்டுகள் :		ரிஸர்வ்டு :		முதல் வகுப்பு:	
நன்கொடையாளர்கள்	ரூ. 100/-	மெம்பர்கள்	ரூ. 20/-	மெம்பர்கள்	ரூ. 10/-
மெம்பரல்லாத ஆதரவாளர்கள்	ரூ. 50/-	மெம்பரல்லாதவர்கள்	ரூ. 30/-	மெம்பரல்லாதவர்கள்	ரூ. 15/-
மெம்பரான ஆதரவாளர்கள்	ரூ. 40/-	சிறுவர்கள்	ரூ. 15/-	சிறுவர்கள்	ரூ. 8/-

காரியதரிசிகளிடமும், தொண்டர்களிடமும் மற்றும் கீழ்க்கண்ட இடங்களிலும் டிக்கெட்டுகள் கிடைக்கும் :
டி. வி. துரைஸ்வாமி, துர்கா நிவாஸ், 51, சிவாஜி பார்க், தாதர். டெலிபோன் : 61543
எச். சிவராம் கிருஷ்ணன், அகில குன்ஜ், பிராமின்வாடா ரோடு, மாதுங்கா. டெலிபோன் : 60945



2. சூழ்ச்சி பலித்தது!

கமலத்தின் சகோதரர்கள் அவளிடம் உயிரையே வைத்திருந்தனர். கமலத்தின் கண் கலங்கினால் அவளுடைய சகோதரர்கள் அத்தனை பேருடைய கண்களும் கலங்கும். அவளது கண்களில் நீர் மல்கினால் இளவரசர்கள் அத்தனை பேருடைய கண்களிலும் நீர் மல்கும். கமலத்தின் தாமரை முகம் வாட்டமடைந்தால் சகோதரர்களுடைய முகங்களும் வாட்ட மடையும்.

ராஜகுமாரர்கள் கமலத்தினிடம் இத்தனை அன்பு வைத்திருப்பது இளைய ராணிக்கு நன்றாய்த் தெரியும். அவர்களை அரண்மனையை விட்டு அகற்றினாலன்றிக் கமலத்தைத் தான் ஒன்றும் செய்ய முடியாது என்று இளைய ராணி தெரிந்து கொண்டிருந்தாள். ஆனால் அவர்களை அரண்மனையை விட்டு எப்படித் துரத்துவது? ஒவ்வொரு ராஜகுமாரனும் வீராதி வீரனாயிற்றே! சித்தி தங்களையெல்லாம் அடியோடு தொலைத்துவிட விரும்புகிறாள் என்று அவர்களுக்குத் தெரிந்தால்

முடியாது. அவர்களுக்கு வேட்டையாடுவதில் மிகவும் பிரியமாயிற்றே! ஆகையினால் அவர்களை நாள் முழுவதும் வேட்டையிலேயே ஈடுபடும்படி செய்து விடவேண்டும் என்று தீர்மானித்தாள்.

இளையராணி தன்னுடைய சூழ்ச்சி நிறைவேறுவதற்காக இளவரசர்களிடம் மிகவும் அன்புள்ளவள் போல் நடித்தாள். அவளுடைய நடிப்பையும் வஞ்சனை உள்ளத்தையும் உணராத அரசன், அவளை மிகவும் நல்லவள் என்று தீர்மானித்து விட்டான். இதன் பலனாக, கொஞ்சங் கொஞ்சமாக அரண்மனை நிர்வாகம் முழுதும் இளையராணியின் கைக்குப் போயிற்று.

முதல் மந்திரியிலிருந்து அரண்மனைக் காவலாள் வரையில் எல்லோரும் அவளைக் கண்டு நடுங்கினர். அரசனே அவள் கைப் பொம்மையாக மாறிவிட்டான். தினந்தோறும் அதிகாலையிலேயே அவர்களுக்குக் குதிரைகள் தயாராகக் காத்துக் கொண்டிருக்கும். இள

2. சூழ்ச்சி பலித்தது!

கமலத்தின் சகோதரர்கள் அவளிடம் உயிரையே வைத்திருந்தனர். கமலத்தின் கண் கலங்கினால் அவளுடைய சகோதரர்கள் அத்தனை பேருடைய கண்களும் கலங்கும். அவளது கண்களில் நீர் மல்கினால் இளவரசர்கள் அத்தனை பேருடைய கண்களிலும் நீர் மல்கும். கமலத்தின் தாமரை முகம் வாட்டமடைந்தால் சகோதரர்களுடைய முகங்களும் வாட்ட மடையும்.

ராஜகுமாரர்கள் கமலத்தினிடம் இத்தனை அன்பு வைத்திருப்பது இளைய ராணிக்கு நன்றாய்த் தெரியும். அவர்களை அரண்மனையை விட்டு அகற்றினாலன்றிக் கமலத்தைத் தான் ஒன்றும் செய்ய முடியாது என்று இளைய ராணி தெரிந்து கொண்டிருந்தாள். ஆனால் அவர்களை அரண்மனையை விட்டு எப்படித் துரத்துவது? ஒவ்வொரு ராஜகுமாரனும்

முடியாது. அவர்களுக்கு வேட்டையாடுவதில் மிகவும் பிரியமாயிற்றே! ஆகையினால் அவர்களை நாள் முழுவதும் வேட்டையிலேயே ஈடுபடும்படி செய்து விடவேண்டும் என்று தீர்மானித்தாள்.

இளையராணி தன்னுடைய சூழ்ச்சி நிறைவேறுவதற்காக இளவரசர்களிடம் மிகவும் அன்புள்ளவள் போல் நடித்தாள். அவளுடைய நடிப்பையும் வஞ்சனை உள்ளத்தையும் உணராத அரசன், அவளை மிகவும் நல்லவள் என்று தீர்மானித்து விட்டான். இதன் பலனாக, கொஞ்சங் கொஞ்சமாக அரண்மனை நிர்வாகம் முழுதும் இளையராணியின் கைக்குப் போயிற்று.

முதல் மந்திரியிலிருந்து அரண்மனைக் காவலாள் வரையில் எல்லோரும் அவளைக் கண்டு நடுங்கினர். அரசனே அவள் கைப் பொம்மை

உணர முடியவில்லை; அவர்கள் மனம் முழுவதும் வேட்டையாடுவதில் ஈடுபட்டு விட்டது.

அரசன் எப்போதாவது தன் குமாரர்களைப் பற்றிய நினைவு வந்து விசாரித்தால், இளைய ராணி அவர்களைப் பற்றி ஒரே அடியாகப் புகழ ஆரம்பித்து விடுவாள்.

"மகாராஜா, தங்கள் குமாரர்களை முழுச் சோம்பேறிகள் என்று நினைத்துவிட்டீர்களா? வீராதி வீரர்களான அவர்கள் அந்தப்புரத்திலேயே சதா காலமும் இருப்பார்களா? அது அவர்களுக்கு அவமானமாயிராதா? மகா வீரராகிய தங்களுடைய புத்திரர்களும் வீரர்களாய்த்தானே இருப்பார்கள்? ஆகையினால் அவர்கள் தினமும் பொழுது விடிந்ததும் காட்டுக்கு வேட்டையாடச் சென்று விடுகிறார்கள்!" என்று கொஞ்சுதலாகப் பேசினாள் இளைய ராணி.

இளைய ராணியின் பேச்சைக் கேட்டதும் அரசனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

"தேவி, உனது மூத்தாள் பெற்ற பிள்ளைகளிடம் உனக்கு இத்தனை அன்பு இருக்கிறதே! அது நான் செய்த பாக்கியம்தான்! உன்னைப்போல் உத்தம குணம் படைத்த சித்தியை அடைய என் குழந்தைகள் பூர்வ ஜன்மத்தில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவர்கள் தாயில்லாக் குழந்தைகள் என்னும் நினைவே என்னை விட்டு அடியோடு அகன்று விட்டது! தேவி, என் பதினொரு பிள்ளைகளும் என் அன்புக்கு உரிய குமாரி கமலமும் இனிமேல் உன் குழந்தைகள். அவர்களைப்பற்றி நான் இனிக் கவலைப்படப் போவதில்லை! அவர்கள் உன்னிடம் அன்பாயிருக்கிறார்களா?" என்று கேட்டான் அரசன்.

உடனே இளையராணியின் மூளை வேகமாக வேலை செய்தது. அவள் வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் தானாக வந்து சேர்ந்தது. அவளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"எல்லோரும் என்னிடம் பிரியமாயிருக்கிறார்கள், மகாராஜா! கோபிக்காமல் இருந்தால் சொல்லுகிறேன்......?" என்றாள்.

"நானா? உன்னிடமா? ஒரு நாளும் கோபங் கொள்ள மாட்டேன், சொல்லு!"

"மகாராஜா, உங்கள் அருமைப் பெண் கமலம்தான் என்னைப் பாடாய்ப் படுத்தி வைக்கிறாள். நான் சொல்வது ஒன்றையும் காதில் போட்டுக் கொள்வதேயில்லை. நீங்கள் அவளுக்கு அளவு கடந்து சலுகை காட்டுகிறபடியினால், அவளுக்கு இந்த அரண்மனையில் யாரைக் கண்டாலும் அலட்சியமாயிருக்கிறது. தூக்கி எறிந்து பேசுகிறாள். ஆகையினால் அவளிடம் பேசுவதற்கே பயமாயிருக்கிறது.. அதுவும் என்னைக் கண்டால் அவளுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. நான் அவளிடம் எத்தனையோ விதமாக அன்பு பாராட்டிப் பார்த்தும் என் விஷயத்தில் அவளுடைய மனம் மாறுவதாகவே தெரியவில்லை!" என்றாள் இளைய ராணி.


"தேவி, கமலத்தைப் பற்றியா நீ சொல்லுகிறாய்? அவளா உன்னிடம் அப்படியெல்லாம் நடந்து கொள்ளுகிறாள்?" என்று ஆத்திரத்தோடு கேட்டான் அரசன்.

"ஆமாம், மகாராஜா! ஆமாம். உங்கள் அருமைக் கமலத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன். நான் சொல்லுவதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? நம்பிக்கை இல்லாவிட்டால் வேண்டாம். நீங்களே என்னை நம்பவில்லையென்றால்......!" என்று கூறி இளையராணி வாக்கியத்தை முழுவதும் முடிக்கவில்லை. அவள் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

அரசன் ஆசனத்திலிருந்து எழுந்து பெருகி வரும் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"தேவி, நீ என்னை ஏன் தவறாக நினைக்கிறாய்? உன்னைப் பற்றி யார் என்னிடம் என்ன சொன்னாலும் அதை நான் நம்ப மாட்டேன். கமலம் இப்படி உன்னிடம் நடந்து கொள்கிறாள் என்று கேட்டதும் எனக்கு மனசுக்கு மிகவும் வருத்தமாய்ப் போய்விட்டது. ஆகையினால் கொஞ்சம் பதறிப் போய் விட்டேன். இனிமேல் நான் அவள் விஷயமாக எதையும் காதில் போட்டுக் கொள்ள மாட்டேன். நான் அவளிடம் அளவுக்கு மீறி அன்பும் சலுகையும் காட்டித் தவறுதலாக வளர்த்து விட்டேன். அருமையாகப் பிறந்த பெண்ணல்லவா? இருக்கட்டும். இனிமேல் நீ தான் அவளைக் கவனித்து நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டும்!" என்றான் அரசன்.

இளைய ராணியின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா? எல்லையே இல்லை. (தொடரும்)



6. 'நான் இருக்கிறேன்...'

கையிலிருந்த விளக்கின் ஒளியால் பொன்னி கட்டில் இருக்கும் இடத்தைத் தெளிவாகக் கண்டு பிடிக்க முடிந்தது. அவள் மிகவும் பயத்தோடு தான் கட்டிலை நெருங்கினாள். அப்பொழுது அவள் இருதயத் துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது. கட்டிலில் ஒரு அழகான பெண் உட்கார்ந்திருந்தாள். பொன்னி அவளை உற்று நோக்கினாள். பாவம்! அந்தப் பெண் ஏதோ பேயைக் கண்டது போல் பொன்னியைக் கண்டு பயந்து நடுங்கினாள். ஐயோ! அந்தக் கண்களில்தான் எவ்வளவு பயம்! எத்தகைய அழகான முகம், அலுங்காத, வாடாத மலர்ந்த தாமரை போல்! அந்த முகம் பொன்னியின் மனத்தைக் கவர்ந்து விட்டது. அவர்கள் இருவருக்கும் இடையே விழுந்திருக்கும் நிட்டான மங்கலான ஒளியிடையே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே பிரமித்திருந்தனர். அந்த இரண்டு பேர் கண்களிலும் ஒரு வியப்பும், ஆர்வமும் அப்பொழுது நிறைந்திருந்தன. பொன்னியும் அவ்வளவு வசீகரமான ஒரு பெண்ணின் முகத்தை அதுவரை பார்த்ததில்லை. வேதாவும் பொன்னியைப்போல் அவ்வளவு அழகான கவர்ச்சிகரமான முகம் படைத்த பெண்ணைப் பார்த்ததில்லை.

"நீ யார்......!" என்று மறுபடியும் வேதா நடுங்கும் குரலில் கேட்டாள்.

பொன்னி உடனே அவளுக்குப் பதில் சொல்லவில்லை. அந்த அறைக் கதவை மெதுவாகச் சாத்திவிட்டு வந்து ஆவலோடு அவள் தோளைத் தொட்டு, "நான் உன் சிநேகிதிதான். பயப்படாதே! இந்த வீட்டிற்கு வேலை செய்ய வந்திருக்கிறேன்" என்றாள்.

"சரிதான். உன் பெயர் என்ன?"

"என் பெயரா...? பொன்னி!"

"இந்த வேளையில் எதற்காக நீ இங்கே வந்தாய்?" என்றாள் வேதா பயமும் நடுக்கமும் தணியாமலேயே.

"அதுவா!......நான் வந்து......அதாவது..." என்று சொல்லிக்கொண்டே பொன்னி தன் கையிலிருந்த விளக்கை ஒரு ஓரமாக வைத்துவிட்டு, "நீ எப்படி இருக்கிறாய் என்று பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்...... நீ இவ்வளவு அழகாக இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை. உன்னைப் போல இவ்வளவு அழகாக உள்ளவர்களை இதுவரையில் நான் பார்த்ததேயில்லை..." என்று குறும்பாகச் சொல்லிச் சிரித்தாள்.

வேதா அவளுக்கு உடனே பதில் சொல்லவில்லை. அவள் மனதிலிருந்த பயம் ஒருவிதமாகத் தணிந்தது. ஆனால் அந்த நிசி வேளையில் வந்து தன்னிடம் இவ்வளவு சரளமாகப் பேசத் தொடங்கிய பொன்னியைப் பற்றிய வியப்புத்தான் தணியவில்லை. "நான் கூட உன்னைப் போல இவ்வளவு அழகான பெண்ணைப் பார்த்ததில்லை......இப்பொழுதுதான் உன்னைப் போல் என் வயதிற்குச் சமதையான பெண்ணுடன் பேசுகிறேன்......இது உனக்கு விநோதமாயில்லையா...!" என்றாள்.

"இது விநோதமுமில்லை; வேடிக்கையுமில்லை. கொடுமை; ராட்சதத்தனம்!" என்று ஆத்திரத்துடன் சொன்ன பொன்னி தன்னை ஒருவிதமாக அடக்கிக் கொண்டு, "வெட்கக்கேடு! இந்தப் பேயும் பிசாசும் நடமாடும் வீட்டில் மனித வாசனையே படாமல் உன்னை அடைத்து வைத்திருப்பது ரொம்பக் கேவலம்......உனக்கு வெளியே சென்று இரண்டு பேருடன் பேசிப் பழகி நாலையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசையாக இல்லையா! நீ குழந்தைப் பருவத்திலிருந்து ஒருவருடனும் பழகியதே இல்லையா!" என்று படபடப்போடு கேட்டாள்.

வேதா சில வினாடிகள் ஒன்றும் பேசாமல் சித்திரப் பதுமைபோல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பரிதாபமான கண்கள் பொன்னியின் முகத்தை ஆர்வத்தோடு பார்த்தன. "சில சமயம் நான்......நான் நினைப்பேன்......" என்றாள் தன் குழையும் குரலில்.

"ஹும்! அப்படி நினைக்கக் கூட உனக்குத் துணிச்சல் ஏற்படாது போலிருக்கிறது. உனக்கு ஏதாவது உடம்பிலோ மூளையிலோ கெடுதலா!"

"அதெல்லாம் இல்லையே"

"அப்படியானால் உன்னை ஏன் இங்கே அடைத்து வைக்கணும்...! ஏதாவது தண்டனையா!"

வேதா ஒரு பெரு மூச்சு விட்டு, "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றாள். அவள் முகம் துக்கத்தாலும் சோகத்தாலும் வாடியது. "பெரியம்மா நான் மிகவும் கேவலமாகவும் அடக்கமில்லாமலும் நடக்கிறேன் என்கிறாள்..." என்றாள் குழந்தை போல்.

"ஓஹோ! அவள் ஏதாவது பிதற்றிக் கொண்டிருக்கட்டும். நீ இனிமேல் அவளை லட்சியம் செய்யாதே. மனித வாசனையே வீசாத இந்தப் பாழும் மடத்தில் நீ கேவலமாகவும் அடக்கமில்லா

மலும் நடந்துகொள்ள எங்கே இடம் இருக்கிறது! வழிதான் ஏது! எங்கே உனக்கு சுதந்திரமிருக்கிறது! அப்படி ஏதாவது நடந்ததுண்டா!''

''நேற்று ராத்திரி அந்த டாக்டர் என் அறைக்கு வந்து விட்டாராம். இதில் என்ன தவறு! அதுவும் நான் ஒன்றும் தவறு செய்யவில்லை...'' என்று வேதா விம்மினாள்.

''டாக்டரா...! யாரது!'' என்றாள் பொன்னி ஆச்சரியத்துடன்.

''அவர் யாரோ! நகரத்திலிருந்து வந்திருந்தார். ரொம்ப நல்ல மனிதர்'' என்றாள் வேதா வெட்கத்துடனும் அச்சத்துடனும்.

''அவரா...! அவரை எனக்கு நன்றாகத் தெரியுமே! ரொம்ப நல்ல மனிதர். எல்லோருக்கும் அவரிடம் பிரியமுண்டு. அவர் இங்கு வந்திருந்தாரா...! சரி! அவர் வந்த போது என்ன நடந்தது!'' என்று கேட்டாள் பொன்னி.

வேதா வெட்கத்தினால் தலை குனிந்து கொண்டாள். அர்த்தமில்லாமல் அப்பொழுது அவள் முகத்தில் ஏற்பட்ட வெட்கக் குறியிலிருந்து அவள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி எழுந்து போராடுகிறது என்பதைப் பொன்னி எளிதாக உணர்ந்து கொண்டாள். முதல் நாள் இரவு நடந்தவைகளை நினைக்கவே வேதாவின் உள்ளம் சில்லிட்டது. ''இல்லை, அதை யெல்லாம் பற்றி நீ கேட்காதே!'' என்று பொன்னியின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு வேதா கெஞ்சினாள்.

பொன்னி அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டு, ''நீ எதற்கும் பயப்பட வேண்டாம். எனக்கு எல்லாம் தெரிந்து விட்டது. நல்ல மனிதர்தான் உன்னிடம் வந்தவர். உலகத்தில் யாருக்கு உன் மீது இரக்கமில்லா விட்டாலும் கடவுளுக்குக் கூடவா இரக்கம் இல்லாமல் போய்விடும்! இதோ பார்! என்னை நீ நம்பு. நான் உன் உயிருக்கு உயிரான சினேகிதி. உனக்கு உதவிசெய்யத்தான் நான் இங்கே வேலைக்கு வந்திருக்கிறேன். என்னிடம் எதையும் ஒளிக்காதே. தெரிந்ததா!'' என்றாள்.

வேதா எதை நினைத்துக் கொண்டாளோ, அவளை அறியாமல் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. உதடுகள் துடித்தனவே தவிர வாயிலிருந்து எவ்விதமான வார்த்தைகளும் எழும்பவில்லை. கண நேரத்தில் அவள் முகம் வாடிக் கண்கள் கலங்கின. இருதயத்தில் குமைந்து நெருக்கும் துயரத்தைத் தாளமாட்டாதவளாய் பொன்னியை இறுகத் தழுவிக் கொண்டு அவள் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசித்து விசித்து அழத்தொடங்கி விட்டாள்.

பொன்னி வேதாவிற்கு எவ்விதமான ஆறுதலைச் சொல்லுவது என்று தெரியாமல் திகைத்துப் போய்க் கற்சிலைபோல் அமர்ந்திருந்தாள்.

சில நிமிடங்களில் வேதாவின் இருதயத்திலிருந்த துயரச் சுமை கரைந்து விட்டது. வேதா தன் துயரத்தை ஒரு விதமாக அடக்கிக் கொண்டு பொன்னியைப் பார்த்தாள். வாடிச் சிவந்திருந்த அவளுடைய கண்களில் விவரிக்க முடியாத சோகமும் பயமும் தோய்ந்திருந்தன.

''வேதா! எதற்கும் நீ பயப்படாதே. எல்லாம் சரியாய்ப் போகும். நான் இந்த வீட்டிற்கு வந்து விட்டேன். இனிமேல் நீ கவலையே பட வேண்டாம். உன்னை இந்தப் பிசாசுகளிடமிருந்து விடுவித்தால்தான் என் மனசு நிம்மதிப்படும். உன் மனதிலுள்ளதை அப்படியே என்னிடம் சொல்லு. உன்னிடம் எவ்வளவோ கேட்க வேண்டுமென்று எனக்கு ஆவல். உனக்கு எந்த உதவியும் நான் செய்யச் சித்தமாய் இருக்கிறேன்...'' என்றாள் பொன்னி அனுதாபத்தோடு.

''சரி! நான் சொல்லுகிறேன்......'' குரல் தழுதழுக்கச் சொல்லத் தொடங்கினாள் வேதா.

அவள் கதை பரிதாபமானதுதான். அது பேதை உள்ளம் படைத்த அவளாலேயே சொல்லப்பட்ட போது அவள் நெஞ்சில் குமுறிக்கிடந்த துக்கம் சோகமெல்லாம் பீறிட்டுக் கொண்டு வந்தன. அவள் நினைவு தெரிந்த நாளிலிருந்து ஜனச் சந்தடியோ உலக வாசனையோ துளியும் எட்டாத கிராமத்திற்கு ஒதுப்புறமாய் உள்ள பயங்கரமான அந்தக் கட்டிடத்தில்தான் வாழ்ந்து வருகிறாள். அவளுக்கு அந்தக் கட்டிடத்தைத் தவிர உலகம் எவ்வளவு பெரியது, அதிலுள்ள மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள், கால வேகத்தில் எத்தகைய மாறுபாடுகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதெல்லாம் தெரியாது. அவளுக்குச் சிறிது ஆறுதலாய் இருந்தவள் அவளுடைய சிறிய தாயார் சாரதா தான். பாவம், அவளும் வேதாவிடம் அன்பையும் பரிவையும் ரகசியமாகத்தான் காட்ட முடிந்தது. ஏனென்றால் அதற்கு இடையூறாக இருந்தான் மரகதம். மரகதமே மூத்தவளானதினால் அவளுடைய ஆக்ஞைக் கெல்லாம் சாரதா கட்டுப் பட்டு இயற்கையாகத் தன் மனதில் எழுந்த அன்பு, ஆசை, பாசம் எல்லாவற்றையும் குலைத்துக் கொண்டு வாழவேண்டி யிருந்தது.

எப்பொழுதும் மரகதம்தான் அந்த வீட்டில் அதிகாரம் செலுத்தி வந்திருக்கிறாள். மரகதத்தின்



அடக்கு முறைக்கும் கொடுமைக்கும் சாரதாவும் வேதாவும் இணங்கி நடந்து தங்கள் வாழ்க்கை வறண்டதாகச் செய்து கொள்ள வேண்டியிருந் தது. மரகதம் வீட்டில் நடத்திய இந்த அடக்கு முறை வழியால் வேதாவிற்கு வெளியுலகப் பரிச் சயமே இல்லாமல் போய் விட்டது. குழந்தைப் பருவத்திலிருந்து அன்று வரை அவளுக்குச் சினே கிதமானவர்கள் ஒருவருமே இல்லை. அந்த வீட்டி லிருந்த மரகதம், சாரதா, வேலைக்காரி செங்கம்மா என்ற மூன்று விநோதமான ஜீவன்களைத் தவிர வேறு யாரையுமே தெரியாது. இந்தப் பரந்த உல கில் வேறு ஜீவன்கள் உண்டா இல்லையா என்பதே அவளுக்குச் சந்தேகம்.

மரகதத்தின் கட்டுப் பாட்டையும் மீறி அவ ளுக்குத் தெரியாமல் சாரதா அவளுக்குச் சிறிது கல்வி புகட்டி இருந்தாள். அதாவது, அவளுக்குச் சிறிது எழுத்துக் கூட்டித் தமிழ் வாசிக்கத் தெரி யும். தப்பும் தவறுமாக ஏதோ கொஞ்சம் தமிழ் எழுதத்தெரியும். அவ்வளவுதான். சாரதா அவ ளுக்குச் சில பாடல்கள் சொல்லிக் கொடுத்திருந் தாள். அவைகளெல்லாம் கடவுளைப் பற்றிய பாடல்கள்தான். அவைகளின் பொருள் சாரதா வுக்கே சரியாக விளங்காத போது வேதாவுக்கு எப்படித் தெரியும்! சாரதா சில சமயம் வேதா வுற்குச் சில கதைகள் சொல்லியிருக்கிறாள். அவைக ளெல்லாம் யானை, குதிரை, நரி, சிங்கம் என்று ஏதாவது மிருகங்களைப் பற்றிய கதையாக இருக் குமே தவிர மனித வாழ்வின் வாசனையே படாத வைகளாகத்தான் இருக்கும். அவளுக்குப் பதினேழு



வயதாகிவிட்டது. முதல் நாள் இரவு அவளுக்குச் சிறிது ஆறுதலாக இருந்த சாரதாவும் இறந்து விட்டாள். காலம் இப்படியே ஓடிவிட்டது.

சாரதா இறந்து விட்டதால் ஒரு திசையிலிருந்த ஒளி அவிந்து இருள் சூழ்ந்து விட்டது. ஆயினும் இன்னொரு திசையிலிருந்து ஒரு ஒளி தோன்றியது. அந்த ஒளி அவள் மனதில் ஒரு நம்பிக்கையையும் ஆறுதலையும் உண்டாக்கியது. அந்த ஒளி வேறு எதுவும் இல்லை. டாக்டர் பரசுராமன்தான்!—அவ ருடைய உருவமும் அன்பு பொழியும் பார்வை யும் அவள் நெஞ்சில் நிரந்தரமாகப் பதிந்து விட் டன. அதை அவளால் கண நேரம்கூட மறக்க முடியாது. இப்பொழுது அவளுக்கு இன்னொரு துணை; தன்னுடைய துயரத்தை அறிந்து வலு விலேயே தனக்கு உதவி செய்ய வேலைக்காரியாக வந்திருக்கும் ஒரு தெய்விகத்தோழி பொன்னி......

வேதா எப்படியோ எல்லாவற்றையும் பொன் னியிடம் சொல்லி முடித்தாள். எல்லாவற்றையும் அவளால் கோவையாகச் சொல்ல முடியாவிட்டா லும் வினையறியாத குழந்தை போல் உள்ளதை உள்ளபடியே பொன்னியிடம் சொல்லிவிட்டாள். தன்னைப் போன்ற இளம் பெண்ணாகிய பொன்னி யிடம் தன் மனதில் புதைந்துகிடந்த துயரத்தை யெல்லாம் சொல்லி விட்டதில் அவளுக்கு ஒரு பெரிய ஆறுதல். "நான் என்ன செய்ய முடியும்! எனக்கு ஏன் கடவுள் இந்தச் சோதனையெல்லாம் கொடுக்கிறார்! நான் என்ன தவறு செய்தேன்!" என்று பொறுமலோடு சொல்லி முடித்தாள்.

அதுவரையில் வேதா சொல்லிய கதையைக் கேட்டுக் கொண்டு வந்த பொன்னி துடிப்புடன், "நீ ஒரு தப்பும் செய்யவில்லை. இன்னும் நீ பச்சைக் குழந்தைபோல்தா னிருக்கிறாய். இதெல்லாம் கடவுள் செய்கிற சோதனை இல்லை. உன் பெரி யம்மா மரகதமும், வேலைக்காரி செங்கம்மாவும் செய்கிற அட்டகாசம்தான்! இதற்கு ஏதோ காரணம் இருக்கிறது. அது உனக்குத் தெரிய வில்லை. இதற்கெல்லாம் தகுந்தாற்போல் அவர் களுக்கு நான் சரியான தண்டனை வாங்கித் தரு கிறேன், பார்!" என்றாள் பொன்னி.

"வேண்டாம். வேண்டாம். அப்படி எல்லாம் ஏதாவது செய்து விடாதே. இது யாருக் காவது கடைசியில் ஆபத்தாக முடியும்...... நான் குழந்தையாக இருந்தபோது ஒரு தடவை ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். தோட் டத்தில் நிறைய மல்லிகைப் பூ மலர்ந்திருந்தது. அதைப் பறிக்க வேண்டுமென்ற ஆசையில் ஒரு வருக்கும் தெரியாமல் தோட்டத்திற்குப் போய் விட்டேன். அதை எப்படியோ பெரியம்மா மரகதம் பார்த்து விட்டாள். அன்று நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும். என்னை நன்றாக அடித்து விட்டாள். அதோடு விடவில்லை. தோட் டத்தில் பூச்செடிகள் இருக்கிறதினால்தானே நான் என் அறையை விட்டு வெளியே வந்தேன்! ஆகவே, அவைகளையெல்லாம் அழித்து விடுகிறேன் என்று சொல்லி எல்லா புஷ்பச் செடிகளையும் செங்கம்மா விடம் சொல்லி அழித்து விட்டாள். சாரதா சின்னம்மா அந்தச் செடிகளை அழிக்க வேண்டாம் என்று எவ்வளவோ கெஞ்சியும் பெரியம்மா கேட்க வில்லை. நான் வீட்டை விட்டு வெளியே வந்தால் என்னை யாராவது தூக்கிக் கொண்டு போய் விடு கிறார்கள். உலகத்தில் உள்ள மற்றவர்களெல்லாம் பெரிய ராட்சதர்கள் என்றே என்னிடம் அடிக்கடி சொல்லி வந்தாள். நானும் அவள் சொல்லுவதை அப்படியே நம்பி வந்தேன்" என்றாள் வேதா.

"அப்படியா சமாசாரம்! கிராதகி...! அவள் தான் ராட்சசி. நீயே நினைத்துப் பாரு, அவள் சொன்னது சரியாகப் படுகிறதா என்று! நாங்களெல்லாம் உனக்கு ராட்சத ஜாதியாகப் படுகிறதா! டாக்டரைப் பார்த்தாயே, அவர் எவ்வளவு அன்போடு நடந்து கொண்டார்! இதோ என்னையும் பார்க்கிறாய். உன் கண்ணுக்கு நான் ராட்சசி போலவா படுகிறேன்!" என்று கேட்டாள் பொன்னி படபடப்போடு.

வேதா அவளைப் பரிதாபத்தோடு பார்த்தாள்.

"உனக்கு ஒன்றும் தெரியாது. இன்னும் நீ குழந்தைபோலத்தானிருக்கிறாய். மரகதம் உன்னை அப்படி வளர்த்திருக்கிறாள். அவள் மனதில் ஏதோ குரோதத்தை வைத்துக் கொண்டு ஏதோ வஞ்சனை தீர்த்துக் கொள்ளப் பார்க்கிறாள்" என்று சொன்ன பொன்னி சில நிமிடம் மௌனமாக இருந்தாள்.

"இதோ பார்! நீ எல்லாவற்றையும் என்னிடம் சொல்லி விட்டாய். நானும் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். என்னுடைய ஊர் இங்கிருந்து இரண்டாவது மைலில் இருக்கும் குருவிக்குளம் என்பதுதான். என் வீட்டில் தாயாரும் பாட்டியும் இருக்கிறார்கள். என் தகப்பனார் தான்ய வியாபாரம் செய்கிறார். நாங்கள் ஏழைதான். ஆனால் நல்ல இருதயம் படைத்தவர்கள். நீ படித்த அளவுகூட நான் படிக்கவில்லை. நான் இங்கு வயிற்றுப் பிழைப்பை நடத்த முடியாமல் வேலைக்கு வரவில்லை. இங்கே எதற்காக வந்தேன், தெரியுமா! இங்கே இருக்கிறவர்கள் விஷயமெல்லாம் பூடகமாக இருக்கிறதே! ஊரில் பலர் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்களே! உள்ள விஷயம் என்னவென்று தெரிந்து கொள்வோமே என்றுதான் வந்தேன். இங்கே வந்து எந்த ரகசியமும் இது வரை விளங்கா விட்டாலும் இங்கே நடக்கிற அக்கிரமங்களெல்லாம் விளங்கி விட்டது. உனக்கு ஏதாவதொரு நல்ல வழியைச் செய்யாமல் நான் இங்கிருந்து வெளியே போக மாட்டேன்" என்றாள் ஆவேசமாகப் பொன்னி.



கணவன் :—இப்போது என்னத்துக்காக அழுகிறாய்? நான்தான் நீ பேச ஆரம்பித்ததிலிருந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!

மனைவி (விம்மிக் கொண்டே):— நான் சொல்லுவதெல்லாம் உங்களுக்கு அவ்வளவு அலட்சியமாகத் தானே இருக்கிறது?

வேதா ஒரு பெருமூச்சு விட்டாள். "உனக்கு அந்த டாக்டரிடம் ஆசை விழுந்து விட்டது என்று எனக்குத் தெரிந்து விட்டது. அவருக்கும் அப்படித்தான் இருக்கும். அது எனக்குத் தெரியும். எப்படியாவது உன்னை அவரிடம் சேர்த்து விடுகிறேன்..." என்றாள் ஆவேசத்தோடு பொன்னி.

வேதா தன் கண்களை அகல விழித்து அவளை ஆர்வத்தோடு பார்த்து, "இது எப்படி முடியும்...!" என்று கேட்டாள்.

"ஏன் முடியாது! எல்லாம் முடியும். இதோ பார்! இங்கே நான் உன்னை பார்க்கக் கூடாது என்று நான் வந்த போதே கண்டிப்பாக உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் அதையெல்லாம் நான் லட்சியம் செய்யப் போகிறேனா! நான் எப்படியாவது சாமர்த்தியமாக ஒவ்வொரு நாளும் உன்னைப் பார்த்துப் பேசாமல் இருக்க மாட்டேன். ஆனால் இதெல்லாம் உன் இஷ்டத்தைப் பொறுத்தது. நான் இங்கு தங்குவதும் போய் விடுவதும் உன் இஷ்டம். உன் தைரியத்தைப் பொறுத்தது" என்றாள் பொன்னி.

வேதா அவளை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டே, "பொன்னி! நீ எதற்காக எனக்காக இவ்வளவு சிரமப்பட வேணும்!" என்றாள்.

"நான் சிரமப் படுவதற்காக நீ கவலைப்பட வேண்டாம். நான் இங்கு இருக்க நீ இஷ்டப் படுகிறாயா, இல்லையா! இதெல்லாம் நான் என்னைப் போல நீயும் ஒரு பெண் என்பதற்காகத்தான் செய்கிறேன். நான் இந்த வீட்டிற்கு வேலைக்காரியாக வந்தாலும் உன் சிநேகிதி; உன் சகோதரி போல" என்றாள்.

"பொன்னி, உன்னைப் போல் எனக்கு யார் உதவி செய்யப் போகிறார்கள்! என்னோடு இவ்வளவு அன்பாகவும் பாசமாகவும் பேசும் ஒருத்தியை இது வரையில் நான் பார்த்ததே இல்லை. ஆனால் நாம் பெரியம்மாளைக் கொஞ்சம் கூட விரோதித்துக் கொள்ளக் கூடாது..." என்றாள் வேதா அச்சத்தோடு.

"உன் பெரியம்மாளை எங்காவது பாழும் கிணற்றில் தள்ளிப் பாறாங்கல்லைத் தூக்கிப் போடு. நீ அவளுக்கு எதற்காகப் பயப்பட வேண்டும்! போகட்டும், அதெல்லாம் போகப் போக, தானே தெரியும்! இன்னும் உன்னோடு எவ்வளவோ பேச வேண்டியிருக்கிறது. நாம் ரொம்ப ஜாக்கிரதையாகச் சில காரியங்கள் செய்யவேண்டும். அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று சொல்லி விட்டுப் பொன்னி கை விளக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

வேதா ஆவலோடு அவள் தோளைக் கட்டிக் கொண்டு, "எனக்கு நீ வந்ததில் எவ்வளவோ சந்தோஷம். உன்னால் என் மனதிலிருந்த கவலையெல்லாம் எங்கோ போய்விட்டது. நான் இவ்வளவு நாள் தனிமையில் எவ்வளவு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பேன் என்று உனக்குத் தெரியாதா!" என்றாள் பொங்கி வரும் உணர்ச்சியோடு.

"எனக்குத் தெரியும். ஆனால் இனிமேல் நீ தனிமையில் கஷ்டப்பட வேண்டாம். நான் இருக்கிறேன். கொஞ்சம் கூடப் பயப்படாதே!" என்று சொல்லி விட்டு அவளை அன்போடும் ஆவலோடும் பார்த்துக் கொண்டே போனாள் பொன்னி.

அவள் மாடிப்படியி லிருந்து மெதுவாகக் கீழே இறங்கி வந்தபோது அவள் எதிரில் மாடிப் படிக்குச் சமீபமாகச் செங்கம்மா கையில் ஒரு விளக்குடன் பேயோ பூதமோ என்று அச்சமடையும் வண்ணம் அவளையே உக்கிரமாகப் பார்த்த வாறு நின்று கொண்டிருந்தாள். (தொடரும்)

தமிழ் நாட்டில் இதுவரை வெளிவராத முறையில் தயாரான பஞ்சாங்கம்!

சோதிடர்களுக்கும், ஏனைய பொது மக்களுக்கும் உபயோகமான
பல அரிய விஷயங்களைக் கொண்டது!

நந்தன வருஷ ஸ்ரீமகள்

தமிழக பஞ்சாங்கம்

சுத்த வாக்கிய கணிதம்

1952 - 53

இட்டமொழி பஞ்சாங்கக் கணிதர்

திரு. சிவசூரிய நாராயண பிள்ளை அவர்கள் கணித்தது

இந்தப் பஞ்சாங்கத்தில் குளிகாதி ஏழு உபக்கிரக (பகல்–இரவு) காலம் தூமாதி ஐவர் ஸ்புட விபரம். இராகு (பகல்–இரவு) காலம் சகாதேவர் தொடுகுறி சாஸ்திரம், ஆந்தை சீரல் பலன், மகாதேச பலன், கிரக தோஷங்களுக்கு நிவர்த்தி, 1921-ம் வருஷம் முதல் நாற்பது வருஷங்களுள் ஆங்கில தமிழ்த் தேதிகளுக்கு ஓர் அட்டவணை, மணவருக்கும் முறை, விநாயக ராரூட வாக்கிய சக்கரம் ஆகிய பல அரிய பெரிய விஷயங்களையும், எவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் கணிக்கப் பெற்ற பஞ்சாங்கம் இது ஒன்றேயாகும்.

அழகிய மூவர்ண அட்டைப் படத்துடன் டிம்மி 104 பக்கங்கள்

விலை ஆறு அணாதான்

வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு

பொங்கல் தினத்தன்று வெளி வருகிறது

உங்கள் தேவைக்கு இன்றே எழுதுங்கள்:

ஸ்ரீமகள் கம்பெனி, 122, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை-1

பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும்





SISTA'S WL-41 R-TAMIL

ப்ரூக்லாக்ஸ்

மலச்சிக்கலை

ஒரே இரவில் அகற்றுகிறது

ஏஜெண்டுகள்:

ஓரியண்டல் மெர்க்கண்டைல் ஏஜென்ஸி

99.A. அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்-1.



வாழ வைத்தவள்

மாயா

"ராஜு, ராஜு!" என்று செல்லமாக அழைக்கும் பழகிய குரல் கேட்டதும், ஒருக்களித்துப் படுத்திருந்த ராஜு திரும்பி அறை வாசலை நோக்கினான். சிறு குழந்தையின் கண்களுக்குப் பூதம் என்ற கற்பனை காட்சி யளிப்பதுபோல அவன் கண்களில் வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த அவன் தந்தை தோற்றமளித்தார். உடம்பிருந்த பலவீனத்தில் மூச்சே சற்று நின்று விடும் போலிருந்தது ராஜுவுக்கு. இனம் தெரியாத கலவரமும், பயமும் பிரமிப்பும் அவனை உடம்பைப் போலக் கௌவிக் கொண்டன. என்ன செய்வதென்று புரியாமல் குழம்பித் தவித்துப்போய், "அப்பா!" என்று குழறிய வார்த்தைகளே அவனிடமிருந்து வெளிவந்தன. "வாங்கோ!" என்று அழைப்பும் விடுக்க அவன் வாய் ஆசைப்பட்டாலும், வார்த்தைகள் வெளிவரத் தயங்கி உதடுகளிலேயே அடங்கின.

ராஜு, சர்மாவையே பரிதாபம் ததும்பப் பார்த்தான். ஏதாவது பேசி, அங்கு குடிகொண்டிருந்த மௌனத்தை, அவனுக்குப் பிடிக்காத அந்த நிலையைக் கலைத்துவிட மனம் விழைந்தாலும் பேச வாய் வரவில்லை.

சர்மா குனிந்து அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்து விட்டு, "ஜுரம் இன்னும் கொஞ்சம் லேசாக அடிக்கிறதே!" என்றார்.

கோழைக்குத் தைரியம் பிறந்ததுபோல் ராஜு உணர்வு பெற்றான். "இரண்டு மூன்று நாளுக்கு முன்பு இருந்ததற்கு இப்பொழுது கொஞ்சம் தேவலை" என்று சொல்லிவிட்டுத் தான் பேச முடிந்த தைரியத்தைப் பற்றித் தனக்குள்ளே பெருமைப் பட்டுக் கொண்டான்.

அப்பொழுதுதான் எதிர்வீட்டிலிருந்து பால் வாங்கிக் கொண்டு திரும்பி வந்த ஜானகி, ரேழி அறையில் ராஜுவின் அருகில் தன் மாமனாரைக் கண்டதும் திக்பிரமை யடைந்தாள். ராஜு படுத்த படுக்கையாகி விட்டதால் நைந்து போன அவள் இளம் மனத்தில், 'சர்மாவின் வருகை ஏதாவது புதுப் புயலுக்குக் காரணமாகி விடுமோ!' என்ற சம்சயம் எழுந்தது.

எங்கிருந்தோ ஒரு துணிச்சல் வந்து அவளை ஆட்கொண்டது. பால் டம்ளரை அறை வாசலிலிருந்த பிறையில் வைத்து விட்டு, அறைக்குள் நுழைந்து சர்மாவின் பாதங்களினருகே குனிந்து நமஸ்கரித்து விட்டு எழுந்தாள். ஜானகியின் செய்கை சர்மாவின் உடம்பில் புல்லரிப்பைத் தூண்டியதுடன் ராஜுவையும் அவளுடைய விவேகத்தைக் குறித்துப் பெருமை கொள்ளும்படி செய்தது.

"அப்பாவுக்குக் காப்பி கொண்டு வருகிறாயா!" என்று கேட்டான் ராஜு.

"இதோ!" என்று சொல்லி மின்னலாக மறைந்தாள் ஜானகி.

அவள் உடம்பில் ஏற்பட்ட நடுக்கம் இன்னும் தணியவில்லை. பதட்டம் அடங்கவில்லை. அடுப்பில் தளைத்த வெந்நீரை 'பில்டரி'ல் ஊற்றி விட்டு, பாலை அடுப்பில் வைத்து விட்டு எழுந்து நின்றாள். அவள் கண்கள் தாழ்வாரத்தைக் கடந்து ஜன்னல் வழியே பாய்ந்து அதற்கு அடுத்திருந்த அறையை ஊடுருவிப் பார்த்தன.

அப்பாவும் பிள்ளையும் பேச்சற்ற மோன நிலையில் அமர்ந்திருந்தனர். ஜானகி காப்பியுடன் உள்ளே நுழைந்தாள். ஜானகியின் பணிவிலும் விரைவிலும் சர்மாவின் அத்தனை வைராக்கியமும் தகர்ந்து விட்டது. வேறு வழியற்றவர்போலக் காப்பியை எடுத்துக் குடித்து விட்டு அறையைச் சுற்றிலும் மிரள மிரள விழித்தார்.

அதிக ஆடம்பரம் எதுவுமின்றிச் செவ்வையாக விளங்கிய அந்த அறையும், வீட்டிலும் வெளிப்புறத்திலும் துலங்கிய தூய்மையும் அவரை எதிர்த்து எதிர்க்கட்சியாடின.

"நான் வருகிறேன்; உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்" என்று சொல்லிவிட்டுச் சர்மா எழுந்தார். வாயிற்படியருகே நின்ற ஜானகி, 'அம்மா வரக்கூடாதா!" என்று கேட்டாள். அதற்குப் பதில் கூறாமலே வெளியே நடந்து விட்டார்.

★

பழையபடி தனிமை சூழ வந்ததும் படுக்கையிலிருந்த ராஜுவைச் சுற்றிப் பல நினைவுகள் தட்டாம் பூச்சி போலப் பறந்தன.

ஆறு மாதங்களுக்கு முன் ராஜு தன் வாழ்விலேயே ஒரு மகத்தான பிரச்னையைத் தீர்த்து முடிவு கண்ட பெருமையில் மிதந்தான். அவன் சாதனையைக் கண்டு மூக்கில் விரலை வைத்தவர்கள் எத்தனையோ பேர். தன் கல்யாணத்தை இப்படிப் புதுமை வழியில் புரட்சி முறையில் செய்து கொள்ள வேண்டி வரும் என்று அவன் முன்பு நினைத்ததில்லை; விரும்பியதும் இல்லை. ஆனால் சந்தர்ப்பம் அவனை ஒரு இக்கட்டான நிலையில் கொண்டு வந்து நிறுத்தியதும் மதில்மேல் பூனை போன்ற நிலையிலிருந்து ஒரு பக்கம் குதித்தாக வேண்டி வந்தது.

அவனைப் பெற்று, செல்லமாக வளர்த்து, உலகத்திற் புகுத்தி வாழவைத்த பெற்றோர்கள் ஒருபுறம்; அவனுடைய வாலிபக் கனவுகளுக் கருவில் வந்து நின்று, தன் அழகுருவக் கவர்ச்சி, பழகும் புதுமை முறை, ஆசைக் கண்கள் இவற்றோடு அவன் மன அரங்கத்தில் நிழலாடிய மாமாவின் பெண் ஜானகி மற்றொரு புறம். யாருக்காக யாரை இழப்பது! இருவருக்கும் இருப்தியளிக்கும் முறையில் செய்யும் வழியோ அடைபட்டு விட்டது.

தங்கையிடத் தரத்தில் எல்லா விதத்திலும் குறைந்து, சமூகத்தின் கண்களில் அந்தஸ்து செல்வாக்கு ஏதும் பெறாத, மைத்துனன் குடும்பத்தோடு சம்பந்தம் செய்து கொள்ளுவதற்குச் சர்மாவுக்குக் கட்டோடு அபிப்பிராயமில்லை. தன் கல்யாணமே ஏதோ தவறி நடந்துவிட்டதாகச் சர்மாவின் தீர்மானம். அப்படியிருக்கத் தம் பிள்ளையின் வாழ்க்கையும் அந்தக் குடும்பத்தோடு பிணைக்கப் படுவதை அவர் விரும்பவில்லை. அவர் வீட்டில் அவர் இட்டது சட்டம். எதிர்த்துப் பேச யாரும் முயன்றதுமில்லை. யாருக்கும் அவ்வளவுக்குத் தைரியமும் இல்லை. ஒரு விஷயத்தில் அவர் பிடிவாதம் பிடித்தால் பிடித்ததுதான். பிடிவாதம், தானாக அவரை விட்டுக் கழன்று ஓடவேண்டும். அவராகப் பிடிவாதத்தை நெகிழ்ந்து போக விட்டதில்லை. இந்த ரீதியிலேயே சர்மா தம் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்து விட்டார்.

எதிர்பாராத வகையில் ராஜு ஒரு எதிர்ப்பு முனை நிறுவினான். 'இளம் பிள்ளை வாதம், வாலிபக் கிறுக்கு, கவர்ச்சியின் காரணமாக எழுந்த ஆழமில்லாத அன்பு, பருவ ஆவேசம்' என்று எண்ணிய சர்மா அவர்களுடைய உள்ளத்தில் ஊறியிருக்கும் அன்பின் ஆழத்தை அளக்க முயன்றதேயில்லை. 'ஜானகியைத் தம் மருமகளாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டு மைத்துனன் தம்மிடம் ஒரு நாள் வருவான்' என்ற சிந்தனைக்கே அவர் இடமளித்ததில்லை. ஆகவே, அலட்சியமாக இருந்து விட்டார்.

அடுத்தடுத்த தெருவிலிருந்த ராஜுவும் ஜானகியும் ஒருவரையொருவர் கண்களால் அளந்து அளந்து மனதில் மற்றவரை உருவாக்கிக் கொண்டனர். ஜானகி எப்பொழுதாவது அத்தை வீட்டிற்கு வருவாள். ராஜுவைப் பார்த்துப் பேச வேண்டும் என்ற ஆர்வம் அவளை உந்தித் தள்ளினாலும், அவளுடைய குடும்பத்து எளிய நிலை அவளைப் பின்னுக்கு இழுத்து நிறுத்திவிடும். அதையும் மீறிச் சென்று ராஜுவின் உருவத்தையும் பேச்சையும் கண் காது குளிரக் கேட்டு வந்தால் அல்லது அவள் மனம் அடங்காது.

திடீரென்று ஒருநாள் ஜானகியைச் சிற்றாடை அலங்காரத்தில் ராஜு கண்டுவிட்டான்! அவள் கண்களில் பெண்மை மலர்ந்து விட்டதின் பூரிப்பும் புதுக் களையும் பரவி நின்றன. நேற்றைய பாவாடைச் சிறுமி பெண்ணாகி வளர்ந்த விந்தைச் செயல் அவன் கண்களைச் சொக்க வைத்தது.

"சிற்றாடை எனக்கு எப்படியிருக்கிறது!" என்று அவனிடமே வந்து கேட்டாள் ஜானகி.

பதில் என்ன சொல்வான்! கைகள் துடித்தன. மனம் துடித்தது. அவள் கண்களின் வழியே அவள் லாவண்யம் நுழைந்து இருதயத்தில் இடம் தேடிக் கொண்டது. ஜானகி போய்விட்டாள். காணும் விழிகளுக்கு மறைந்த உருவம் கருத்தில் சென்று தோய்ந்தது.

தன் குடும்பத்தின் செல்வத்தையும் செருக்கையும் உதறித் தள்ளியவன் போல் அவனாக மாமா வீட்டிற்கு அடிக்கடி விஜயம் செய்தான். தங்கையையும் ஒரு பொருட்டாக மதித்த ராஜுவின் செய்கையில் மாமாவின் மனம் மகிழ்ந்தாலும், மலரைச் சுற்றி வண்டு பறக்கிறது என்ற உண்மையை மட்டும் அவர் மறந்துவிடவில்லை. அந்த ஜோடி, அவருக்கு மட்டும் என்ன! யார் கண்களுக்கும் ரமணீயமாகத்தானிருக்கும். சர்மாவிடம் தம் வார்த்தை எடுக்காது என்ற விஷயமும் அவருக்குத் தெரிந்ததே. ஆகவே, வேறு வரன் தேடும் முயற்சியில் இறங்கி, முப்பது வயதில் முதல் மனைவியை இழந்துவிட்ட ஒரு வரனை நிச்சயம் செய்ய முற்பட்டார். செய்தியறிந்த ராஜு கலங்கிப்போனான். வாழ்வில் முதல் மலர்ச்சிக்குக் காத்திருக்கும் ஜானகியை, ஒரு முறை மலர்ந்து குவிந்து மறு மலர்ச்சி வேண்டும் வரனுக்கு, தனக்கு எதிராகத் தாரை வார்த்துக் கொடுப்பதை அவன் மனம் ஒப்பவில்லை. ஒரு ஆவேசம் தோன்றி அவனை அடிமை கொண்டது. அமைதியாகச் சென்று கொண்டிருந்த குடும்பத்தில் ஒரு புயலைக் கிளப்ப வேண்டி வருமே என்று ஆற அமர யோசித்து முடிவு செய்யக் கூடத் தோன்றவில்லை.



"என் அண்ணா எட்டு கலைச் சவுக்கத்தில் பல்லவி வாசிப்பார்......"
"அதென்ன பிரமாதம்! என் அக்காள் பதினெட்டு முழப் புடவையில் பல்லவி வாசிப்பாளே!"

தனக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும். அதுவும் ஜானகியைத்தான் செய்து வைத்தாக வேண்டும் என்று அடம் பிடித்தான் ராஜு. அவன் கட்சி பேச ஆளில்லை. 'தம் பிள்ளையை மயக்கி விட்டார்கள்' என்ற குற்றத்தைச் சுமத்தி ஒரு வருக்கொருவர் போக்குவரவு கூட இல்லாமற் செய்துகொண்டு விட்டார் சர்மா. உஷ்ணமானி யில் பாதரசம் ஏறுவது போல, ராஜு—சர்மா இவர்களின் மனம் எதிர்மாறான கதியில் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. இந்த நாடகத்தின் முடிவை ஜானகியும் அவள் தந்தையும் மௌன மாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ராஜுவின் தாய் பத்தினித் தெய்வத்தின் பரம்பரையில் வந்தவள். சர்மாவின் பேச்சுக்கு அட்டி சொல்லி அவளுக்கு வழக்கமில்லை. அடிநாள் தொடங்கி அப்படி மனைவியைப் பழக்கியிருந்தார் சர்மா. அவள் இந்தப் பிரச்னையில் தலையிடவே தயாராய் இல்லாதவள்போல் காணப்பட்டாள். அது ராஜு வுக்கு வியப்பை அளித்தது. தன் தம்பியின் பெண்ணை மணந்து கொள்ள விரும்பும் பிள்ளை யின் கட்சியை அவள் எடுத்துப் பேசி, தனக்குப் பக்க பலமா யிருப்பாள் என்று ராஜு எதிர்பார்த் தான். அதில் ஏமாற்றம் ஏற்படவே அவனுக் குக் கசப்பு மேலிட்டது. சர்மாவோ, பசையுள்ள வேறு இடம் ஒன்றைப் பிடித்துக் கொண்டு ராஜுவுக்கான கல்யாண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். ராஜு வீட்டை விட்டு வெளியேறி விடுவதாக முடிவுக்கு வந்துவிட்டான். அதைப் பயம் காட்டுவதாகவே சர்மா எண்ணினர். எனவே, அது குறித்து அவர் மனதைச் சிறிதும் அலட்டிக் கொள்ள வில்லை.

வேறு வழி காண முடியாத ராஜு 'பிரிந்து சில நாள் இருந்தாலாவது பெற்றோர்களின் மனம் மாறலாகாதா!' என்ற நப்பாசையில், குடும்பத்தை விட்டு வெளியேறி நண்பன் ஒருவனுடைய அறை யில் வந்து தங்கி, கிளப்பில் சாப்பாட்டை வைத் துக்கொண்டான். அடுத்தமாதத் தொடக்கத்தில் சம்பளம் வாங்கியதும் தன் செலவுகளுக் கென்று வைத்துக் கொண்டது போக மீதி முப்பது ரூபா யைத் தன் நண்பன் மூலம் அப்பாவுக்குக் கொடுத் தனுப்பினன். சர்மா வாங்கிக் கொள்ள மறுத்தது மின்றி அவனைக் கண்டபடி ஏசிப் பணத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார்.நாட்கள் பெருகி மாதங் களாகி மறைந்தனவே தவிர, சர்மா அவனைப் பற்றிக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை.

இதற்கிடையில் மாமா அவனைத் தேடி வந்து, அவன் செய்கை பிசகென்றும் தம் பெண்ணின் பொருட்டு, அவன், குடும்பத்தையே விரோதித் துக் கொள்வதைத் தாம் விரும்ப வில்லையென்றும் தெரிவித்தபொழுது ராஜுவுக்கு எரிச்சல் எரிச்ச லாக வந்தது. ராஜுவுக்கு ஜானகியின் பேரில் உள்ள அன்பின் ஆழமும், ஜானகிக்கு ராஜுவின் பேரில் உள்ள மயக்கமும் அவர் அறிந்த விஷயமே. என்றாலும், தன்னால் இரு குடும்பங்களுக்கு மிடையே பகை வளர்வதைத் தடுக்க முடியுமோ என்று பார்த்தார். சர்மாவையே நேரில் கண்டு பேச அவர் சென்றபொழுது 'என் வீட்டுப் படியை யாரும் மிதிக்க வேண்டாம்' என்று கிர்த்தாட் சண்யமாகச் சர்மா கூறியது அவர் மனத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது.

இந்தச் சம்பவத்திற்குப் பின் ராஜுவின் உறுதி வைரம் பாய்ந்துவிட்டது. மாமாவிடம் தன் முடி வான தீர்மானத்தைத் தெரிவித்து விட்டான். மாமாவும் மனதில் ஒரு முடிவுடன் வீடு திரும்பினர்.



ஒரு வாரம் கழித்து ஒருநாள் ராஜு தன் காரியாலய நண்பர்களில் நெருங்கிய இருவருக்கு மட்டும் தன்னை இரவு ஸ்டேஷனில் வந்து சந் திக்குமாறு செய்தி அனுப்பினன். ஸ்டேஷனில் ராஜுவைச் சந்தித்த நண்பர்களுக்கு அவன் தீர் மானம் பிரமிப்பை யளித்தது. ராஜுவின் மனம் தெரிந்தவர்களாதலால், அவர்களும் அவனைத் தொடர்ந்தனர். வேறு ஊர் கோவில் ஒன்றில் ராஜு ஜானகியை முறைப்படி மணந்து கொண் டான். பெண் வகையில் முக்கியமான சில உற வினர்கள் மட்டுமே வந்திருந்தனர். அதிக ஆடம் பரம் ஏதுமின்றி எளிமையான முறையில் கல்யா ணம் நடந்தேறியது.

ஜானகி இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் படு வதைத் தவிர்த்த பெருமையும் தன் இளம் பருவக் கனவு பலித்த பூரிப்பும் அவன் மனதுக்கு இதம் தந்ததென்றாலும், தன் பெற்றோர்களின் சம்மத மின்றி, அவர்களை எதிர்த்து, அவர்களுக்கு மறைத்து, அவர்களை அழைக்காமல் தன் கல்யா ணத்தை நிறைவேற்றிக் கொண்டது பற்றி அவ னால் முழுமையும் பெருமை கொள்ள முடியவில்லை. அவன் மகிழ்ச்சியில் ஒரு சிறு மூளி இருக்கத் தான் செய்தது. அந்த மூளியைப் பற்றிச் சிந்திக் கத் தொடங்கி விட்டால், காற்று ஊத ஊதப் பலூன் உப்புவது போல அதுவே அவன் மனம் முழுவதும் வியாபித்து, அவன் உறுதியின் ஆணி வேரை அரிக்கத் தொடங்கியது.



'வாழ்வெனும் நெடும்பாதையில் தினம் குறுக்கிடப் போவது தன் மனைவியே தவிரப் பெற்றோர்கள் அல்ல' என்பதை அவன் நிச்சயமாய் உணர்ந்த பொழுது அவன் இன்பமே அவனுக்குப் பெரிதாகப் பட்டது. தன் வாழ்க்கைப் புத்தகத்தில் பெண்மை யென்ற அத்தியாயத்தில் ஜானகி என்ற வார்த்தைக்குப்பின் அவன் முற்றுப்புள்ளி வைத்து விட்டான். அவளை விட உண்மையிலேயே அழகியான பெண்ணைக்கூட அவன் மனம் ஏற்க மறுத்தது. காலப் போக்கிலே பெற்றோர்களின் மனம் மாறி விடும் என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

விவாக நிகழ்ச்சிகள் சர்மாவை எட்டியதுமே, ராஜு விஷயத்தில் தன்னுடைய பிடிவாதம் தோற்றுவிட்டதை உணர்ந்தார். காரியம் மிஞ்சிய பொழுது, பீறி யெழுந்த ஆத்திரத்தையும் வெறுப்பையும் யாரிடம் காட்ட முடியும்! அவருக்குள்ளாகவே குமுறி எழுந்து அவை அடங்கின. தம் வரையில் இனி அவன் வேறு, தாம் வேறு என்பதாகப் பாவித்துக் கொள்வதைத் தவிர, அவர் வேறு என்ன செய்யக் கூடும்!

புது மணம் புரிந்த ராஜு ஜானகியுடன் தனிக் குடித்தனம் புகுந்தான்.

ராஜு மண வாழ்க்கையின் சுகானுபவங்களைத் துடிப்புடனும் பரபரப்புடனும் நுகர்ந்தான். ஜானகி அவன் மனமறிந்து நடந்து வந்தாள்.

தன் பொருட்டு, பெற்றோர்களையும் விரோதித்துக் கொண்ட ராஜுவைத் தெய்வத்திற்கு மேலாக ஜானகி போற்றி வந்தாள். அன்பை அவன் மீது அடை மழை போலப் பொழிந்தாள். அன்புச் சுழலில் ராஜு திக்கு முக்காடிப் போனான். வரம்பறியா இன்பத்தின் எல்லையை இருவரும் கண்டனர். ராஜுவின் மனதில் மட்டும் பெற்றோர்களின் பாராமுகம் சிறு புயலை வீசிக் கொண்டுதா னிருந்தது. அதன் எதிரொலி சில பொழுது அவனை மீறி 'வெளி' வந்து ஜானகியைத் தாக்கி, அவளையும் மன அமைதி இழக்கச் செய்தது.

அளவு மீறிய, விளைவுகளின் விவரமறியாத இன்ப சுகமும், மன உளைச்சலும் ராஜுவைப் படுக்கையில் கிடத்தி விட்டன. ஜானகி பயந்து குன்றிப் போய் விட்டாள். 'பெரியவர்களின் ஆசியின்றி நடந்துகொண்ட குற்றத்திற்குத் தெய்வம் அளித்த தண்டனையோ அல்லது அவர்கள் மனம் நோகச் செய்த பாவவினையோ' என்று எண்ணி மனம் புழுங்கினாள். ராஜுவை விட்டுப் பிரியாமலும் இரவு இமைக்காமலும் கண் விழித்துப் பணி விடைகள் செய்தாள். பத்து நாட்களாக அடித்த ஜுரம் அன்றுதான் சற்று மட்டுப் பட்டிருந்தது. அதிசயமாகச் சர்மாவும் வந்து விட்டுப் போனார்.

மாலை நேரம் மறுபடியும் சர்மா ராஜுவைத் தேடி வந்தார். வரும்பொழுதே வண்டியோடு வந்தார். வந்தவர் ராஜுவிடம், "கிளம்பு! வீட்டுக்கே போய் விடலாம்!" என்று சொல்லி விட்டு மௌனமாக நின்றார். ராஜு அவரையும் சற்றுத் தூரத்திலே 'என்னவாகுமோ!' என்று பயபக்தி ததும்ப நின்ற ஜானகியையும் மாறி மாறிப் பார்த்தான். ஏதோ சொல்ல வேண்டியதைச் சொல்ல அவன் மனம் துணிச்சலைத் தேடியது. கடைசியில் ஒருவாறு துணிந்து விட்டான்.

"அப்பா, ஜானகியையும் அழைத்துக் கொண்டு தானே!" என்று தட்டுத் தடுமாறிக் கேட்டான்.

"ஆமாம்" என்று சொல்லிப் பற்றில்லாதவர் போல நடித்தார் சர்மா. உண்மையில் என்றைக்கோ அவர் வைராக்கியம் பிளவு பட்டுவிட்டது. இருந்தாலும் அவர்களுக் கெதிராகத் தம் தோல்வியை ஒப்புக்கொள்ள அவர் துணியவில்லை.

ராஜு - ஜானகி இவர்களின் ஜோடியான தோற்றம், அவர்களிடையே பின்னிப் பிணைந்து கிடந்த அன்புத் தளை, அவர்கள் கருத்து ஒருமித்து நடத்தும் குடித்தனப் பாங்கு இவற்றைப் பற்றிக் காதுகளை வந்தடைந்த பலரின் விமர்சனம், 'ஏதோ நடந்தது நடந்து விட்டது. அப்படியென்ன தவறான காரியமா செய்து விட்டான்! ஏதோ நடந்தது நடந்து விட்டது என்று பெரிய மனசு காட்டுவாயா, நீயும் சிறு பிள்ளைத் தனம் பண்ணுகிறாயே!' என்று இடித்துச் சொன்ன சிலரின் பேச்சுகள்—இவற்றின் முன் சர்மாவின் உறுதி தகர்ந்து பொடிப் பொடியாகி விட்டது.

கசப்பை வளர்ப்பதைவிட அழிப்பது நல்லது என்ற முடிவுக்குச் சர்மா வந்துவிட்டார். வாழ்ந்து விட்ட தன் திருப்தியை விட வாழத் துடிக்கும் அவர்களிருவரின் ஆசை வேகம் அவரை மலைக்கச் செய்தது. பிள்ளையின் இன்பமே தன் இன்பம் என்று கருதுவதைத் தவிர, மாற்றியமைக்கக் கூடிய நிகழ்ச்சியா அது! தன் மனமாற்றத்தை மெதுவாக மனைவியிடம் கூறினார். 'உங்களிஷ்டம்' என்று மட்டுமே பதில் சொல்லிவிட்டுத் தனக்குள் சிரித்துக் கொண்டாள் ராஜுவின் தாயார்.

இம்மாதிரியான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துப் பார்த்து ஏங்கியிருந்த ராஜு சமயத்தை நழுவவிட மனமில்லாதவனாய் ஜானகியுடன் வண்டியிலேறிக் கொண்டான்.

வீட்டினுள் சென்றதும் அம்மாவைக் கண்டான். பல மாதங்களுக்குப் பின் அவளைக் கண்டதும் மனதில் பீறியெழுந்த பாசத்தையும் அழுத்திவிட்டு வெறுப்பு மேலே மிதந்தது. 'தன் கல்யாண விஷயமாக அவள் தன் கட்சி பேசத் தவறியது மகத்தான குற்றம்' என்பது அவன் இறுதியான துணிபு. ஆகவே, தன் தாயாருடன் முகம் கொடுத்துப் பேசக்கூடாது என்ற திட வைராக்கியத்துடன் ராஜு இருந்தான்.

அக்கம் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் அவனையும் ஜானகியையும் வந்து பார்த்து விட்டுக் குடும்பம் ஒன்றுபட்டது பற்றியும், ஜானகியைப் பற்றியும் பாராட்டிப் பேசி விட்டுச் சென்றனர்.

கடைசியாக ராஜுவும் ஜானகியும் தனித்திருக்கும் சமயம் பார்த்து ராஜுவின் தாயார் வந்தாள்.


"ராஜு! என் மேலே உனக்குக் கோபந்தானே!" என்றாள் மெதுவாக.

"ஆமாம். பின்னே எப்படியிருக்கும்! அப்பாவை விட நீ பிடிவாதம் பிடித்து விட்டாய், இல்லையா! உனக்குப் பெற்ற பாசத்தையும் மறக்கும்படி ஆகி விட்டதே!" என்று கொதிப்பாகப் பதிலளித்தான்.

"பைத்தியமே! உன் அப்பா குணம் எனக்கு இன்றைக்கா தெரியும்! நான் சொல்லி அவர் செய்த காரியம், என் நினைவு தெரிந்து ஒன்று மில்லை. ஆனால் நான் சொல்கிறதை எதிர்த்துச் செய்வதிலே அவருக்கு ஒரு தனி உற்சாகம். உங்கள் இரண்டு பேரின் ஆசை தெரிந்த நான் அதற்கு உதவ முடியாதபோது குந்தகம் விளைவிக்கக் கூடாது என்று ஒதுங்கி யிருந்தேன். அதோடு அப்பா கட்சியிலேயும் இருப்பதாக நடிக்க வேண்டி இருந்தது. இந்தப் பாசாங்கு இல்லாது போனால் கல்யாணம் நடந்திருக்கும் என்று நீ நினைக்கிறாயா! உன் மாமாவுக்கு யோசனை சொன்னது யார் என்று அவனையே கேட்டுப் பார்" என்று உண்மை விளங்கச்சொல்லி ஜானகியைத் தன்னருகில் இழுத்துச் செல்லமாக அவள் தலையைக் கோதி விட்டுத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள் ராஜுவின் தாயார்.

"எங்களைச் சேர்த்து வாழ வைத்தது தெய்வமல்ல; மனித உருவில் வந்த நீதான்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறி ராஜு தன் தாயாரின் பாதங்களைப் பற்றி வணங்கினான். ஜானகியும் அவனைப் பின்பற்றினாள்.

"ஆயிரங்காலத்துப் பயிர்; தெய்வம் கண் திறக்கட்டும்!" என்று கூறி அவர்களின் இன்பத்திற்குக் குறுக்கிட விரும்பாதவள் போல் வெளியே சென்றாள் ராஜுவின் தாயார். அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த நான்கு கண்களிலும் ஆனந்த மிகுதியினால் அன்பு நீர் சுரந்தது.



"ஏண்டி! குழந்தைதான் அழுகிற தென்றால் நீயும் ஏண்டி அதோடு சேர்ந்து அழுது தொலைக்கிறே?"

ஐந்து வருஷ சாதனைகள் - 4

சென்னை சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் கைத்தொழில்கள் எவ்வளவு அபிவிருத்தி அடைந்திருக்கின்றன என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன:

	பஞ்சு மில்கள்	கதிர்கள்	தறிகள்
1946	67	15,42,968	8,887
1951	71	17,61,848	9,651

	சர்க்கரை மில்கள்	மொத்த உற்பத்தி (டன்கள்)
1945	11	49,200
1951	12	65,000

	சிமெண்டு தொழிற்சாலைகள்	உற்பத்தி (டன்கள்)
1946	3	
1951	4	4,75,000

1946	வனஸ்பதி தொழிற்சாலைகள்	2	
1951	,,	6	(இன்னும் ஆறு தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.)

	ஓடுகள் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள்	வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி
1946	70	ரூ. 10½ லட்சம்
1951	89	ரூ 63 லட்சம்

1946	கைத்தொழில்களுக்கு சர்க்கார் கொடுத்த கடன், உதவித் தொகை	ரூ. 1,98.000
1951		ரூ. 44,37,000


7-CLOCK
SLOTTED
BLADE
DOUBLE E
7-CLOCK
SLOTTED BLADE
ஸெவன் ஓ'கிளாக் பிளேடுகள் ஜனரஞ்
சகமான விலையில் முதல்தரமான
ஷவரத்தை அளிக்கின்றன. மிகவும்
சிக்கனமான முறையில் தற்காலத்துக்
குகந்த ஷவர சுகம். ஸெவன் ஓ'கிளாக்
பிளேடுகள் நேர்த்தியான எஃகிலிருந்து
மிகவும் கூர்மையாக முனை தீட்டப்பட்
டுத் தயாரிக்கப்படுகின்றன.
7 o'clock
ஸெவன் ஓ'கிளாக் பிளேடுகள்



இரு சகோதரிகள்

டி. ஆர். வி.

பத்மா சொல்கிறாள்:

“பத்மா! பத்மா! என்ன பெண்ணடி நீ? நாளும், கிழமையுமாக அந்தப் பிள்ளையாண்டான் உன்னைப் பார்க்க வரும்போது... இப்படியா தலையும் கோலமுமாக நிற்கணும்? போய் ‘டிரஸ்’ செய்து கொண்டு தயாராக இருடியம்மா”—சமையல் அறையிலிருந்து வந்த அம்மாவின் குரலில் பதட்டமும் அங்கலாய்ப்பும் தொனித்தன.

அவளுக்கு எவ்வளவோ ஜோலி! பெண் பார்க்க வருபவர்களுக்கு வாய்க்கு இன்பமாக ஸொஜ்ஜியும், பஜ்ஜியும், காப்பியும் தயார் செய்ய வேண்டாமா? ஒவ்வொரு நாளும் தான் எவனாவது ஒருவன் என்னைப் பார்த்து விட்டுப் போகிறான். ஆசார, உபசாரத்துடன் இனிமையாக டிபன் கிடைக்கிறதே என்று வந்து விட்டுப் போகிறார்கள் போலும்!

அப்பா கூடத்தில் மேஜை, நாற்காலிகளை ஒழுங்காகப் போடுவதில் முனைந்திருந்தார். சரோஜா, வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தவள், என்னிடம் வந்தாள். “அக்கா, அக்கா! இன்னுமா தலை வாரிப் பின்னிக் கொள்ளாமல் இருக்கிறாய்! நாழிகை ஆகி விட்டது. எந்த நிமிஷமும் அவர்கள் வந்து விடுவார்களாம்!” என்று எச்சரித்தாள்.

“ஐயோ! என்னை ஏன் துன்புறுத்துகிறீர்கள்? நான் ‘டிரஸ்’ செய்து கொள்ளப் போவதில்லை. எனக்குக் கல்யாணமே வேண்டாம், சரோஜா!—”—நைந்து போன என் இருதயத்திலிருந்து பீறிட்டன வார்த்தைகள். ஆவேசம் வந்தவள் போல் கத்தி விட்டேன்.

சமையலறையிலிருந்து அம்மா ஓடோடியும் வந்தாள். அடுப்பினருகில் இருந்ததால் அவள் நெற்றியில் முத்து முத்தாக வியர்வை துளித்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டே, “பத்மா! மனத்தைத் திடப்படுத்திக் கொள். பெண்ணாகப் பிறந்து விட்டால் எல்லாவிதமான சோதனைக்கும் ஆளாகித்தானே தீரணும்? உன் கஷ்டம் எங்களுக்கில்லையா?” என்று தழுதழுத்த குரலில் அம்மா ஏதேதோ எனக்குச் சமாதானம் சொன்னாள்.

“பத்மா என்ன சொல்கிறாள்? இந்தச் சமயத்தில் கூடவா கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்கணும்? அட ஈசுவரா!”—அப்பா ஈசுவரனைச் சந்திக்கிழுத்தார். அவருக்கு மட்டும் கவலை இல்லையா?

“உங்களுக்கு ஒன்றுமில்லை. குழந்தைக்கு ஏதோ மனது சங்கடப் படுகிறது. ஒவ்வொரு நாளும் தான் யாராவது ஒருவன் வந்து பார்த்து விட்டுப் போகிறான். ஏதாவது குதிர்ந்தால்தானே? நாள் தவறாமல் அலங்காரத்தைச் செய்து கொண்டு அவன் எதிரில் போய் நிற்கிறது; அப்புறம் கலைக்கிறது என்பதுதான் வழக்கமாகிவிட்டதே! பத்மாவின் மனசு புண்பட்டிருக்கிறது. பெண்கள் மனசு உங்களுக்குத் தெரியுமா? ஏதோ அந்த ஈசுவரன்தான் இந்தத் தடவையாவது பத்மாவைக் கண்திறந்து பார்க்கணும்! என்றாள் என் தாயார் அழுத வண்ணம். என்ன இருந்தாலும் என்னைப் பெற்றவள் அல்லவா?

அவசர அவசரமாக எனக்குத் தலை வாரிப் பின்னிப் பூச்சூட்டி விட்டாள் சரோஜா. அவளுக்கும்தான் வயதாகி விட்டது. அவளுக்குப் பதினைந்தாகிறது. நான் அவளைவிட நான்கு வருஷங்கள் மூத்தவள். அவள் கல்யாணத்திற்குத் தடையாக நான் இருக்கிறேன். ஆம்! தடையாகத்தான்! என்னை ஓரிடத்தில் தள்ளினால்தானே அவளுக்கு விமோசனம்!

சரோஜா துடுக்காகப் பேசுவாள். உள்ளத்து எண்ணங்களை மறைக்கத் தெரியாது. ‘பட பட’ வென்று பொரிந்து தள்ளிவிடுவாள். நெஞ்சிலேயே அமுக்கி வைத்துக் கொண்டு குமைந்து குமைந்து அழமாட்டாள். என்னைப் போல் அவள் அவ்வளவு சிகப்பு இல்லைதான். ஆனால் குறு குறு வென்று நெளிந்தை அன்னமும் பார்வையும், முழங்காலைத் தொடும்படி வாரிவிட்ட பின்னலும், முகத்தில் தோன்றும் ஒரு தனிப்பட்ட களையும், யாரையும் அவள்பால் வசீகரித்துவிடும்.

ஒரு முறை என்னைப் பார்க்க வந்த பையன் என் தந்தையிடம் சொன்னானாம், "நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்களது இரண்டாவது பெண்ணை மணந்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை. வரதக்ஷிணை, நகை, நட்டு என்று ஒன்றும் வேண்டியதில்லை...!" என்று. மூத்தவள் மலைபோல் கல்யாணத்திற்கு நிற்கும்பொழுது தங்கைக்கு விவாகமா? சாத்தியமா அது? எனக்கு அந்த ஊனம் மட்டும் இல்லையென்றால்...? அந்த ஊனம்...

பகவான் சிருஷ்டியில் எல்லோருமேயா அப்பழுக்கின்றி இருக்கின்றனர்? அப்படியே பிறவி ஊனமாகிவிட்டாலும், அவர்களுக்கு உள்ளமில்லையா? விமோசனமே கிடையாதா?

வாசலில் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது. தொடர்ந்து அப்பாவின் குரல், "வாங்கோ, வாங்கோ! மூன்று மணிக்கே வருவதாகச் சொன்னீர்களே?......" என்று உபசாரத்துடன் வரவேற்பதும் கேட்டது.

ரகு!...ஆம்! அதுதான் என்னைப் பார்க்க வந்திருந்தவர் பெயர். பி. ஏ. பாஸ் செய்தவராம். உள்ளூரிலேயே ஏதோ பெரிய கம்பெனியில் உதவி மானேஜர் வேலையாம்.

ஜன்னல் இடுக்கு வழியாகப் பார்த்தேன். கூடத்தில் நாற்காலியில் அடக்க ஒடுக்கமாக மணப் பெண் போல உட்கார்ந்திருந்த 'அவரை'க் கண்டதும் என் உள்ளம் குழைந்து அவர்பால் ஓடியது. தும்பைப் பூப்போல் வெளுத்த கதர் அங்கவஸ்திரம்; வெள்ளை ஜிப்பா, கருள் கருளாகக் கிராப்பு. என் உடல் பரவசத்தால் புல்லரித்தது. வஞ்சமற்ற உள்ளத்தைப் பிரதிபலிப்பது போல் அவர் உதட்டில் மலர்ந்திருந்த புன்முறுவல் என் நெஞ்சைத் தொட்டது.

இம்முறையேனும் எனக்கு விமோசனம் உண்டா?

"அக்கா! அக்கா! என்ன இது, அவர்கள் வந்து கூடத்தில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்! இப்படித் தேம்பித் தேம்பி இந்தச் சமயத்திலா அழுகிறது? அடி பைத்தியமே! தைரியமாய் இரு அக்கா!"—தன் புடவைத் தலைப்பால் என் கண்களைத் துடைத்து, எனக்குத் தைரியம் கூறிய சரோஜாவின் கண்களிலும் கூட நீர் துளித்தது.

அம்மாவின் உத்தரவுக்கு இணங்க, அடிமேல் அடி வைத்து, மெதுவாகக் கூடத்தினுள் நுழைந்தேன். தழையத் தழைய புடவை! கையொடிந்த பொம்மைக்கு ஆடம்பரமாகப் பட்டுப் பாவாடையும், தாவணியும் சுற்றிக் கொலுவில் வைப்பது போல்! குனிந்த தலை நிமிராமல் சொகுசாக அசைந்து கொண்டு சென்று, 'அவர்' அம்மாவுக்கும் 'அவருக்கு'ம் நமஸ்காரம் செய்தேன். தியாகராஜ சுவாமிகளது கீர்த்தனைகள் இரண்டு பாடினேன். பாடி முடிந்த பின்பும் அசையாமல் உட்கார்ந்திருந்தேன். "சரி! உள்ளேபோ, அம்மா!" என்ற என் தந்தையின் குரல் என்னை எழுப்பியது. ஏன் என் உள்ளம் அப்படிப் பதைக்கிறது? மெதுவாக எழுந்து சென்றேன். கால் ஊனம் என்று காட்டிக் கொள்ளக் கூடாதே! மனத்திலுள்ள ஊனத்தை மறைத்து விடுகிறார்கள், அங்க ஊனத்தை மறைக்க முடியவில்லையே! எல்லோர் கண்களும் என் நொண்டிக் காலையே நோக்குவதுபோல் பிரமை! வலது காலைச் சிறிது மடக்கி, ஒடித்து வாசற்படியைத் தாண்ட வேண்டும்.

ஆ! ஐயோ! மனத்தை என்னவோ செய்கிறதே!......படி தடுக்கி விட்டது. விழுந்து விட்டேன். சரோஜா பாய்ந்து வந்து என்னைத் தாங்கினாள். அப்பாவும், அம்மாவும் ஓடோடியும் வந்து என்னைத் தூக்கிப் பிடித்தனர். பிறகு நடந்தவை எனக்கு நினைவில்லை!

பார்வதி அம்மாள் சொல்கிறாள்:

எனக்கு என்னவோ அந்தப் பெண்ணைப் பார்த்தவுடனேயே பிடித்துவிட்டது. ரகுவுக்கு ஏற்றவள்தான்! செக்கச் சிவக்க, ராஜாத்தி மாதிரி இருக்கிறாள். அவள் பாடிய அந்தக் கீர்த்தனம் இன்னும் என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது. முகத்தில் லக்ஷ்மிகரம் தாண்டவமாடுகிறது. பாழும் கடவுள் அந்தப் பெண்ணுக்கு அந்தக் குறையை வைப்பானேன்? முதலில் என் கண்ணுக்குப் படவில்லை. பாட்டுப் பாடிவிட்டுக் கூடத்திலிருந்து அவள் எழுந்து சென்றபோதுதான் கவனித்தேன். வலது காலை மட்டும் கொஞ்சம் உந்தி உந்தி நடப்பது போலிருந்தது. உற்றுக் கவனித்தேன்; அதற்குள் வாசற்படிதடுக்கி விழுந்து விட்டாள்.



காவற்காரன்:—ஐயா, இந்தக் குளத்தில் யாரும் குளிக்கக் கூடாதுங்க. அது சட்டமுங்க!

ஊருக்குப் புதியவர்:—அதை முன்னாலேயே சொல்லுவதற் கென்ன? நான் சட்டை, கோட்டு எல்லாவற்றையும் கழற்றுகிறவரையில் பேசாமல் பார்த்துக்கொண் டிருந்தாயே!

காவற்காரன்:—அதையெல்லாம் தடுக்கிறதற்குச் சட்டம் இல்லீங்க!

அப்படி ஒன்றும் மோசமாக நடக்க முடியாமல் போய் விடவில்லை. பெண்ணின் தாயார் ருக்மணி சொன்னாள். ஏதோ குழந்தையாயிருக்கும் போது பாரிச வாயுவோ, என்னவோ வந்து இழுத்து விட்டதாம்! பாவம்! அந்தப் பெண்ணுக்கு இருக்கிற புத்தி சாலித்தனத்திற்கும், அழகுக்கும் குரலுக்கும் அந்தக் குறை ஒரு குறையே யில்லைதான். இருந்தாலும் மூளி மூளிதானே என்று மனது ஒரு மூலையில் அடித்துக் கொள்ளுகிறது.

ஒரு விதத்தில் சின்னக் குட்டி சரோஜா நம் ரகுவுக்குத் தேவலை என்று படுகிறது. மா நிறந்தான்; ஆனால் ரொம்பக் களையாகவும், 'சுடிகை'யாகவும் இருக்கிறாள். வீட்டுக் காரியம் பூராவும் சரோஜாதான் செய்கிறாள். 'குறு குறு' வென்ற பார்வையும், சிரிப்பும், கேலிப் பேச்சும்!—பச்சைக் கொடி போல் இருக்கிறாள். ரகுவுக்கு அவளையே முடித்து விட்டால்தான் என்ன? அடுத்த வீட்டு அம்புஜம் கூட அதைத்தான் சொன்னாள்: "பத்மா கண்ணுக்கு நன்றாகத்தானிருக்கிறாள்; ஆனாலும் குறை குறைதானே! வலதுகால் கொஞ்சம் ஊனம். அது தெரிந்தும் அதில் போய் விழுவானேன்? ஆயிரம் பெண்கள் இருக்கு நம் ரகுவுக்கு. அப்படியும் அந்தக் குடும்பத்துடன் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டுமெனில், சின்னப் பெண் சரோஜாவைப் பண்ணிவை; கிளி மாதிரி, நன்றாக இருக்கிறாள். மூத்தவள் போல் கால், கை முடங்கிப் போய் விடவில்லை" என்று நாம் போய் எப்படிக் கேட்பது?

ரகுவாவது வாய் திறந்து சொல்வானென்று பார்த்தேன். ஜாடையாகக் கேட்கக் கூடக் கேட்டேன். "மூத்த பெண் அழகும், குணமும் படைத்தவளாக இருந்தும், கால் ஊனமாக இருக்கணுமா!" என்று அங்கலாய்த்துக் கொண்டான். எப்பவுமே இளகிய



மனது அவனுக்கு. நான் அடித்துச் சொல்லியிருந்தால் கேட்டிருப்பான். ஆனால் எனக்குத்தான் மனது கேட்கவில்லை.

ரகுநாதன் சொல்கிறான்:

அன்று தை வெள்ளிக்கிழமை. அம்மா நான், தம்பி ஸ்ரீதரன் எல்லோரும் கோவிலுக்குச் சென்றிருந்தோம். அம்பாளுக்கு அர்ச்சனை செய்து விட்டுப் பிரதக்ஷிணமாக வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பு எதிராக மூன்று பெண்கள் கேலியும், சிரிப்புமாக உற்சாகத்துடன் பேசிக் கொண்டு சென்றனர். அதில் ஒரு குரல் மட்டும் பழக்கமானதாகப் பட்டது. சிறிது நிதானித்து யோசித்துப் பார்த்ததில் அவள் சரோஜா என்பது தெரிந்தது. இரு மாதங்களுக்கு முன் நான் பார்த்து விட்டு வந்த நொண்டிப் பெண்ணின் தங்கை சரோஜாதான்!

அம்மாவுக்கு வயதாகி விட்டாலும், எலிக் காது; பூனைக்கண். அவ்வளவு நெருக்கடியிலும், பேரிரைச்சலிலும் எப்படியோ கண்டு பிடித்து விட்டாள். "இந்தாடி பெண்ணே, சரோஜா! அப்பா, அம்மா எல்லோரும் சௌக்கியமா?" என்று மிகுந்த வாத்ஸல்யத்துடன் குசலம் விசாரித்தாள்.

அந்தப் பெண் சட்டென்று நின்று திரும்பினாள். அலட்சியமாக எங்கள் மீது பார்வையை ஓட்டி விட்டு, முகத்தை ஒரு வெட்டு வெட்டினாள். அந்த நோக்கில் தெறித்த ஏதோ ஒரு சக்தி என் உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே குலுக்கியது. ஸ்ரீதரன் மட்டும் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு மாப்பிள்ளை போல் நின்றான்.

"ஏண்டி சரோஜா! பத்மாவுக்கு வேறு ஏதாவது வரன் வந்ததா?"—அம்மா சகஜமாகத்தான் கேட்டாள்.

"இதைப் பற்றி உங்களுக்கு என்ன கவலை, மாமி? கவலைப்பட நாங்கள் இருக்கிறோம். கால் சற்று ஊனம் என்பதற்காக நீங்கள்தான் அக்காவை வேண்டாம் என்று சொல்லி விட்டீர்களாமே! கால் நொண்டிதான்; உங்களைப் போல் மனதும் நொண்டியாகி விடவில்லை எங்களுக்கு..." என்று அந்தப் பெண் கூறிய பதில், கூரிய ஈட்டி போல் தாக்கியது என்னை.

அம்மாவின் முகம் சுண்டி விட்டது. சமாளித்துக் கொண்டு அன்பும் ஆதரவும் பொங்கச் சொன்னாள்: "சரோஜா! என்ன அப்படிப் படபடப்பாய்ப் பேசுகிறாய்; எனக்கு உங்கள் குடும்பத்துடன் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று உள்ளூற ஆசை. உனக்கு ஸ்ரீதரனைப் பிடித்திருக்கிறதாடி? உன்னை அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்துக் கண் குளிரப் பார்க்க வேண்டும் என்பது என் ஆசை."

அம்மா அவ்வாறு அவளைக் கேட்டிருக்கக் கூடாதுதான்! சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டு, உளறிக் கொட்டி விடுகிறாள்.

சரோஜாவின் பார்வை என்மேல் விழுந்து சுட்டெரித்து, அம்மாவின் பேரில் தாவியது. அப்பா! அந்த நோக்கில்தான் எத்தனை வெம்மை! எக்காளம்!

“இதென்ன கறிகாய் வியாபாரம் என்று நினைப்பா, கடைக்குக் கடை சென்று பேரம் பேசுவதற்கு?—வாங்கடி போகலாம்! பைத்தியம் மாதிரி கோவிலுக்கு வருகிற பெண்களையெல்லாம் பார்த்து ‘என் பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக்கொள்!’ என்று கேட்கிறது!” என்று கூறி, எங்களைப் பைத்தியமாக அடித்துவிட்டுத் தன் தோழிகளுடன் ஓடி மறைந்துவிட்டாள் அவள்.

அம்மா வாயே திறக்கவில்லை. வீட்டிற்கு வந்த பின்பும் அதைப்பற்றிப் பேசவில்லை. ஒருவேளை, அச்சிறுமியின் வார்த்தைகள் அவள் உள்ளத்தைப் புண் படுத்தி விட்டனவோ என்று எண்ணினேன்.

ஆனால் பிறகுதான் அம்மாவுக்குக் கோபத்திற்குப் பதிலாக அளவுக்கு மீறிய பாசமும், அனுதாபமும் அந்தச் சகோதரிகளிடம் ஏற்பட்டிருந்ததென்பது தெரிந்தது.

மறுநாள் சாப்பிடும்போது என் தாயார் கேட்டாள்: “ஏண்டா, ரகு! உனக்கு அவளைப்பண்ணிக் கொள்வதில் இஷ்டந்தானே!”

‘அவளை’ என்பது ‘எவளை’? முகத்தில் கேள்விக் குறி தோன்றத் தாயாரை நோக்கினேன். அவள் மேலும் சொன்னாள்: “நான் சொல்வதைத் தவறாக நினைத்துக் கொள்ளாதே. பத்மாவுக்குக் கால் அவ்வளவு மோசமாகப் போய்விடவில்லை. ஏழைக் குடும்பம். அவளைச் செய்து கொண்டால் எவ்வளவோ புண்ணியம். நீ கைநிறையச் சம்பாதிக்கிறாய்; சொத்தும் இருக்கிறது. அங்கம் ஊனமாகிவிட்டதால், மனம் நைந்து போயிருக்கிறது, பத்மாவுக்கு. அவளுக்கு அந்தக் குறையே தெரியாதபடி, அன்புடன் அரவணைத்து எவ்வளவோ மேன்மையாக வைத்துக் கொள்ளலாம். இதில் நாலு பேர் சொல்வதற்கு என்ன இருக்கிறது? சரோஜாவையும் நம் ஸ்ரீதரனுக்கே முடித்து விடலாம். உனக்கு சம்மதமா, ரகு?”—இவ்வாறு கூறிவிட்டு என் தாயார் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இப்படி மனம் விட்டு ஒரு நாளும் அவள் என்னிடம் கூறியதில்லை. சிறு வயதில் தந்தையை இழந்த என்னையும், ஸ்ரீதரனையும், கஷ்டம் தெரியாதபடி, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து முன்னுக்குக் கொண்டு வந்தவள் அவள். அவளிடம் இதுகாறும் நான் கொண்டிருந்த அன்பும், மதிப்பும் இப்போது இன்னும் பன்மடங்கு அதிகரித்தன.

“அம்மா! எனக்குச் சம்மதம். உடனே அவர்களிடமும் தெரிவித்து விடு” என்று நான் கூறினேன்.

அதைக் கேட்டவுடன், முதுமையால் சுருங்கிய என் தாயின் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்தன. அசாதாரணமாகப் பிரகாசித்தது அவள் முகம்!

சரோஜா சொல்கிறாள் :

கோயிலில் அந்த மாமியிடம் நான் அவ்வளவு துடுக்காகப் பேசியிருக்கக் கூடாதுதான். எல்லோரும் என்னை ‘வாயாடி சரோஜா’ என்று கூப்பிடுவது வழக்கம். அதை நிரூபித்து விட்டேனே! ஏனோ, அன்று என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் ‘படபட’ வென்று பேசிவிட்டேன்.

“அக்காவுக்கு வேறு ஏதாவது வரன் வந்ததா?” என்று சகஜமாகத் தான் கேட்டாள் அந்த மாமி. எனக்குக் குதர்க்கமாகப் பட்டது. அக்காவைப் பார்த்துவிட்டுப் போய் இரு மாதங்களாகியும் கூட அவர்கள் ‘பிடி கொடுத்துப்’ பதில் சொல்லவில்லை.

அப்படியிருக்கையில் ஏன் என் வாயைக் கிண்டவேண்டும்? என் சிநேகிதிகள் எதிரில் வாய்க்கு வந்தபடி சொல்லிவிட்டேன். சட்டென்று என் பார்வை அந்த அம்மாளுடைய இரண்டாவது பிள்ளையின்மேல் விழுந்ததும் எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. ஓடியே வந்து விட்டேன்.

நடந்ததைக் கேட்டுவிட்டு, அப்பாவும், அம்மாவும் என்மேல் எரிந்து விழுந்தனர். “கல்யாணம் ஆகிப் புக்ககம் போய், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாராகும் வயதாகிவிட்டது. அவ்வளவு வயதான அம்மாளிடம், அதுவும் அண்ணனும், தம்பியுமாக இரு பிள்ளைகளும் எதிரில் இருக்கிறபோது, அப்படிப் பேசலாமா? வேறு யாராவது இருந்தால் உன்னை அவமானப் படுத்தியிருப்பார்களே! அவர்கள் பெருந் தன்மை யாருக்கு வரும்? பத்மாவுக்குத்தான் அதிர்ஷ்டமில்லை! இளையவனுக்காவது உன்னைக் கொடுத்துவிடலாம் என்று எண்ணியிருந்தேனே! என் ஆசையிலும் மண்ணைப் போட்டுவிட்டு உன் வாழ்க்கையையும் குட்டிச்



சுவராக்கிக் கொண்டு விட்டாயேடி, அசட்டுப் பெண்ணே!'' என்று அம்மா அழுதாள்.

ஆத்திரத்தில் சிதறவிட்ட வார்த்தைகள், எவ்வளவு பாதகத்தை இழைத்துவிட்டன?

நடந்த விஷயத்தை அக்காவிடம் சொல்லி, அழுதேன். என் தாய், தந்தையரைவிட என் மனதை அவள் நன்கு அறிவாள். காலனைத்திலுல் அவள் படும் மனவேதனையை நன்கு நான் அறிவேன். அன்பும், ஆதரவும் பொங்க என் தலையை வருடினாள். "எனக்குத்தான் பாக்கியமில்லை. உன்னையும் துரதிர்ஷ்டம் பிடிக்கணுமா? என்னைப் பார்த்து விட்டுப் போனவரது தம்பிக்கு உன்னைக் கொடுப்பதாகப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கின்றன. கொஞ்சத்தில் கெடுத்துக் கொண்டு விட்டாயேடி!'' என்று விம்மினாள். சிறு குழந்தைபோல், அவள் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதேன்.

அன்று மாலை. சுமார் நான்கு மணி இருக்கும். அம்மா, அப்பாவுடன் ஏதோ தர்க்கம் செய்து கொண்டிருந்தாள். பெண்ணைப் பெற்றவர்களுக்கு எவ்வளவோ கவலை!



கணவன்:—என் முத்தே, என் மரகதமே, மாணிக்கமே, என் வைரமே, என் வைடூரியமே, என் கோமேதகமே......!

மனைவி:— போதும், நிறுத்துங்கள்! வாயாலே சொல்லி என்ன பிரயோஜனம்? இப்பொழுது சொன்னதை யெல்லாம் வாங்கித் தாருங்கள்!

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாகப் பார்வதி அம்மாள், தன் மூத்த பிள்ளை ரகுவுடன் நுழைந்தாள். ஒருவேளை, நான் கோவிலில் நடந்துகொண்ட அதிகப் பிரசங்கித்தனமான நடத்தையைக் கண்டித்து, விசாரிக்குமாறு கூற வந்திருப்பார்களோ?

வந்ததும், வராததுமாகச் சொன்னாள் அந்த மாமி: "ருக்மணி! சுபமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்...... ரகுநாதனுக்குப் பத்மாவைப் பண்ணி வைப்பது என்று தீர்மானித்து விட்டேன். இன்றைக்கு முகூர்த்த நாள்; நிச்சயதார்த்தம் செய்து விடலாம். சீர், செனத்தி, வரதக்ஷிணை, நகை நட்டு என்று ஒன்றும் வேண்டாம். எல்லாம் எங்கள் பொறுப்பு......நான் முன்பு சொன்னதிலே தவறு ஏதாவது இருந்தால் மன்னித்து விடு, ருக்மணி!......'' என்று உள்ளம் தழுதழுக்கக் கூறினாள்.

அம்மா, அப்பா இருவரும் ஸ்தம்பித்து விட்டனர். திடீரென்று, எதிர்பாராத சந்தோஷ சமாசாரம் கேட்டதாலோ என்னவோ, அம்மா சற்று நிதானித்துக் கூறினாள்: "மாமி, உங்களுக்கு மிகவும் பெருந்தன்மையான உள்ளம். சரோஜா சிறிசு. கோவிலில் தாறுமாறாக உங்களிடம் பதில் சொன்னதை மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது. அவளை மன்னித்து விடுங்கள், மாமி'' என்று என்பொருட்டு மன்றாடினாள்.

"சரோஜா எனக்குச் சின்ன நாட்டுப் பெண்ணாக வரவேண்டியவள் என்று அப்போதே தீர்மானித்து விட்டேன். ஸ்ரீதரனுக்கும் பூர்ண சம்மதம். அன்றைக்கு அவளைப் பார்த்ததிலிருந்து ஒற்றைக் காலில் நிற்கிறான். உண்மையில், சரோஜா அவ்வாறு பேசியிருக்காவிடில், என் கண் திறந்திருக்காது, ருக்மணி!'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள் அந்த மாமி.

அவ்வளவு நல்ல மனது படைத்த அவர்களிடமா அப்படி நடந்துகொண்டேன்? அந்த அம்மாள் காலில் விழுந்து, "நான் சொன்னதை மறந்து விடுங்கள், மாமி! என்னை மன்னித்து விடுங்கள்......'' என்று துக்கம் நெஞ்சை அடைக்கக் கூறினேன்.

"போடி, பைத்தியமே! நீதாண்டி அம்மா என்னை மன்னிக்கணும். உன் அக்காவை நாங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டோம் என்ற மிதமிஞ்சிய வருத்தத்தில் அவ்வாறு கூறிவிட்டாய். அக்காவிடம் இவ்வளவு பாசம் இந்தக் காலத்தில் எல்லோருக்குமே இருக்குமா? இவ்வளவு நாள் எங்கள் மனது கொடித்திருந்தது. அதை உன் வார்த்தைகள் நிமிர்த்தி விட்டன. நீதான் கண்ணே, என்னை மன்னிக்கணும்!'' என்று கூறி, அன்புடன் என்னை அணைத்துக் கொண்டாள் அந்த அம்மாள்-இல்லை, என் மாமியார் ஸ்தானத்திலிருந்த அவர்.

என் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து வழிந்தது. அக்காவின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் ஆறாக வழிந்தோடியது.

பிழைக்கும் வழி

கௌஸல்யா

‘கூட’ ‘கட’ வென்ற சத்தத்துடன் சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது பம்பாய் எக்ஸ்பிரஸ். நடராஜனின் சிந்தனை அந்த வண்டியின் வேகத்துடன் போட்டியிட்டுக்கொண்டிருந்தது. ஆம், ஸ்ரீதரனைப் பற்றிய நினைவுதான். சென்ற தடவை நடராஜன் சென்னைக்கு வந்தபோது ஸ்ரீதரனைச் சந்தித்ததைப் பற்றித்தான்.

நடராஜனும் ஸ்ரீதரனும் கும்பகோணத்து வாசிகள். கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். பி. ஏ. படிப்பு முடிந்ததும் நடராஜனுக்குப் பம்பாயில் வேலை கிடைத்தது. அவன் பம்பாய் போய் விட்டான். ஆனால் சிறிது காலவரை உத்தியோகம் இன்றி இருந்த ஸ்ரீதரனுக்கு அப்போதுதான் அந்தப் புது யோசனை உதித்தது. அதில் வெற்றியும் காணலாம் என்பது அவன் நம்பிக்கை. உடனே அவன் ‘சாரதா மாட்ரி மோனியல் பீரோ’ என்று ஒரு ஸ்தாபனத்தைச் சென்னையில் ஏற்படுத்தினான். அதற்காக அவன் ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். பல குமாஸ்தாக்களும் பியூன்களுமாக ஆபீஸ் அமர்க்களப்பட்டது. வாசலில் ஒரு பெரிய போர்டு தொங்க விடப்பட்டது.

ஆபீஸில் இரண்டு ரிஜிஸ்டர்கள் ஏற்பட்டன. ஒன்றில் கல்யாணமாகாத பெண்களின் ஜாதகம், வயது, படிப்பு, நிறம், முதலியனவும் பெண்ணுக்கு வரப் போகும் மாப்பிள்ளைக்கு அவர்கள் என்ன சீர் வகைகள் செய்வார்கள், அத்துடன் எப்படிப்பட்ட மாப்பிள்ளையை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பன போன்ற விஷயங்களும் குறிக்கப்பட்டிருக்கும். பக்கத்தில் பெண்ணுடைய போட்டோவும் சேர்க்கப்பட்டிருக்கும்.

அதைப் போலவே கல்யாணமாகாத வாலிபர்களின் ரிஜிஸ்தரில் பிள்ளையின் வயது, ஜாதகம் நிறம், படிப்பு முதலியனவும், எப்படிப்பட்ட பெண்ணை, எவ்வளவு சீர் வகைகளை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பனவும் குறிக்கப்பட்டிருக்கும். கூடவே பிள்ளையினுடைய போட்டோவும் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஆபீஸில் ஜோஸ்யர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் மூலம் ஸ்ரீதரன், எந்தப் பெண்ணினுடைய ஜாதகத்திற்கு எந்தப் பிள்ளையின் ஜாதகம் பொருந்தும் என்று பார்த்து இருவருடைய போட்டோக்களையும், ஜாதகங்களையும் மாற்றி அவரவர்களுடைய பெற்றோருக்கு அனுப்புவான். அவர்களுக்கு மனதிற்குப் பிடித்திருந்து, கடிதம் எழுதினால், மேற்கொண்டு கல்யாணத்துக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுத்து விடுவான். இரண்டு தரத்தாருக்கும் இவ்வாறு சிரமமில்லாமல் சௌகரியங்கள் செய்து கொடுத்து அவர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாகப் பெற்று வந்தான். இப்படியாக ஸ்ரீதரனின் ‘மாட்ரி மோனியல்’ காரியாலயம் எவ்வித இடையூறுமின்றி மிகவும் லாபகரமாக நடந்து வந்தது.

நடராஜன் பம்பாய் சென்று விட்டதால், அவனுக்கு ஸ்ரீதரனைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. சென்ற வருஷம் வந்த போது அவன் ஸ்ரீதரனை அகஸ்மாத்தாகத் தெருவில் சந்தித்தான். அவனுடைய விநோதத் தொழிலைப் பற்றித் தெரிந்து கொண்டான். அவன் சென்னையில் இருந்தபோது ஸ்ரீதரனுடனேயே தங்கி யிருந்தான். இப்போது மறுபடியும் இந்த வருஷமும் ஏதோ காரியமாகச் சென்னைக்கு வருகிறான். இப்போதும் ஸ்ரீதரனுடனேயே தங்குவது என்பது அவன் திட்டம்.

* * *

இவ்வளவு நேரமும் அலுக்காமல், சளைக்காமல் ஓடிவந்த பம்பாய் எக்ஸ்பிரஸ் சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து நின்றது. இவ்வளவு நேரமும் தன் சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்த நடராஜனும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டவனாய்த் தன்னுடைய பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு ரயிலை விட்டிறங்கினான். பிறகு ஒரு ரிக்ஷா பேசிக் கொண்டு தன்னுடைய நண்பன் ஸ்ரீதரனின் காரியாலயமிருக்கும் தெருவுக்குப் போகச் சொன்னான். நடராஜன் குறிப்பிட்ட தெரு வந்ததும், ‘‘எந்த வீட்டுக்குச் சாமி போவணும்!’’ என்றான் ரிக்ஷாக்காரன்.

போன வருஷம் வந்த ஞாபகத்தை வைத்துக் கொண்டு நடராஜன் அவனைத் தெருவின் மத்தியில் இருந்த ஒரு மஞ்சள் கட்டிடத்தண்டை நிறுத்தச் சொன்னான். ஆனால் என்ன ஆச்சரியம்! ஸ்ரீதரனின் காரியாலயத்தை அங்கு காணோம். போர்டும் காணவில்லை. நடராஜனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. தெரு மாறி வந்து விட்டோமோ என்ற சந்தேகத்துடன் நன்றாகப் பார்த்தான்.

நடராஜன் ஒன்றும் சொல்லாமலிருப்பதைக் கண்டு ரிக்ஷாக்காரன் ‘‘எந்த வூடு சாமி! சொல்லுங்க’’ என்றான்.

அந்த மஞ்சள் கட்டிடத்தை உற்றுப் பார்த்தான் நடராஜன். முன்பு ஸ்ரீதரன் இருந்த இடம் போலவேதான் இருந்தது. ஒரு சமயம் போர்டைப் புதுப்பிக்கக் கொடுத்திருப்பானோ என்று எண்ணிய நடராஜன் ரிக்ஷாவைப் பங்களாவுக்குள் கொண்டு போகச் சொன்னான்.

சந்தேகத்துடனேயே வண்டியை விட்டு இறங்கினான் நடராஜன். இதற்குள் வாயிற் பக்க அறையிலிருந்து ‘‘அட! நடராஜனா! ஏது இவ்வளவு தூரம்! உள்ளே வா’’ என்று யாரோ அவனை வரவேற்பது கேட்டது. ஸ்ரீதரன்தான் அவனை வரவேற்று உபசரித்தான்.

‘‘என்னப்பா ஸ்ரீதர்! உன் காரியாலயத்தைத் தேடித் தேடி அலைந்து கால் கடுத்து விட்டது. ஆமாம்! எங்கே உன் ஆபீஸ்! வாசலிலே ஒரு போர்டு தொங்கியதே! அதைக் காணோமே’’ என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

‘‘அதுவா! எல்லாம் சாவகாசமாகச் சொல்லுகிறேன். இப்போ முதலில் நீ காப்பி சாப்பிடு’’ என்று சொல்லி ‘‘சரோ! காப்பி கொண்டு வா!’’ என்று உள் பக்கமாய்த் திரும்பி உத்தரவிட்டான் ஸ்ரீதரன். நடராஜனுக்கு ஒரு முறை தூக்கி வாரிப் போட்டது. சரோ யார் என்று அவனுக்குப் புரியவில்லை. அதற்குள் யாரோ ஒரு பெண் காப்பி கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்து



"ஸார், உங்களுடன் ஒரு மணி நேரம் பேசிக்கொண் டிருந்ததில் எனக்கு எவ்வளவு நிம்மதியா யிருக்கிறது தெரியுமா? நான் இங்கே வந்த போது எனக்கு இருந்த தலைவலி கூட எங்கேயோ பறந்தே போய்விட்டது!"

"எங்கேயும் பறந்து போய்விடவில்லை, ஸார்! என் தலைக்குள்ளே தான் புகுந்துகொண் டிருக்கிறது!"

விட்டுப் போனுன். அவனைப் பார்த்த நடராஜனுக்கு இன்னும் குழப்பம் மேலிட்டது.

'நாம் போகும் வரை ஸ்ரீதரனுக்கு மணமாகவில்லை. போன பிறகும் ஆனதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க இவள் யார்!'—விவரம் புரியாமல் தவித்தான் நடராஜன்.

நடராஜனுடைய தடுமாற்றத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்ட ஸ்ரீதர், "என்னப்பா! இது யார் என்று பார்க்கிறுயா! என்னுடைய மனைவி தான். மூன்று மாசத்துக்கு முந்திதான் கல்யாணம் நடந்தது" என்றுன்.

"மூணு மாசத்துக்கு முந்தியா! எனக்குக்கூடச் சொல்லவில்லையே நீ!" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் நடராஜன்.

"அது ஒரு பெரிய கதையப்பா. மாடிக்கு வா. எல்லாம் சாவகாசமாகச் சொல்கிறேன்" என்று தன் நண்பனை மாடிக்கு அழைத்துப் போய் தன் கதையைக் கூறத் தொடங்கினுன்:

"ஆறு மாதத்துக்கு முந்தி ஒரு பெண்ணினுடைய ஜாதகம் எனக்கு வந்தது. அதுக்கேற்றுற்போல ஒரு பிள்ளையின் ஜாதகத்தைத் தேடினேன். ஆனல் எவ்வளவு தேடியும் அதற்குப் பொருத்தமான ஜாதகம் அகப்படவே யில்லை. இதுவரை எவ்வளவோ கல்யாணங்க ளெல்லாம் எங்களாலே நடந்திருக்கும் பொழுது, இது மாத்திரம் எப்படி முடியாம லிருக்கும் என்று எங்களுக்குப் புரியவில்லை. பெண்ணினுடைய அப்பாவோ அதற்குள்ளே பத்து தரம் வந்து கேட்டுவிட்டுப் போய்விட்டார். கடைசியில் இதுக்கேற்ற ஜாதகம் கிடைக்கவில்லை என்று சொல்லி விட அவர் வீட்டுக்குப் போனேன்.

"பெண்ணினுடைய அப்பா என்னை ரொம்ப தடபுடலாக உபசரித்தார். மெள்ள நான் விஷயத்தைச் சொல்லி ஜாதகத்தை அவர் கிட்டே கொடுத்து, அந்தப் பெண்ணின் கல்யாணத்தை முடித்து வைக்க முடியாததற்கு வருத்தப்படுவதாகச் சொன்னேன். அவர் கொஞ்ச நாழிகை பேசாமலிருந்தார். திடீரென்று என்ன நினைத்துக்கொண்டாரோ 'தயவுசெய்து நான் ஒன்று கேட்கிறேன். தவருக நினைத்துக் கொள்ளக் கூடாது என்று ஆரம்பித்தவர் 'உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதோ!' என்று இழுத்தார்.

"நான் கொஞ்சங்கூட இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. மெதுவாக நான் 'இல்லை' என்று சொன்னேன். உடனே அவர் 'உங்கள் ஜாதகம் இருந்தால் தயவு செய்து அதைக் கொடுங்களேன்' என்றுர். அப்போது அந்தப் பக்கமாக யாரோ போகிற மாதிரி இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். ஒரு அழகான அப்ஸரஸ் நின்று கொண் டிருந்தாள். அதற்குள்ளே அவர் 'சரோ! டிபன் காப்பி கொண்டு வா' என்றுர். அவள் உடனே என் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாக உள்ளே ஓடி விட்டாள். உன்னிடம் சொல்வதற் கென்ன! நிஜமாகவே எனக்குச் சரோஜவை ரொம்பப் பிடித்துவிட்டது. உடனே அவளுடைய அப்பாவிடம் சம்மதம் என்று தலையை ஆட்டி விட்டேன்.

"எங்கள் இரண்டு பேர் அதிர்ஷ்டம் ஜாதகம் பொருந்திப் போச்சு. கூடிய சீக்கிரத்திலேயே விவாகம் நடந்து விட்டது" என்று சொல்லி முடித்தான் ஸ்ரீதர்.

இது வரை அவன் சொல்வதை மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த நடராஜன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போய் விட்டான்.

"உண்மையாகவே இது ஒரு ஆச்சரியமான, அதிசயமான கல்யாணம் தான்" என்ற வார்த்தைகள் வெகு வேகமாக அவன் வாயிலிருந்து வெளி வந்தன. திடீரென்று அவன் ஏதோ நினைத்துக் கொண்டவன் போல், "ஆமாம் ஸ்ரீதர்! உன் ஆபீஸ் இப்போ எங்கே இருக்கு!" என்று கேட்டான். "கொஞ்சம் இரு" என்று திரும்பவும் ஆரம்பித்தான் ஸ்ரீதர்.

"கல்யாணம் முடிந்து இரண்டு மாசம் கழிந்து ஒரு நாள் திடீரென்று என்னுடைய 'மனைவி' 'இது என்ன தொழில் எனக்கு என்னமோ இது பிடிக்கவில்லை. இந்தத் தொழில் ஆரம்பித்த வேளை நமக்கு என்னமோ விவாகம் நடந்து விட்டது. இனிமே இதை நிறுத்திவிட்டுப் புதிதாக குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் வியாபாரம் ஆரம்பித்தால் என்ன!' என்று கேட்டாள்.

"'ஏன் சரோ அப்படி! அது என்ன வியாபாரம்!' என்று கேட்டேன்.

"'ஏனென்றல் முதலிலே நீங்க ஜாதகம் பார்த்து கல்யாணம் செய்து கொண்டவர்களுக் கெல்லாம் இத்தனை நாளைக்குக் குழந்தைகள் பிறந்திருக்கும். அவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினல் அவர்கள் கட்டாயம் நம்மிடமே வாங்குவார்கள். நமக்கும் நன்றாக விற்பனையாகும்' என்று சொன்னுள். எனக்கும் இந்த யோசனை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. அதனலேதான் நான் அந்தத் தொழிலை நிறுத்தி விட்டுப் புதுத் தொழிலை ஆரம்பித்து விட்டேன். என் மூலமாக மணமானவர்கள் எல்லோரும் வந்து இங்கேதான் பொம்மைகள் வாங்கிக் கொண்டு போகிறுர்கள். இப்பொழுதும் எனக்கு நல்ல லாபம்தான்" என்றுன் ஸ்ரீதர்.

"ஸ்ரீதர்! நீதான் புதிது புதிதாக எல்லாம் ஆரம்பிக்கிறேன்னு பார்த்தால் உன் மனைவி உனக்கு மேலே இருக்காளே! சரியான ஜோடிதான்" என்று உற்சாகத்துடன் சொன்னுன் நடராஜன்.

* * *

பம்பாயை நோக்கி பம்பாய் எக்ஸ்பிரஸ் ஓடிக் கொண்டிருந்தது. நடராஜனின் சிந்தனை இப்பொழுதும் ஸ்ரீதரனைப் பற்றியேதான். அவனைச் சுற்றி ஏராளமான குழந்தைகள் விளையாட்டுச் சாமான்கள் குவிந்து கிடந்தன. "என்ன ஆச்சரியமான தம்பதிகள். என்னிடமே நூறு ரூபாய்க்கு வியாபாரம் செய்து விட்டார்களே. இதல்லவோ பிழைக்கும் வழி" என்று எண்ணி எண்ணி அவன் வியந்து கொண்டிருந்தான்.

தி பாலூஸேரி பெனிபிட் சிட் பண்டு லி-ட்.

(இந்தியாவில் இணைக்கப்பட்டது)

நெ. 3, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ் - 5

போன்: 85834] :: [தந்தி விலாசம்: "EVERMANS"

மாதச் சீட்டு

ஆரம்பிக்கும் தேதி 12-1-52 ★ ஏலத் தேதி 19-1-52

10-12-51 ஆரம்பமான எங்கள் சீட்டுக்கு தேவைக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் சேர்ந்திருக்கிறபடியால் நேயர்களின் சௌகரியத்திற்காக இன்னொரு புதிய சீட்டு ஆரம்பித்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இப் புதிய சீட்டு 12-1-52 அன்று ஆரம்பமாகிறது.

சீட்டு விவரம் வருமாறு:

B	கிளாஸ் டிக்கெட்,	ரூ.	2500/-	மாதம் ரூ.	100/-
C	,, ,,	ரூ.	1250/-	,, ரூ.	50/-
D	,, ,,	ரூ.	625/-	,, ரூ.	25/-
E	,, ,,	ரூ.	500/-	,, ரூ.	20/-
F	,, ,,	ரூ.	375/-	,, ரூ.	15/-

ரூ. 20க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாங்குகள்மேல் செக்குகள் பெற்றுக்கொள்ளுவோம். இச்சீட்டில் சேர விரும்புபவர்கள் முழு விவரத்திற்கும் எங்களுக்கு எழுதி சீக்கிரம் இந்த சீட்டில் சேர்த்து கொள்ளவும்.

(போர்டாரின் உத்தரவுபடி)

எம். வி. சுப்ரமணியம்,
மானேஜிங் டைரக்டர்

இருமல், உபாதையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி இவை மூன்றே நிமிஷங்களில் அகற்றப் படுகின்றன.

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா! அதிகமாக இருமுவதால் பிராணாவஸ்தையாக இருக்கிறதா! பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் சிற்சில உணவுகளையும் உட்கொள்ள முடியவில்லையா!

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ ஓர் புதிய நம்பிக்கையை அளிக்கும். மயக்க மருந்து, புகை பிடித்தல், இஞ்சக்ஷன், ஆட்டோமைஸர் இவை தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின்போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக அகன்றுவிடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி கபத்தைக் கரைத்து சிரமம் இன்றி ஸ்வாஸத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவிலேயே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 ஆண்டுகளாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக மிஸ்டர் ஜே.ஆர். இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அத்தொந்தரவே அவருக்கு மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ முதல் வேளை சாப்பிட்டதும் நேரடியாக இரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் கீழ் மெண்டாகோ உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ சாப்பிட்ட பின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் காலிப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறு நாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்கு நல்ல பாதுகாப்பை அளிக்கிறது.

Mendaco
மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை அறவே அகற்றுகின்றது



துருக்கி—5

சகேரியா நதிக்கரையில் நடந்த யுத்தத்துக்குப் பின் இரு கட்சியைச் சேர்ந்த துருப்புகளும் சோர்வுற்றதால் சில மாதங்கள் வரையில் போர் நின்றிருந்தது. எனினும் இந்த இடைக்காலத்தில் கெமால் பாஷா வானாவிருக்கவில்லை. தமது படைகளைப் பலப்படுத்துவதில் முனைந்திருந்தார். இரேக்கர்களைத் தமது நாட்டிலிருந்து விரட்டவும் தகுந்த முஸ்தீபுகளைச் செய்து வந்தார்.

ஆனால், துருக்கியுடன் போரை ஆரம்பித்தால் அதற்கு நிச்சயமாக ருஷ்யாவின் ஆயுத உதவி கிடைக்கும் என்பது பிரிட்டிஷாருக்குத் தெரியும். நிலைமை அவ்வளவு தூரம் முற்றுவதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாதென்று அவர்கள் கருதினர்.

துருக்கியின் கோரிக்கைகளை யெல்லாம் பிரிட்டிஷார் அங்கீகரித்ததால் துருக்கிக்கும் பிரிட்டனுக்கும் ராஜி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, துருக்கியில் மீதியிருந்த கிரீஸ் துருப்புகளை யெல்லாம் வாபஸ் செய்து தொன்னும்படி இரேக்க சர்க்காரை வற்புறுத்

வில்லை. கர்ஸன் மேஜை மீது எத்தனை தடவை ஓங்கிக் குத்தினாலும் எவ்வளவு உரக்கக் கத்தினாலும், இயற்கையில் சிறிது செவிடான இஸ்மெத் பாஷா அதெல்லாம் தன் காதில் விழாதது போல் சிரித்துக் கொண்டே பதில் அளித்து வந்தார். எனவே, கடைசியில் தம்முடைய முயற்சி எதுவும் பலிக்காமல் லார்டு கர்ஸன் வெறுங்கையுடன் இங்கிலாந்துக்குத் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

எனினும் பிரிட்டிஷார் லாசேன் மகாநாட்டைக் கைவிடவில்லை. மறுபடியும் வேறு ஒரு பிரதிநிதியை அனுப்பினார்கள். அம் மகாநாட்டில் துருக்கியின் கோரிக்கைகள் ஒன்றைத் தவிர மற்றவை யாவும் அங்கீகரிக்கப்பட்டன. மோசூல் மாகாணப் பிரச்னை மாத்திரம் அந்த மகாநாட்டில் தீரவில்லை. கடைசியில் 1923 ஜுலை மாதம் லாசேன் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

துருக்கியின் சுதந்திரத்துக்காகப் போராடிய கெமால் பாஷாவின் வெற்றியும், பிறநாட்டில் ஆதிக்கம் செலுத்த விரும்பிய கிரேக்கர்களின் தோல்வியும் பாரத மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அப்போது பிரிட்டிஷாரால் சிறைப்பட்டிருந்த இந்திய தேச பக்தர்கள் மேற்படி வெற்றியைச் சிறைகளில் குதூகலமாகக் கொண்டாடினர். அவ்வமயம் லக்ஷ்மணபுரியில் சிறையில் இருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய தலைவர்களும் சிறையை அலங்கரித்துத் துருக்கியின் வெற்றியைக் கொண்டாடினார்கள்!

மகத்தான வெற்றி பெற்று காஜியாக அதாவது வெற்றி வீரராகத் திகழ்ந்த கெமால் பாஷா, யாரும் அசைக்க முடியாதவாறு துருக்கியின் சுதந்திரத்தை மேலும் மேலும் உறுதிப்படுத்துவதில் முனைந்தார்.

கெமால்பாஷா தாம் அடைந்த வெற்றி காரணமாக மமதை கொள்ளவில்லை. மறுபடியும் துருக்கி சாம்ராஜ்யத்தை அமைக்கவேண்டும் என்று ஆசைப்படவில்லை. துருக்கி சாம்ராஜ்யத்திலிருந்து விலகிய நாடுகளின் விஷயத்தில் சிறிதும் தலையிட விரும்பவில்லை. அரேபியா, ஈராக், பாலஸ்தீனம், சிரியா முதலிய அண்டை நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்தவும் அவர் விரும்பவில்லை.

துருக்கியர்களுக்குச் சொந்தமான, துருக்கியர்கள் வசிக்கும் துருக்கி தேசம் விடுதலை பெறவேண்டும் என்ற ஒரே லட்சியமே கெமால்பாஷாவின் மனதை ஆட்கொண்டிருந்தது. பிற நாட்டு விவகாரங்களில் துருக்கி தலையிடக்கூடாது, துருக்கி விவகாரங்களிலும் பிறநாடுகள் தலையிடக்கூடாது;— இதுதான் கெமால்பாஷாவின் முக்கியமான கொள்கை.

இந்தக் கொள்கை, துருக்கியைக் கண்டு பயந்து கொண்டிருந்த அண்டை நாடுகளுக்குத் திருப்தியையும் நம்பிக்கையையும் கொடுத்தது.

துருக்கியில் கெமால்பாஷா சாதித்த மற்றொரு அற்புதமான சாகஸம் சரித்திரப் பிரசித்தி பெற்றது.

அதாவது பல தலைமுறைகளாக, பல நூற்றாண்டுகளாக துருக்கியில் லட்சக் கணக்கான கிரேக்கர்கள் வசித்து வந்தார்கள். கிரேக்கர்களால் சகிக்க முடியாத கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளான துருக்கியில் லட்சக்கணக்கான கிரேக்கர்கள் இருப்பதன் மூலம் எதிர்காலத்தில் கலகங்களும் பல விபரீதமான பிரச்னைகளும் எழலாம் என்று கெமால்பாஷாவுக்குத் தோன்றியது.

அத்தகைய பிரச்னைகளுக்கு இடம் கொடுப்பது துருக்கிக்கு ஆபத்தாக முடியலாம் என்றும் அவர் கருதினார்.

கல்யாணம் பண்ணியும்...



மனைவியின் சீர்

புஷ்யன்

சேகரன் தன் மனம் விரும்பிச் சாவித்திரியை மணந்துகொண்டான். எத்தனையோ பெண்களை நேரில் போய்ப் பார்த்து ஏதும் பிடிக்காமல் கடைசியில் சாவித்திரியின் அமித அழகில், அவளுடைய கண்களின் ஒளியில், அவளுடைய மதுரமான குரலில் மயங்கி விட்டான். அவள் நன்றாகப் படித்தவள். ஆனால் அவளுடைய பணிவான குணத்தை அவன் பார்வையிலேயே கண்டு கொண்டான். உடனே அவளைத் தேர்ந்தெடுத்து விட்டான். அன்று முதல் அவனுடைய உள்ளத்தில் அவள் குடிகொண்டு விட்டாள்.

ஒரு சுபமான நாளில் சாவித்திரியின் மெத்தென்ற கைகளைத் தன் கைகளுடன் இணைத்துக் கொண்டான். அதிலிருந்து அவனுடைய வாழ்க்கையே புதிதாக மாறிவிட்டது.

ஒரே நாள்தான். அதிலும் மணவறையில் கலியாணத்தின் போதுதான், அவன் அவளுடன் மௌனமாக உறவாடியதெல்லாம்.

கலியாணம் முடிந்த அடுத்த நாளே ஊருக்குத் திரும்பி விட்டார்கள் அவனும், மற்றவர்களும். புது மாட்டுப் பெண்ணை வீட்டுக்கு அழைத்து வர முடியாமல் போய்விட்டது. அவர்களுடைய ஊர் கோவில் உற்சவத்துக்குக் கொடியேற்றி விட்டதால் உற்சவம் முடிந்து கொடியிறக்கும் வரை சாவித்திரியை அனுப்பக் கூடாதென்று சொன்னார்கள். அதனால் சாவித்திரியை அவள் வீட்டிலேயே விட்டுவிட்டு வரவேண்டியிருந்தது.

சாவித்திரிக்கு அவன் தான் முதலில் கடிதம் எழுதினான். மனத்தில் தோன்றியதை யெல்லாம் எழுதினான். இன்ப எண்ணங்களைப் பற்றி எழுதினான். அவளிடம் அவன் எதிர்பார்க்கும் வாழ்க்கையைப் பற்றி, அவன் திட்டமிட்டிருக்கும் வாழ்வைப் பற்றி, இன்னும் என்னென்னவோ 'பைத்தியக்காரத்தனமான' எண்ணங்களைக் காதலர்களின் பாஷையில் தன் உள்ளத்தைத் திறந்து காட்டி எழுதினான். ஒரு நாள் விட்டு ஒருநாள் கடித மழை பொழிந்தான். அவளும் அவனுக்குச் சளைக்காமல் அதிக பக்கங்கள் கொண்ட கடிதங்களை எழுதினாள். அவனுடைய கொள்கைகள், எண்ணங்கள் யாவற்றுக்கும் அவள் பக்க பலமாக உறு துணையாக நின்று கை கொடுத்து உதவி, அவன் இட்ட ஏவல்களை யெல்லாம் செய்து முடிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தாள்.

சேகரன் தன் அதிருஷ்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். அவளுடைய கடிதங்களைக் கண்டு அளவிலாப் பெருமை கொண்டான். தனக்கு எல்லாவிதங்களிலும் ஏற்ற மனைவி கிடைத்தாள் என்று உவகை யடைந்தான். அவளுடைய முத்து முத்தான எழுத்துக்கள், ஜீவரஸத்துடன் ஓடிய நடை, அதில் அவனுக்குத் தென்பட்ட காவியரஸம் எல்லாம் தனக்கு ஏற்பட்ட இப் பாக்கியத்திற்கு நிகர் யாரும் இல்லை என்று இறுமாந்திருக்கச் செய்தது. அவனுடைய கனவு நனவாகும் சமயம் வந்து விட்டது. ஆம், இன்னும் சிறிது காலத்தில் சாவித்திரி அவனுடைய மனைக்குள் புகுந்து விடுவாள். அப்புறம் உள்ளம், வீடு யாவும் எல்லையில்லா இன்பக் கோட்டையாக மாறிவிடும் என்று எதிர்நோக்கி யிருந்தான்.

ஆனால் இது என்ன! அவனுடைய கனவெல்லாம் தவிடுபொடியாகி விடுமா! எல்லாம் தெய்வத்தின் செயல் என்று எண்ணித்தான் மன ஆறுதல் அடைந்துவிட முடியுமா!

அன்று அவன் ஆபீஸில் வேலை செய்து கொண்டிருந்தான். 'ஸார், தந்தி' என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தான். தந்தியைக் கையில் வாங்கியதும் கைகள் நடுங்க 'யாருக்கு என்னவோ!' என்று அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். அடுத்த கணம்......

சேகரன் முகம் பேயறைந்தாற்போல் ஆகி விட்டது. வியர்வை வெள்ளமாகப் பெருகிற்று. மயக்கமுற்று விழாததுதான் பாக்கி. ஆபீஸ் கட்டிடம் சுழல்வதுபோல் இருந்தது. தந்தியில் அவனுடைய நேச 'மனைவிக்கு அபாயம். உடனே புறப்பட்டு வரவும்' என்றிருந்தது.

ரயில் பிரயாணம் முழுதும் அவன் வேண்டாத தெய்வம் இல்லை. எப்படியாவது அவள் சுகமடைந்து புன்முறுவலுடன் தன்னை எதிர்கொண்டழைக்க மாட்டாளா என்று ஆசை கொண்டான். அந்தத் தந்தியே பொய்யாக இருக்கக் கூடாதா என்றெல்லாம் நினைத்தான்.

அவளை இழந்து விடுவோமோ என்ற திகில் எப்படியோ அவனுடைய உள்ளத்தில் புகுந்து வாட்டிக் கொண்டிருந்தது.

கடைசியில் சாவித்திரியின் ஊர் போய்ச் சேர்ந்தான்.

சாவித்திரி அவனைக் கண்டு புன்முறுவல் பூக்க வாசற்படியில் வந்து வரவேற்கவில்லை. உள்ளே கட்டிலில் தன் சோகக் கண்களைக் காட்டிக் கண்ணீருடன் அவனைக் கண்டதும் அழுவதற்கும் அவள் காத்திருக்கவில்லை. அவனுடைய நம்பிக்கையை யெல்லாம் பஸ்மீகரம் செய்து கடைசி தடவையாக ஒரு வார்த்தை—இல்லை—ஒரு பார்வை கூடப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு விட்டாள்.

முதல் நாள் காலை கிணற்றடியிலிருந்து இடுப்பில் ஒரு குடமும், கையில் ஒரு குடமுமாக ஜலத்தைத் தூக்கிக்கொண்டு புழக்கடைப் படியேறிய போது கால் இடறி விழுந்து விட்டாள். படிக்கட்டருகில் பெரிய கல்லுரல் ஒன்று இருந்தது. அதனுடைய ஒழுங்குப்படுத்தப் படாத மூலையில் தலைபட்டு விட்டது. அவ்வளவுதான். ரத்தம் குபுகுபுவென்று வந்து இரண்டு அங்குலம் கத்தியால் வெட்டப்பட்டது போல் ஆகிவிட்டது. கடைசியில் டாக்டர் வந்து எவ்வளவு பாடுபட்டும் ரத்தப் பெருக்கை நிறுத்த முடியவில்லை. அவள் ஆவி பிரிந்து விட்டது.

அதற்குமேல் என்ன கூற இருக்கிறது! சேகரன் ஒரே பிரமை பிடித்தவன் போலாகி விட்டான். அவன் கண்முன் சாவித்திரியின் மாய உருவமே தென்பட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய உருவத்தை அவனால் மறக்க முடியவில்லை.

அவள் எங்கோ இருந்தாள். அவன் எங்கோ இருந்தான். இருவரும் பெரியோர்கள் நிச்சயித்தபடி கணவன், மனைவி என்று ஆயினர். அந்த ஒரு நாள்தான் அவளைப் பார்த்தான். ஆனால் அவள் தன் மனைவி என்ற உரிமை வந்ததும் அவன் அவளைத் தன் இதயக் கோயிலில் வைத்துப் பூஜை செய்தான். அவளையே தியானித்து வந்தான். இன்று அவள் மறைந்ததும் அவளை அவனால் மறக்கவே முடியவில்லை.

அவளைப் பிரிந்த துக்கம் தாள முடியவில்லை அவனுக்கு. அதனால் அவனுடைய தினசரி அலுவல்கள், ஆபீஸ் உத்தியோகம் இவற்றில் தாறு

மாறுதல்கள் ஏற்பட்டன. ஏதாவது ஒரு காரியம் செய்து கொண்டிருப்பான். சட்டென்று பிரமை படுடன் உட்கார்ந்து விடுவான். கண்களால் சுவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பான்.

அவனுடைய வீட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் அவனுடைய ஞாபகத்தை உண்டாக்கும் அவள் கொண்டு வந்த சீர்களில் ஏதாவது ஒன்று அவன் கண்களில் பட்டு அவனை மேலும் மேலும் வேதனைக்குள்ளாக்கியது. அவள் கொண்டு வந்த ஒவ்வொரு சீரும்—வெள்ளிப் பாத்திரங்கள், வெண்கலப் பாத்திரங்கள் — எல்லாம் ஒவ்வொரு சாவித்திரியாய் மாறி அவனை வேதனைப் படுத்தின. அவைகளையெல்லாம் பார்க்கும் போது அவனுடைய உள்ளத்தில் சாவித்திரியின் நினைவு இன்னும் அதிகமாகி அவனை வருத்தின.

அவனால் வீட்டிலேயே இருக்க முடியவில்லை. அவைகளைக் காணும் போதெல்லாம் அவன் மனச்சாட்சி ஏதோ கூற வாரம்பித்தது. "இந்தச் சாமான்கள் எல்லாம் உனக்கு எப்படி வந்தது! யாருக்காகக் கொடுத்தார்கள்! உன் சாவித்திரி கொண்டு வந்த சீர்வரிசைகள் எதற்காக! சாவித்திரியின் அருமைத் தாய் தந்தையர் தங்கள் சக்திக்கு மீறி ஏன் இவைகளை உன் வீட்டில் கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள்! அவர்கள் தங்கள் அருமையான பெண் அவைகளை வைத்து வாழ வேண்டுமென்று அல்லவா கொடுத்தார்கள்! ஆனால் என்ன பிரயோசனம்! அவள் வந்து ஒரு நாள் கூட இந்த சீர்களை வைத்துக் கொண்டு வாழவில்லையே! இந்த வீட்டு வாசற்படியைக் கூட மிதிக்கவில்லையே! அவள் மறைந்தபிறகு அவைகளை நீ வைத்துக் கொள்ள உனக்கு என்ன உரிமை!" என்றது. அவன் உள்ளுணர்ச்சி அதை ஒத்துக் கொண்டது. அந்தச் சாமான்களைத் திருப்பிக் கொடுப்பதன் மூலமாவது சாவித்திரியை மறக்க முடியுமா பார்க்கலாம் என்று நினைத்தான்.

அவன் தன் தாயாரைக் கூப்பிட்டான். "அம்மா! எல்லா வெள்ளிப் பித்தளைப் பாத்திரங்களையும் அவர்களுக்கே திருப்பி யனுப்பி விடு. இவைகளை நாம் வைத்திருப்பதற்கு உரிமையில்லை. இதைத் திருப்பிக் கொடுத்தால்தான் என்னால் நிம்மதியாக இருக்க முடியும்" என்றான்.

முதலில் அவனுடைய தாயாருக்கு அவன் சொல்வது ஒன்றும் பிடிபடவில்லை. அவன் விவரித்துச் சொன்னதும் அவளும் சம்மதித்தாள்.

* * *

சீர்களுடன் திரும்பி வந்த சம்பந்தியம்மாளைக் கண்டதும் சாவித்திரியின் பெற்றோர்களுக்கு ஒரு பக்கம் அடங்காத் துக்கமும், மற்றொரு பக்கம் ஆச்சரியமும் உண்டாயிற்று. "எங்கள் பெண் போய்விட்டால் நம் சம்மந்தமும் அற்று விட்டது என்று அர்த்தமா!" என்று அழுது கொண்டே கேட்டாள் சாவித்திரியின் தாயார். அவர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முதலில் மறுத்தார்கள். ஆனால் சேகரனுடைய தாயார் பிடிவாதமாக "உங்கள் பெண் ஆனக் கொடுத்த சாமான்களை நாங்கள் ஆள்வது சிறிதும் நியாயமில்லை. இவை உங்களைத்தான் சேர வேண்டும்" என்று திரும்பிக் கொடுத்துவிட்டாள்.

* * *

சாவித்திரியின் தங்கை ரங்கநாயகி இப்போது கல்யாணத்திற்குத் தயாராக இருந்தாள். அவளுக்குத் தகுந்த வரனைத் தேடினார்கள். அவர்களுடைய அதிர்ஷ்டம் நல்ல வரனாகவே கிடைத்தது. பையன் நன்றாக, கண்ணுக்கு லக்ஷணமாக இருந்தான். பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். நில புலனும் தஞ்சாவூர் ஜில்லாவில் இருந்தது. இன்னும் வேறென்ன வேண்டும்! கல்யாண காரியங்கள் எல்லாம் வேகமாக நடந்தன.

முதல் நாளிரவு ஜானவாசத்தின்போது எல்லோரும் அந்த இளம் தம்பதிகளைப் பார்த்து ரொம்பவும் ஆனந்தப் பட்டார்கள். பொருத்தமான நல்ல ஜோடி என்று புகழ்ந்தார்கள்.

ஆனால் அடுத்தநாள் காலை முகூர்த்தத்திற்கு மாப்பிள்ளையை அழைக்கப் போனபோது திடீரென்று கலாட்டா ஆரம்பமாகிவிட்டது. பிள்ளையின் தகப்பனார் "நாங்கள் என்ன ஏமாந்தவர்கள் என்று நினைத்து விட்டீர்களா! எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் இப்படிச் செய்வீர்கள்! நாங்கள் கேட்டபடி எல்லாம் வெகு தாராளமாகச் சீர் செனத்திகளைச் செய்வதாக ஒப்புக் கொள்ளும் போதே எனக்குச் சந்தேகமாக இருந்தது. ஏதோ விஷயம் இருக்கும் என்று 'அவள்' சொன்னாள். இப்போதல்லவா தெரிகிறது உண்மை. எல்லா சாமான்களும் பழையது. ஒன்று கூடப் புதிதாக வாங்கவில்லையாமே. இதோ நீங்கள் அனுப்பியிருக்கும் கூரைப் புடவை முதல், திருமாங்கல்யம் முதல் எல்லா பாத்திர வகையராக்களும் இந்தக் கல்யாணத்துக்கு வாங்கினதா! உண்மையாகச் சொல்லுங்கள்" என்று கர்ஜித்தார்.

ரங்கநாயகியின் தகப்பனார், "வீணாக ஆத்திரப் படாதீர்கள். நீங்கள் சொல்லுவதுபோல் எல்லாம் இந்தக் கல்யாணத்துக்கு வாங்கியதில்லைதான். ஆனால் அத்தனையும் புத்தம் புதிது. ஒருநாளேனும் கையாளப் படவில்லை" என்றார்.

"கையாளப்படவில்லையென்றால் புதிதாய் விடுமா! நீங்கள் உங்கள் பெரிய பெண் கல்யா



அம்மா :—முத்து, வந்த இடத்தில் சமர்த்தாய் இருக்க மாட்டாயா? சோபாவின்மேல் ஏறிக் குதிக்காதே! அப்புறம் இந்த வீட்டு அம்மாமி கோபித்துக் கொள்ளுவாள்!

முத்து :—இந்த வீட்டு அம்மாமி தான் இல்லையே! நான் குதிப்பதை எப்படிப் பார்க்க முடியும்?

அம்மா :— அம்மாமி இல்லாவிட்டாலும் கடவுள் பார்த்துக்கொண்டிருப்பார்!

முத்து :—அவர் பார்த்தால் பார்த்துக்கொள்ளட்டுமே! இது அவருடைய சோபா இல்லையே!



காரின் சொந்தக்காரர் :—சேற்றில் அகப்பட்டுக் கொண்ட காரை வெளியே எடுப்பதற்கு ரொம்ப உதவி செய்தாய்! இந்தா, ஒரு ரூபாய்! இப்படி அடிக்கடி நடக்கிறதா?

கிராமவாசி :—ஆமாங்க! இப்போது சேற்றில் அகப்பட்டுக் கொண்ட வண்டி இன்று ஆறாவது வண்டி!

காரின் சொந்தக்காரர் :—அப்படியானால் உனக்குப் பொழுதெல்லாம் இந்த வேலையே சரியாயிருக்குமே! உன் சொந்த வேலையை இரவில் செய்கிறாயா?

கிராமவாசி :—ஆமாங்க!

காரின் சொந்தக்காரர் :—என்ன வேலை?

கிராமவாசி :—இந்தச் சேற்றுக்குத் தண்ணீர் ஊற்றுவதுதான்!

ணத்துக்கு வாங்கினது அவ்வளவு சாமான்களும். அவள் அவைகளை அனுபவிக்காமல் அற்பாயுசில் காலமாகி விட்டாள். அந்தச் சீர்களையே மறுபடி உங்கள் இரண்டாம் பெண் கல்யாணத்திற்கு வைக்கலாமா! அது அசுபமல்லவா! இந்தக் கல்யாண சம்பந்தம் எங்களுக்குச் சமாதானப்படவில்லை!'' என்றார் பிள்ளையின் தகப்பனார்.

ரங்கநாயகியின் தகப்பனாரும், இன்னும் எவ்வளவோ பேரும் எத்தனையோ சமாதானம் கூறியும் சிறிதும் பயன்படவில்லை.

இறந்து போனவளின் சீர்களை மறுபடியும் வேறொரு கல்யாணத்துக்குச் சீராக உபயோகிப்பது அசுபமென்றும், மேலும், பழைய சாமான்களை வைத்து ஏமாற்றியதாகவும் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள் கல்யாணம் நின்றுவிட்டது.

நல்ல அதிர்ஷ்டமான ஜாதகம் ரங்கநாயகிக்குக் கிடைத்தது என்று பெருமிதமடைந்திருந்தது 'பட்' டென்று மறைந்து விட்டது. 'பாக்கியங்கள் என்ன செய்யும்! அவள் மறைந்து விட்டதால் இந்த ரங்கநாயகியும் இவைகளை வைத்து வாழ மாட்டாளா! ஏன் இந்த மூடத்தனமான எண்ணம்!' இதை ரங்கநாயகியின் தகப்பனாரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவருக்கு இந்த அடி பெரிதாகவே பட்டு விட்டது. பெரிய பெண் சாவித்திரி இறந்து போனதே பெரிய அடி. அவளை அவர் மிகவும் செல்லமாக வளர்த்து நல்ல இடமாகப் பார்த்து மணம் செய்து வைத்தார். ஆனால் அவள் தன் தகப்பனார் உள்ளம் குளிர வாழ்க்கையை நடத்தாமல் போய் விட்டாள்.

அவர் தன் இரண்டாம் பெண்ணுக்காவது நல்ல அதிர்ஷ்டம் இருக்கும் என்றுதான் நினைத்தார். அவர் சாவித்திரிக்குக் கல்யாணம் செய்வித்த போது அவளுக்கு எவ்வித குறையும் இல்லாமல்—தனக்குத் தன் தகப்பனார் அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்று எண்ணிக் கொள்ளக் கூடாது என்று தன் சக்திக்கும் மீறியே எல்லாவற்றையும் செய்து வைத்தார். அதுவுமன்றி முதல் பெண்ணின் கல்யாணமல்லவா! அதனால் அவருக்குக் கொஞ்சம் 'கண்ணும், மண்ணும்' தெரியவில்லை என்று சொன்னால் கூட பிசகில்லை. அதனால் இரண்டாவது பெண் ரங்கநாயகிக்கு எப்படி மணம் செய்விப்பது என்று பெருத்த கவலையாகி விட்டது. சாவித்திரி இறந்ததும் மேலும் சோக சிகரமாய் விட்டார்.

திடீரென்று சேகரனுடைய தாயார், சாவித்திரிக்குச் செய்து கொடுத்த அத்தனை சீர்களையும் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்ததும் அவருக்கு முதலில் 'இவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாமா!' என்று தோன்றினாலும், அவருடைய உள் மனம் நன்றி காட்டத்தான் செய்தது. ரங்கநாயகிக்கு மணம் செய்யும் கவலை அனேகமாகத் தீர்ந்து விட்டது என்றே எண்ணினார். அதன்படியே நல்ல இடமாகவே கிடைத்தது. என்ன கிடைத்து என்ன பிரயோசனம்! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே! அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் சந்தோஷம் என்பதே கிடையாதோ!

அந்தப் பழைய சீர்களுக்குப் பதில் புதிதாகவே அனைத்தும் செய்யத் தயாராயிருந்தும், யாரும் அவளை மணந்து கொள்ள முன்வரவில்லை. சீர் வகைகளைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்கள் கூட முதலில் ஏற்பாடு செய்த கல்யாணம் மணையில் உட்கார்ந்த பிறகு நின்று விட்டதால் அந்தப் பெண் அதிர்ஷ்டம் கெட்டவள் என்று தீர்மானித்தனர். இவ்விஷயத்தில் எல்லாப் பிள்ளை வீட்டுக்காரர்களும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

ரங்கநாயகி என்ன பாவம் செய்தாள்! என்ன குற்றம் செய்தாள்! அவளுக்கு இம்மாதிரி அபாக்கியம் ஏன்! இது என்ன உலகம்! என்று அவளுடைய தகப்பனார் வெதும்பிக் கொண்டிருந்தார்.

அன்று தபாலில் ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்ததும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துவிட்டார்.

"அன்புடைய மாமாவுக்கு, சேகரன் எழுதிக் கொண்டது. ரங்கநாயகியின் விவாகம் இன்னும் நிச்சயிக்கப் படாதது குறித்து என் மனம் வெகு நாட்களாக சிந்தித்துக் கொண்டிருந்தது. அந்த அறியாப் பெண்ணின் துரதிர்ஷ்டத்துக்குக் காரண கர்த்தாவாக நான் இருப்பது என் மனத்தை அறுத்துக் கொண்டிருக்கிறது. பழி ஓரிடம், பாவம் ஓரிடம் என்று அவள் என் செய்கை மூலம் துயரம் அடைந்து விட்டிருக்கிறாள். இது என் மனத்தை முன்னைவிட வாட்டிக் கொண்டிருக்கிறது. உங்களுக்குத் திருப்தியானால், ரங்கநாயகியும் ஒப்புக்கொண்டால் அவளை நானே மணந்து கொள்கிறேன். அவளுடைய சகோதரியின் சீர்களை அவளுடைய சகோதரிவீட்டிலேயே கொண்டு வந்து அவளே ஆண்டு கொள்ளட்டும். எனக்கும் ஒருவித ஆறுதலாக இருக்கும். உங்கள் பதிலை எதிர் பார்க்கிறேன். சேகரன்.''

இதற்கு ரங்கநாயகியின் தந்தை என்ன பதில் எழுதி யிருப்பார் என்று சொல்லவேண்டுமா!

அப்பொழுதே அவர் மனக்கண் முன்னால் சேகரனும் ரங்கநாயகியும் மலர்ந்த முகத்துடன் மணக்கோலத்துடன் காட்சியளித்துக் களிப்பூட்டினர்.

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

64. மார்புக் கூடே மறை!

சிலருடைய மார்புக்கூடு கோபுரம் போல மேடிட்டு இருப்பதைப் பார்த்திருக்கலாம். கால்ஷியம் அதாவது சுண்ணாம்புச் சத்துக் குறைவினாலும், சரியான போஷணை, தேகப் பயிற்சி இல்லாத உடல் என்று இவர்களைப் பார்த்ததும் தெரிந்து கொள்ளலாம். அதற்காக கால்ஷியம் மாத்திரைகளாக விழுங்குவார்கள். கால்ஷியம் ஊசிகளாகக் குத்திக் கொள்ளுவார்கள். காட்லிவர், ஷார்க்லிவர் போன்ற சாப்பிட சகிக்காத எண்ணெய்களையெல்லாம் சாப்பிடுவார்கள். இத்தனையும் சாப்பிட்டாலும் மார்புக் கூடு மறையாது. இதனால் எலும்புகள் பலப்படுமே தவிர, வளைந்த மார்பு எலும்புகள் நிமிராது. எலும்புகளை எண்ணி விடலாம். கோபுரம்போலக் குவிந்திருக்கும். இதை நீக்க வெறும் மருந்துகள் சத்துள்ள ஆகாரங்கள் மட்டும் போதாது. தகுந்த தேகப்பயிற்சியும் அவசியம். அது சரியானபடி மத்ஸ்யாசனத்தில்தான் அமைந்திருக்கிறது. மற்றும் சில ஆசனங்களிலும் இதற்கு மார்க்க மிருந்தாலும், மத்ஸ்யாசனத்தில்தான் அதன் பலன் பூரணமாய் அமைந்திருக்கிறது.

மத்ஸ்யாசனத்தைச் சற்று கவனித்துப் பார்த்தாலே அதன் தன்மை தெரியும். மார்பு விரிந்து பரவி இருப்பதையும், பக்கங்களில் இழுக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இந்த ஆசனத்தைப் பல மாதங்கள் தொடர்ந்து செய்து வந்தால் மார்புக் கூடு கட்டாயம் மறைந்து போகும்.

மார்புக் கூடுள்ளவர்களின் நுரை ஈரல்களுக்குத் தாராளமாய் விரியவும், பிராண வாயுவை ஏற்றுக் கொள்ளவும் முடியாது. க்ஷயரோகக் கிருமிகள் உள் நுழைந்தால், அவைகளுக்கு நல்ல புகலிடம் கிடைத்தமாதிரிதான். அவைகள் சுகமாய்க் குடியேறி நுரை ஈரலையே சாப்பிட்டுக்கொண்டிருக்கும்.


இந்தக் காலத்தில் உடை நாகரிகத்தினால் இந்த அலங்கோலக் கூட்டு மார்பை மறைத்து விடுகின்றனர். சிலர் எந்த நேரமும் சட்டை அணிந்தே இருப்பார்கள். சிலர் ஒன்றன்மேல் ஒன்றாக பாடி, ஷர்ட், கோட் அதுவும் போதாதென்று டை, இப்படி காற்று உள் நுழையாதபடி அணிந்து கொள்வார்கள். ஏதோ தான் லண்டனில் இருப்பதாக நினைப்பு. மார்பை வெளியில் காட்டுவது அநாகரிகம் என்று நினைக்கிறார்கள்.

பஞ்ச மகா யக்ஞங்களில் ஒன்றாகிய யாகம் வளர்த்தலைச் சிலர் விடாது கையாளுகின்றனர். இவர்களுக்கெல்லாம் யாக குண்டம் என்று ஒன்று தனியாய் வேண்டியதில்லை. வாயே யாக குண்டம். பீடி, சிகரெட், சுருட்டே சமிதைகள். இவர்களிடம் சிறைப்பட்டிருக்கும் நுரை ஈரலின் கதி என்னதான் ஆகும். அதற்கு வாய் மட்டும் இருந்தால் கதறும். ஆனால் அப்படிக் கதறுவதுதான் புகை இருமல் என்று சொல்லுவது. இதற்கு மருந்தே கிடையாது. கஷ்டப்பட்டு இருமுவார்கள். இவர்களுக்கு மருந்து, புகைப் பழக்கத்தை விட்டு விடவேண்டும். உடனே மத்ஸ்யாசனத்தையும் செய்ய வேண்டும்.

சிறுவர், சிறுமிகளில் இம் மார்புக் கூடு சிலருக்கு இருப்பதைப் பார்க்கலாம், இவர்கள் ஆரோக்யமாக இல்லை என்பதற்கு அந்த மார்புக் கூடுகள்தான் சாட்சி. குழந்தைகளின் இந்த நிலைமை பெற்றோர்களால் ஏற்படுவதுதான். அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு உடலிலுள்ள எலும்புச் சத்து நன்றாய் இருந்தால்தானே!

முன்பெல்லாம் சிறு வயதிலேயே பிராணாயாமத்தை, உபநயனம் நடத்தும்போதே சொல்லித் தருவார்கள். ஏழு எட்டு வயது சிறுவர்களும் இப் பிராணாயாமத்தைச் செய்யலாம். நாளடைவில் பிராணாயாமத்தை மறந்ததோடல்லாமல் சத்தை விட்டுச் சக்கையை மட்டும் கைப்பற்றினார்கள். சிலர் சந்தியா வந்தனம் செய்யும்போது கையை மூக்கின் வலது, இடது பக்கம் தொட்டு விட்டு உள்ளங் கைகளை மூடி ஜபிக்கிறார்கள். அப்படி மூக்கைத் தொடுவதில் அர்த்தமென்ன என்பதே

சிறு குழந்தைகளை மத்ஸ்யாசனம் செய்யப் பழக்குவதற்கு முதுகுக்கு அடியில் தலையணையைக் கொடுத்துப் படத்தில் உள்ளபடி செய்ய வேண்டும்.



அநேகருக்குத் தெரியாது. பிராணாயாமம் செய்வதாக பாவனை. பலன் பூஜ்யம்தான். வெறுங் கையால் வாயில் ஆகாரத்தை எடுத்துச் சாப்பிடுவதாகப் பாவனை செய்துவிட்டால் வயிறு நிறைந்துவிடுமா! அதைப் போல்தான் பிராணாயாமமும் நடைபெறுகிறது. இதில் இன்ன இனத்தார்தான் செய்ய வேண்டும் என்ற தப்பர்த்தத்தை வேறு நுழைத்து விட்டார்கள். அதனால் மற்றவர்கள் முற்றிலும் மறந்தார்கள். சந்தியாவந்தனம் செய்கிறவர்களும் சரிவரக் கடைப் பிடிக்காததினால் அதையும் மறந்தார்கள்.

இந்த மத்ஸ்யாசனத்தில் பிராணாயாமத்தின் பலன் உண்டு. பிராணவாயு நன்றாய் நுரை ஈரல்களுக்குப் பரவுவதால் பிராண சக்தி ஏற்படுகிறது.

காசம் அல்லது ஆஸ்துமா நோய் நீங்க புஜங்காசனத்தையும் சர்வாங்காசனத்தையும், மத்ஸ்யாசனத்தையும், மற்றும் சில ஆசனங்களையும் செய்து வர வேண்டும். எந்த ஆசனம் என்பது இனி வரும் ஆசனங்களில் காணலாம். மத்ஸ்யாசனம் இந்த ஆஸ்த்மாவுக்குத் துணை செய்கிறது. மற்றும் இருமல் குரல் சம்பந்தமான பல வியாதிகளுக்கும் இந்த மத்ஸ்யாசனம் குணமளிக்கிறது. இந்த ஆசனம் செய்பவர்களுக்கு இருமல் வராது.

கக்குவானுள்ள குழந்தைகளுக்கு இந்த ஆசனம் மிக்க பயனை அளிக்கும். படத்திலுள்ளபடி தலையணையை முதுகுக்கு அடியில் கொடுத்து, தலையைத் திருப்பி, உச்சி தரையில் படும்படி வைத்துக் கொள்ள வேண்டியது. வாய் மூடி இருக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்கு நாம் கிட்ட இருந்து செய்விக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு நிமிஷம் வீதம் இரண்டு அல்லது மூன்று தடவை செய்யலாம். குழந்தைகளுக்கு இருமல், சளி, ஜல தோஷம் முதலிய நோய்கள் ஏற்படாது.

சென்ற வாரம் வெளியாகி யிருந்த கட்டுரையில் ஒரு சிறு குழந்தை ஆசனம் போட்டுக்கொண்டிருந்த படங்களைப் பார்த்திருப்பீர்கள். இச் சிறு குழந்தை விடாமல் ஆசனம் செய்து வந்ததால் வாயினால் மூச்சு விடும் பழக்கம் நின்று விட்டதாக அந்தக் குழந்தையின் தகப்பனார் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் எழுதி யிருக்கிறார்.

சர்வாங்காசனம் செய்வதால் முதுகெலும்பின் மேல் பாகம் முன்னுக்கு வளைகிறது. அதனால் கழுத்து, மார்பு, இடுப்பு முதலியன சற்று வலிக்கும். சிரமமாய் இருக்கும். அதற்குப் பரிகாரமாக இம் மத்ஸ்யாசனம் செய்தால் சரியாய்விடும். இந்த ஆசனத்தில் கழுத்து மார்பு, கடுபாக எலும்புகள் பின்னுக்கு வளைவதால் அந்த எலும்புகளுக்குச் சாந்தி ஏற்படுகிறது.

க்ஷயம், காசம், இருமல் முதலியவைகள் இருக்கின்றவர்கள்தான் இந்த ஆசனம் செய்ய வேண்டுமென்பதில்லை. சாதாரணமானவர்களும் செய்து இம்மாதிரி நோய்கள் வராமல் தற்காத்துக் கொள்ளலாம். நோய் உள்ளவர்கள் செய்து நோயைப் போக்கிக் கொள்ளலாம். சர்வாங்காசனத்தைச் செய்பவர்கள் மத்ஸ்யாசனத்தைக் கால் பங்கு நேரம் கட்டாயம் செய்ய வேண்டும்.

இந்த ஆசனத்தை ஆண், பெண் எல்லா வயதினரும் செய்யலாம். கர்ப்பமான ஸ்திரீகள் மூன்று மாதங்கள் வரை செய்யலாம். வயிற்றில் ஏதாவது ஆபரேஷன் செய்யப்பட்டிருந்தால் ஆசனத்தில் தேர்ச்சியானவர்களிடம் கலந்து ஆலோசித்த பிறகுதான் செய்ய வேண்டும். (தொடரும்)

உடல் வலிமையுள்ள குதூகலமான குழந்தைகளுக்கு



உங்கள் குழந்தைக்கு கிளாக்ஸோ கொடுப்பதால் அவனுக்கு பலமுள்ள கைகால்களும், ஒழுங்கான பற்களும், திடமான சதையும் வளர உதவுகிறீர்கள். மிகவும் சிறந்த பசும்பாலிலிருந்து தயாரித்த கிளாக்ஸோவில் விடமின் 'டீ', அயம் மற்றும் ஆரோக்கியத்திற்கும், உடல் வலிமைக்கும் தேவையான சத்துக்கள் எல்லாம் சேர்க்கப் பட்டிருக்கின்றன. தேக ஆரோக்கியத்துடன் வளருவதற்கான உணவை அளிப்பதுதான், ஒரு தாய் தன் மகவுக்குச் செய்யக் கூடிய பேருதவி.



Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான பால் உணவு

கிளாக்ஸோ லெபாரட்டரீஸ் (இந்தியா) லிட்.. பம்பாய் • கல்கத்தா • மதராஸ்





நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?

ஆம்! தினமும் அவள் இருதடவை மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகிக்கிறாள். அவள் பற்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன பாருங்கள்.

மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை உங்களுக்கும் கூட வசீகரமான புன்னகையையும், வெண்மையான பற்களையும், இனிய சுவாசத்தையும் அளிக்கக் கூடியது. மக்ளீன் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்கள் ஈறுகளுக்கு வலுவளித்து அபாயகரமான புளிப்பு நீர்களை வாயிலிருந்து அகற்றி பற்களை வெண்ணிறமாக்கி, சொத்தை பிடிக்காமல் தடுக்கிறது— எல்லாம் ஒரே சமயத்தில் தான்.

சிறந்த பற்பசைதான் உங்கள் பற்களுக்கு நல்லது. எனவே இன்றே மக்ளீன்ஸ் உபயோகிக்கத் துவகுங்கள்.

இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!



MTY-2 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

கீல்வாதத்தினால் சித்திரவதைக்கு உள்ளானார்;





"க்ரூஷன்" சிகிச்சைக்குப் பிறகு

பூரணகுணம் அடைந்தார்

சமூக வாழ்வில் இவருக்குத் தோல்விதான். இவரது வியாபாரமும் மந்தமுற்றது. ஆனால் ஒரு முறை க்ருஷன் சிகிச்சைக்குப் பின்னர் பூரண குணம் அடைந்தார். அவரது கடிதமே அதை விளக்குகிறது :—

"பத்து மாதங்களுக்கு முன்னர் கீல்வாதத்தினாலும், நரம்பு வலிகளாலும் மிகுந்த அவஸ்தைப் பட்டேன். உடம்பெங்கும் வலியும், சில நாட்களில் படுக்கையினின்று எழுந்து வேலைக்குப் போக முடியாத படியும் இருந்தது. என்னை விசாரிக்க வந்த ஒரு நண்பன் "க்ருஷன்" உபயோகிக்குமாறு ஆலோசனை கூறினான். அவ்வாறே செய்ததில் வலிகள் நாளுக்கு நாள் குறைந்து வருவதை உணர்ந்தேன். அன்று முதல் தவறாமல் நான்தோறும் வேலைக்குப் போய் வருகிறேன். "க்ருஷனு"க்கு மெத்த வந்தனம்; நான் இப்பொழுது ஒரு புது மனிதனாகி விட்டேன். மிக்க சந்தோஷத்துடன் இதை ஒவ்வொருவருக்கும் சிபாரிசு செய்வேன்."—A.R.

குடல்கள் அடைபடாமலும், மூத்திர கோசங்கள் நன்கு இயங்குமாறு வைத்திருப்பதுமே, கீல்வாத சிகிச்சைக்கு முதற்படி. மூத்திரம் நன்கு வெளிச் செல்லுமாறு செய்வதும், மலமிளக்கியாயும் ஆன இருவிதத் தொழிலால் "க்ருஷன்" மேற் சொன்ன வேலைகளைச் சுலபமாகவும், அபாயமின்றியும் செய்கிறது. தேகத்திற்குக் கெடுதி விளைவிக்கும் விஷப் பொருள்கள், மூத்திர கோசங்கள் வழியாக அறவே வெளித் தள்ளப்படுகின்றன. இயற்கையாகவும் ஒழுங்காகவும் இயங்குமாறு குடல்கள் மெல்லத் தூண்டப்படுகின்றன. இவற்றின் பலனாக கீல்வாத வலிகளின் மறைவும், புத்துயிர் பெற்ற பலமும், இளமையும் உண்டாகின்றன.

இன்றே "க்ருஷன்" உட்கொள்ள ஆரம்பியுங்கள். சில நாட்களுக்குள்ளாகவே ஆச்சரியகரமான மாறுதல்களை உணர்வீர்கள். எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



AD. KSID. No. 17



அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'

Every year greater numbers of discriminating ladies turn to the regular use of OATINE beauty creams.

"Cream at night, snow by day, gives loveliness the Oatine way."


03



Oatine

Snow & Cream

Make sure seal is unbroken



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


இரம்மியமானது...
ஹிமாலயா
புக்கே
டாய்லட், டால்கம் பௌடர்களின்
இசைவான பரிமளம்
வாசனை மிகுந்த, நேர்த்தியான ஹிமாலயா புக்கே பௌடர்கள் உங்கள் அழகு பராமரிப்பிற்கு மிகவும் சிறந்தது. அவைகள் உங்கள் சருமத்திற்கு மிகவும் சாந்தியைக் கொடுக்கும். அவைகளின் நீடித்திருக்கும் பரிமளம் மலர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
Himalaya Bouquet
Himalaya Bouquet
TOILET POWDER
நேர்த்தியான
இரண்டு இராஸ்மிக் தயாரிப்புகள்
HBP. 9-X30 TM

REGD. No. M. 4392

Registered as a newspaper in Ceylon



EVM. 144-X30 TM